Tamil

Private circulation only

# THE SPOKEN WORD

உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து

# சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# பரலோகமும் நரகமும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# பரலோகம்

# அவர்கள் ஒரு மாளிகையை எனக்காக அங்கே கட்டிக்கொண்டிருக்கிறார்களே!

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

*ஒரு கூடாரமோ அல்லது ஒரு குடிசையோ, நான் ஏன் கவலைப்பட வேண்டும்?*

*அவர்கள் ஒரு மாளிகையை எனக்காக அங்கே கட்டிக்கொண்டிருக்கிறார்களே!*

*அவருடைய கருவூலப் பெட்டிகள் மாணிக்கங்களாலும், வைரங்களினாலும், வெள்ளியினாலும்,*

*பொன்னினாலும் நிறைந்திருக்கின்றன. அவர் சொல்ல முடியாத ஐஸ்வரியங்களை உடையவராயிருக்கிறார்.*

*செய்தி:* **எபிரெயர், ஏழாம் அதிகாரம் #1,** செப்டம்பர் 15, 1957, இந்தியானா, அமெரிக்கா

★★★★★

77. ஆபிரகாம் ஒரு கூடாரத்திலே வாழ்ந்து வந்தான். அவன் எல்லாவற்றிற்கும் சுதந்திரவாளியாய் இருந்தும் ஒரு சிறு கூடாரத்திலே ஜீவித்தான். ஆகவே "அது கூடாரமோ, கொட்டகையோ, நான் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்று ஒரு கவிஞன் பாடினது ஆச்சரியத்திற்குரியதாய் இல்லை. நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் எல்லாவற்றிற்கும் சுதந்திரவாளியாய் இருக்கிறீர்கள். ஏனெனில் தேவன் அவனுக்கு பூமியை கொடுத்திருக்கிறார். அதற்கு அவரே ராஜாவாய் இருக்கிறார். ஆகவே சந்திப்பின் நேரத்திலே நாம் அவருக்குள் இருந்து சர்வ வல்லமை மற்றும் இயற்கைக்கு மேம்பட்ட அற்புதங்கள் எல்லாவற்றிற்கும் சுதந்திரவாளியாய் இருக்கிறோம்.

***செய்தி:* காலத்தின் சந்திப்பு,** ஜனவரி 15, 1956, Jeffersonville, Indiana, USA

★★★★★

ஓ, அது மிகவும் அற்புதமான ஒரு காரியமாய் இருக்கப் போகிறதே! அதை இழந்து போக வேண்டாம்! அதை இழந்துபோக வேண்டாம். ஓ, தேவக் கிருபையினால், உங்களால் செய்ய முடிந்த அனைத்தும் செய்யுங்கள், மற்றவைகளை தேவன் பார்த்துக் கொள்வார்.

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

435 ஆகையால் அன்பாயிருங்கள். உங்கள் முழு இருதயத்தோடு கர்த்தராகிய இயேசுவினிடத்தில் அன்பு கூறுங்கள். எளிமையாயிருங்கள். எதையும் ஆலோசனை செய்து, அதன் அர்த்தத்தை அறிந்துகொள்ள ஒருபோதும் முயற்சிக்க வேண்டாம். தேவனுக்கு முன்பாக எளியவர்களாயிருங்கள். நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக ஆலோசிக்கின்றீர்களோ, அவ்வளவாக தேவனைவிட்டு புறம்பே செல்வீர்கள். பாருங்கள்? அவர் கூறுவதையே அப்படியே விசுவாசியுங்கள்.

இப்பொழுது, "அவர் எப்பொழுது வருவார்?" என்று நீங்கள் கேட்கலாம்.

436 அவர் ஒருக்கால் இன்றைக்கு வந்தாலும் பரவாயில்லை; அவர் இருபது வருடங்கள் கழித்து வந்தாலும் அதுவும் சரிதான். நான் இப்பொழுது அவரைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறவிதமாகவே அவரைப் பின்பற்றிக் கொண்டிருக்கப் போகிறேன். "வேறெங்காவது என்னை உபயோகிக்க நீர் சித்தம் கொண்டால், இதோ கர்த்தாவே, நான் ஆயத்தமாயிருக்கிறேன்." ஒருக்கால் உமது வருகை நூறு ஆண்டுகள் கழித்து இருந்தாலும் இருக்கலாம். "கர்த்தாவே, அது எப்பொழுது நிகழப்போகிறது என்று எனக்குத் தெரியாது. என் சந்ததியில் ஐந்தாம்

தலைமுறையிலுள்ளவர்கள் அதை ஒருவேளை காணலாம். ஆனால் எவ்வாறாயினும் நான் உம்முடன் சரியான பாதையில் நடக்க விரும்புகிறேன்." உம் வருகைக்கு முன்னர் நான் நித்திரையடைந்தால், அந்நாளில் நான் நிச்சயம் உயிரோடெழுவேன்.

437 அப்பாலுள்ள அந்த மகிமை ஸ்தலத்திற்கு சென்று வந்தேன்.. அந்த தேவனுடைய ராஜ்யத்தில் வயது சென்றவர் அனைவரும் வாலிப தோற்றம் கொண்டிருப்பார்கள். அவர்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்திருப்பார்கள். ஆண்களும் பெண்களும் வாலிப பருவத்தையடைந்து மிகவும் அழகாயிருப்பார்கள். அவர்கள் அங்கே அழகான வாலிபர்களாகவும், வாலிப ஸ்திரீகளாகவும் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் இனி ஒருபோதும் வயோதிகர்களாக முடியாது. அவர்கள் இனி பாவம் செய்வதில்லை. அங்கு பொறாமையோ அல்லது வெறுப்போ காணப்படுவதில்லை. ஓ, என்னே!

438 இப்பொழுது ஒலிநாடாக்கள் பதிவு செய்யப்படவில்லையென்று நான் எண்ணுகிறேன். நான் நான் இன்னும் மூன்று நான்கு நிமிடங்கள் உங்களிடம் பேசவிரும்புகிறேன். அவ்வாறு

பேசலாமா? (சபையோர், "ஆமென்" என்கின்றனர். ஆசி.] இப்பொழுது நான் கூறப் போவது தனிப்பட்ட விஷயமாகும். ஏனெனில் நாளை, நான்நான்... நாளைய ஆராதனை மிகவும் சிறந்ததாக இருக்கும். ஆகவே, நான் கூற விரும்புவதை இப்பொழுது கூறிவிடுவது மேலானதாகும் என்று நான் நினைக்கிறேன். இதை நமக்கென்று பிரத்தியேகமாகக் கூறுகின்றேன். நான்...

439 என் மனைவியாகிய மேடாவை (Meda) நான்-நான் நேசிக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். என் முதல் மனைவியை நான் அதிகமாக நேசித்ததன் காரணத்தால், நான் இரண்டாம் முறை விவாகம் செய்துக்கொள்ள விரும்பவில்லை. தேவன் விவாகம் செய்துக்கொள்ள கூறாமலிருந்தால், நான் இரண்டாம் முறை விவாகம் செய்துக்கொண்டிருக்கவே மாட்டேன். அவள் எவ்விதம் ஜெபிக்கச் சென்றாள் என்பதையும், நான் செய்தது என்ன என்பதையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். "நீ போய் அவளை விவாகம் செய்துகொள்," என்றும், நான் அதை எந்த நேரத்தில் செய்யவேண்டும் என்றும் தேவன் எனக்குச் சரியாகக் கூறியிருந்தார். அவள் மிகவும்

அருமையானவள், இன்றிரவு அவள் எனக்காக ஜெபித்துக்கொண்டிருக்கிறாள். இப்பொழுது அங்கு இரவு எட்டு மணி. அவள் ஒருவேளை இப்பொழுது ஜெபித்துக்கொண்டிருக்கலாம்.

440 இப்பொழுது கவனியுங்கள். ஒருநாள் மேடா என்னிடம் “பில் (Bill) பரலோகத்தைக் குறித்த ஒரு கேள்வியை நான் உம்மிடம் கேட்க விரும்புகிறேன்” என்றாள். நானும் “சரி. மேடா, அது என்ன?” என்றேன்.

அவள், “நான் உம்மை நேசிக்கிறேன் என்று நீர் அறிவீர்” என்றாள்.

441 நான் “ஆமாம்” என்றேன். நான் மேலே சென்று அவர்களைக் கண்டபிறகு இது நடந்தது.

அவள், “உங்கள் மனைவியாகிய ஹோப் (Hope) உங்களை நேசித்தாள் என்பதை நீர் அறிவீர்” என்றாள்.

நான், “ஆமாம்” என்றேன்.

442 அவள், “இப்பொழுது நான் பொறாமை கொள்வேன் என்று நினைக்கவில்லை. ஆனால் ஹோப் உங்களை நேசித்தாள்” என்றாள். அவள் தொடர்ந்து, “நாம் பரலோகத்திற்குப் போகும்போது...

அதாவது அவளை நீங்கள் அங்கு கண்டதாகக் கூறினீர்கள்” என்றாள்.

443 அதற்கு நான், “அவள் அங்கே இருக்கிறாள். நான் அவளை அங்கே இரண்டுமுறை கண்டிருக்கிறேன்” என்றேன். அவள் அங்கே இருக்கிறாள், என் வருகைக்காக அங்கே அவள் காத்துக்கொண்டிருக்கிறாள். ஆகவே நான் அங்கே சாரோனையும் (sharon) கண்டேன். நான் உன்னை இங்கே காண்பதுபோல அவளையும் அங்கே கண்டேன். நான் அவளை அங்கே கண்டேன். நான்... என்றேன்.

444 அப்பொழுது அவள், “நாம் அங்கு செல்லும்போது, எங்களில் யார் உங்கள் மனைவியாயிருப்பாள்?” என்று கேட்டாள்.

445 அதற்கு நான், “நீங்கள் இருவருமே. எனக்கு மனைவியென்று யாரும் இருக்கமாட்டார்கள். அதே சமயத்தில் நீங்கள் இருவருமே அங்கிருப்பீர்கள்” என்றேன்.

அப்பொழுது அவள், “என்னால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே” என்றாள்.

446 அதற்கு நான், “தேனே, இங்கே அமர்ந்துக்கொள். நான் ஒன்றை உனக்கு விளக்கிக் காண்பிப்பேன்” என்றேன். நான், “நீ என்னை

நேசிக்கிறாய் என்று நான் அறிவேன். நான் உன்னை எவ்வளவாய் நேசிக்கிறேன், மதிக்கிறேன், கனம் பண்ணுகிறேன் என்பதை நீயும் அறிவாய். இப்பொழுது உதாரணமாக, நான் நன்கு ஆடையணிந்து, டவுண்டவுடன் என்ற இடத்திற்கு செல்ல, அங்கு உண்மையாகவே ஒரு அழகான வேசி என்னைக் கட்டித்தழுவி, 'ஓ, சகோதரன் பிரான்ஹாம், நான் உம்மை மிகவுமாக நேசிக்கிறேன்' என்று கூறி, அவளுடைய கரத்தை என்மீது போட்டு கட்டித் தழுவ ஆரம்பித்தால், அப்பொழுது நீ என்ன நினைப்பாய்?" என்று கேட்டேன்.

அவள், "நான் ஒருக்காலும் அதை விரும்பமாட்டேன் என்றே நினைக்கிறேன்" என்று பதிலுரைத்தாள்.

447 நான் மேலும் அவளிடம், "நான் உன்னிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்; எனக்கும் கர்த்தராகிய இயேசுவுக்குமிடையே ஒருவரை மாத்திரம் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற பலப்பரீட்சை உண்டானால், அப்பொழுது நீ யாரைத் தெரிந்து கொள்வாய்?" என்று கேட்டேன். இது எங்கள் இருவருக்குமிடையே எழுந்த குடும்ப சம்பாஷணையாய் இருந்தது.

448 அவள் "கர்த்தராகிய இயேசுவை" என்றாள். "ஆம், பில், நான் உம்மை நேசித்தாலும், நாம் உம்மைவிட்டு, அவரைத்தான் தெரிந்துகொள்வேன்" என்றாள்.

449 நான் அதைக்கேட்டு, "தேவனே, உமக்கு நன்றி! இப்பொழுது நீ அதைக் கூற கேட்கவே நான் சந்தோஷமடைகிறேன்" என்றேன். மேலும் நான், "இப்பொழுது என்னைக் கட்டித் தழுவிய அதே வேசி இயேசுவண்டை வந்து, அவரைக் கட்டித் தழுவி, இயேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன் என்று கூறினால், அதைக்குறித்து நீ என்ன நினைப்பாய்?" என்று கேட்டேன்.

அதற்கு அவள், "அதைக்குறித்து நான் சந்தோஷப்படுவேன்" என்றாள்.

450 பாருங்கள், அது மாம்சப் பிரகாரமான அன்பிலிருந்து (Phileo) தெய்வீக அன்பாக (agapo) மாறுகின்றது. பாருங்கள்? அது மேலான அன்பு. பாருங்கள்? பரலோகத்தில் கணவன், மனைவி என்னும் நிலையும், குழந்தைகள் பெறுவதென்பதும் கிடையாது. அங்கு ஆண், பெண் இருவருக்குமிடையே காணப்படும் பாலினச் சுரப்பி வேறுபாடு இருக்காது. நாம் ஒரேவிதமாக இருப்போம். அங்கு இனச்சேர்க்கைக்குரிய

சுரப்பிகள் (glands) இருக்காது. பாருங்கள்? நீங்கள். ஆம், ஐயா இச்சுரப்பிகள் இல்லாதவர்களாய் உங்களைப் பாவனை செய்து பாருங்கள். பூமியின் ஜனத்தொகை அதிகரிக்க வேண்டுமென்று கருதியே நமக்கு இவை அளிக்கப்பட்டன. ஆனால் பரலோகத்தில் இச்சுரப்பிகள் இருக்கமாட்டா. இல்லை. அங்கு ஆண் சுரப்பிகளும் பெண் சுரப்பிகளும் இருப்பதில்லை.

451 ஆனால் தேவனுடைய சிருஷ்டிப்பின் வடிவம் ஆணுக்கும் பெண்ணுக்கும் உண்டாயிருக்கும். அது முற்றிலும் சரியாகும். அங்கு மாம்சப் பிரகாரமான அன்பு காணப்படுவதில்லை. எல்லாமே தெய்வீக அன்பாய் இருக்கும். பாருங்கள்? ஆகவே, மனைவியென்பவள் அழகான உருவமாய் இருப்பாளேயன்றி மனைவியென்றும் ஸ்தானத்தை வகிக்கமாட்டாள். அங்கே... மாம்சப்பிரகாரமான பாகம் என்பதே அங்கு இராது. பாருங்கள். அங்கே பொறாமைபட்ட ஒன்றுமே இல்லாததால், அங்கே பொறாமை என்பதே இருக்காது. அவ்விதமான காரியம் என்பதே அங்கு கிடையாது. அவ்விதமான ஒன்று உண்டு என்பதையே நீ ஒருபோதும் அறியாதிருப்பாய். பாருங்கள்? அங்கு அழகான

வாலிபனும், வாலிப ஸ்திரீயாக மட்டுமே இருப்பீர்கள்.

இதைக் கேட்ட என் மனைவி பில் இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. என்றாள்.

நான், “சரி” என்றேன்.

452 நான் சம்பவித்த ஒரு சிறு காரியத்தை உங்களிடம் கூற விரும்புகிறேன். இது ஒரு சொப்பனமாகும். நான் அப்பொழுது உறக்கத்திலிருந்தேன். நான் இதை இதற்கு முன்பு பகிரங்கமாக வெளியேக் கூறினதில்லை. ஒரு சிலருக்கு மாத்திரமே இதை நான் கூறியிருக்கிறேன். எனக்குத் தெரிந்த மட்டில் இதற்கு முன்பு நான் இதை பகிரங்கமாகக் கூறினதில்லை.

453 மேற்கூறிய தரிசனம் கண்ட ஒரு மாதத்திற்குப் பிறகு, நான் நான் ஒரு சொப்பனம் கண்டேன். அது நியாயத்தீர்ப்பு அல்ல. சபையானது நியாயத்தீர்ப்புக்கு, அதாவது மணவாட்டி நியாயத்தீர்ப்புக்குள்ளாவதில்லை என்று நான் விசுவாசிக்கிறேன். அந்த சொப்பனத்தில், பரலோகத்தில் கிரீடங்கள் அளிக்கப்படும்போது நான் அங்கு இருந்தேன். பாருங்கள். ஒரு பெரிய சிங்காசனம் இங்கே வைக்கப்பட்டிருந்தது. இயேசு அதின் மேல் வீற்றிருந்தார். பதிவுசெய்யும் தூதனும்

(Recording angel) மற்றவரும் அங்கு நின்றுகொண்டிருந்தனர். தந்தத்தால் செய்யப்பட்ட சுருள்வடிவமுள்ள ஒரு பிரமாண்டமான படிக்கட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தது. அங்கு நடந்து கொண்டிருந்ததை அங்கு கூடியிருந்த அனைவரும் காணத்தக்கவாறு அது அமைந்திருந்தது.

454 நான் ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். நான் அந்தப்படிக்கட்டில் ஏறிச் செல்வேன் என்னும் எண்ணம் எனக்குச் சற்றேனும் இருக்கவில்லை. நான் அங்கு நின்றுகொண்டிருந்தேன்.

455 பதிவு செய்யும் தூதன் ஒரு குறிப்பிட்டப் பெயரைக் கூப்பிடுவான். அது எனக்குத் தெரிந்த பெயராயிருக்கும். பெயர் கூப்பிடப்பட்ட சகோதரன் சகோதரியுடன் அங்கு நடந்து வரும்போது நான் அங்கிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். பதிவு செய்யும் தூதன் அங்கு கிறிஸ்துவின் பக்கத்தில் நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தான். (இப்பொழுது இது ஒரு சொப்பனம் ஆகும்) அவர்களுடைய பெயர் அங்கே இருந்தன. ஜீவ புஸ்தகத்தில் அது காணப்பட்டது. இயேசு அவர்களைப் பார்த்து. “நல்லது” உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனே, உள்ளே “பிரவேசி” என்பார்.

456 அவர்கள் அங்கு சென்று கொண்டிருந்ததை நான் பின்னால் நின்று பார்த்தேன். அவர்கள் ஒரு புதிய உலகத்திற்குள்ளும், சந்தோஷத்திற்குள்ளும் பிரவேசித்தனர். "உலகத்தோற்றத்துக்கு முன்னால் உங்களுக்கென்று ஆயத்தமாக்கப்பட்ட கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்" என்று இயேசு அவர்களிடம் கூறினார். பாருங்கள்? நான் நினைத்தேன். 'ஓ' அவர்கள் சந்தோஷங்கொண்டு ஒருவரையொருவர் சந்தித்து மலைகளையும் பெரிய ஸ்தலங்களையும் கடந்து செல்வது அற்புதமான காட்சியல்லவா?' என்று நினைத்தவாறே நின்று கொண்டிருந்தேன்.

457 ஆனால் நான், "ஓ, அது அற்புதமானதல்லவா? மகிமை அல்லேலூயா!" என்று எண்ணி மேலும் கீழும் குதிக்க ஆரம்பித்தேன்.

458 அதன்பின், வேறொரு பெயர் அழைக்கப்படுவதை நான் கேட்டேன். அப்பொழுது, "ஓ, நான் அவரை அறிந்திருக்கிறேன். நான் அவரை அறிந்திருக்கிறேன். நான்.. அதோ அவர் அங்கே செல்கிறார்" என்று நினைத்தேன். இவ்விதமாக நான்

அவரைக் கவனித்தேன். "நல்லது... கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி..."

அப்பொழுது நான், "ஓ தேவனுக்கு ஸ்தோத்திரம், தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்றேன்.

உதாரணமாக. "ஆர்மன் நெவில்" என்று அழைப்பார்கள் என்று வைத்துக் கொள்வோம், பாருங்கள்.

459 அப்பொழுது நான், "அதோ, அந்த வயதான சகோதரன் நெவில் அவர் அங்கே இருக்கிறார்." என்பேன்- பாருங்கள்? அவர் ஜனக் கூட்டத்திலிருந்து வெளியே வந்து, மேலே சென்றார்.

460 அப்பொழுது அவர், "உலகத் தோற்றத்துக்கு முன்னால் உனக்கென்று ஆயத்தமாக்கப்பட்ட கர்த்தரின் சந்தோஷத்துக்குள் பிரவேசி. அதற்குள் பிரவேசி" என்று கூறினார். அப்பொழுது முதிர்ந்த சகோதரன் நெவில் ரூபம் மாறி, அங்கு நடந்து சென்றார். சந்தோஷத்துடன் சத்தமிட்டுக் கொண்டே சென்றார்.

461 அப்பொழுது நான், "தேவனுக்கு மகிமை" என்று கூச்சலிடுவேன், நான் நின்று, அற்புதமான நேரத்தை உடையவனாய் என் சகோதரர் செல்லுவதைக் கவனித்து கொண்டிருந்தேன்.

462 அதன்பின்னர் அங்கு நின்றுகொண்டிருந்த பதிவுசெய்யும் தூதன், "வில்லியம் பிரான்ஹாம்" என்று பெயரை வாசித்தான்.

463 நானும் நடந்து செல்ல அழைக்கப்படுவேனென்று நான் நினைக்கவேயில்லை. ஆகையால் நான் சிறிது அச்சமுற்றேன். "ஓ, என்னே! நான் அதைச் செய்ய வேண்டுமா?" என்று நான் நினைத்தேன். நான் நடந்து செல்லும்போது அங்கு குழுமியிருந்த அனைவரும் என் முதுகில் தட்டி, [எப்படி தட்டுகிறார் என்பதை விளக்க சகோதரன் பிரான்ஹாம் அநேகமுறை தம்மிலேயே தட்டிக் காண்பிக்கிறார். -- ஆசி.] "சகோதரன் பிரான்ஹாமே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!" என்றனர். அந்த பெரிய ஜனக்கூட்டத்தின் நடுவே நான் சென்றபோது, அவர்கள் இவ்வாறு என் முதுகில் தட்டிக் கொண்டிருந்தனர். [எப்படி தட்டுகிறார்கள் என்பதை விளக்க சகோதரன் அநேகமுறை தம்மிலேயே தட்டிக் காண்பிக்கிறார். - ஆசி.] "சகோதரனே தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக, சகோதரனே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக" என்றனர்.

464 அப்பொழுது உங்களுக்குத் தெரியுமா? நான் ஒரு ஜனக்கூட்டத்திலிருந்து வருவதுபோன்று, "உங்களுக்கு நன்றி, உங்களுக்கு நன்றி, உங்களுக்கு நன்றி" என்று கூறிக்கொண்டே நடந்து செல்வதுபோல சென்றேன்.

465 நான் அந்தப் பெரிய தந்தப் படிக்கட்டின் மேல் நடந்து செல்ல வேண்டியவனாயிருந்தேன். நான் இவ்வாறு மேலேறிச் செல்ல ஆரம்பித்தேன். நான் முதற்படிக்கட்டில் கால் வைத்து நின்றேன். நான் எண்ணினேன். அவருடைய முகத்தை நான் நோக்கிப் பார்த்தேன். "அவரை நன்றாகக் காணட்டும்" என்று நினைத்தேன். எனவே நான் அங்கு நின்றேன்.

466 நான் என் கரங்களை இவ்விதம் வைத்திருந்தேன். இங்கே வேறு யாரோ ஒருவரின் கரம் என் கரத்தைப் பற்றியதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. நான் திரும்பிப் பார்த்தபோது, ஹோப் பெரிய கறுத்த கண்களுடனும், கறுத்த கூந்தல் பின்புறம் தொங்கினவாறு வெள்ளையங்கி தரித்தவளாய் அங்கு நின்று கொண்டிருந்தாள். நான் "ஹோப்" என்று அழைத்தேன்.

467 பின்பு வேறொரு கரம் என் இந்தக் கரத்தைப் பிடித்தது. நான் பார்த்தபோது மேடா, கறுத்த கண்களுடன், கறுத்த கூந்தல் பின்புறம்

தொங்கினவாறு, வெள்ளையங்கி தரித்தவளாய் அங்கு நின்று கொண்டிருந்தாள், நான், “மேடா” என்றேன்.

468 இருவரும் ஒருவரையொருவர் இந்தவிதமாக நோக்கினர். அவர்கள். அவர்களிலிருவரும் என் கைகளைக் கோர்த்துக் கொண்டனர். நாங்கள் வீட்டுக்கு (Home) நடந்து சென்றோம்.

469 நான் உறக்கத்திலிருந்து எழுந்தேன். ஓ, நான் உறக்கத்தினின்று எழுந்து, நான் நான் ஒரு நாற்காலியில் அமர்ந்து அழ ஆரம்பித்தேன். உங்களுக்குத் தெரியுமா? அப்பொழுது நான், “ஓ, தேவனே, நான் சொப்பனத்தில் கண்டது உண்மையாகவே நிறைவேறட்டும்” என்றேன். இவ்விருவரும் என் வாழ்க்கையில் ஈடுபட்டு, குழந்தைகளைப் பெற்றனர். இதோ நாங்கள் மூவரும் பரிபூரணப்பட்ட புதிய உலகத்திற்குள் நடந்து சென்றோம். ஓ, என்னே! இல்லை, ஒன்றுமேயில்லை...

470 ஓ, அது மிகவும் அற்புதமான ஒரு காரியமாய் இருக்கப் போகிறதே! அதை இழந்து போக வேண்டாம்! அதை இழந்துபோக வேண்டாம். ஓ, தேவக் கிருபையினால், உங்களால்

செய்ய முடிந்த அனைத்தும் செய்யுங்கள், மற்றவைகளை தேவன் பார்த்துக் கொள்வார்.

*நான் அவரை நேசிக்கிறேன்,*

*நான் அவரை நேசிக்கிறேன், ஏனென்றால்*

*முன்பு அவர் என்னை நேசித்தார்,*

*சம்பாதித்தார் என் இரட்சிப்பை கல்வாரியில்*

*செய்தி:* **ஆறாம் முத்திரை,** மார்ச் 23, 1963

★★★★★

# நீ இன்று அவரைத் துக்கப்படுத்தி வெளியே தள்ளினால், சகோதரனே, அங்கே உனக்காகப் பரிந்து பேசப் போவது யார்?

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

116. சுமார் 100 வருடங்களுக்கு முன் வட அமெரிக்காவின் தென் பாகத்தில் ஒரு கிறிஸ்தவன் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் தானியேல் கரி. நல்ல மனிதன். தேவனுக்குகந்தவன். பரிசுத்தவான். உண்மையான கிறிஸ்தவன். ஜனங்கள் அவனைப் புகழ்ந்தனர். நேர்த்தியானவன். அவனைப் பற்றிச் சொல்லப்படும் கதை இவ்வண்ணமுள்ளது: அவன் கண்ட தரிசனத்தில் அவன் மரித்து பரலோகம் சென்றானாம். அங்கே முத்துக்களால் அலங்கரிக் கப்பட்ட ஒரு வாசலைக் கண்டு அங்கே சென்றானாம் அங்குள்ள குமாஸ்தா கதவண்டை வந்து, "நீ யார்?" என்று கேட்டான்.

117. "நான் சுவிசேஷகனாகிய தானியேல் கரி. நான் கிறிஸ்துவுக்கு ஆயிரக்கணக்கில் இருதயங்களை ஆதாயப்படுத்தினேன். பூமியில் என் வாழ்வு முடிந்து விட்டது. அங்கே எனக்கு இடமில்லை இன்று காலை இங்கே வந்துள்ளேன்" என்றான்.

118. பாவியே, இத்தகைய காலை வேளை உனக்கும் வரப்போகிறது. விசுவாசத்திலிருந்தும் நழுவிப் போகிறவனே. உனக்கும் இந்த நாள் தூரமில்லை. பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தும் உங்களுக்கும் இத்தகைய நாள் ஒன்று உண்டு. தாழ்மையாகவும் சாந்தமாகவும் உன்னால் இருக்க

முடியவில்லை. நீ உன் வாழ் நாளெல்லாம் உன் ஆத்துமாவுக்காக அழுததில்லை. நீ உன் தப்பிதங்களை உணர்ந்ததில்லை. கற்பு உன்னைவிட்டு நீங்கிவிட்டது. ஆனால் இத்தகைய காலை நேரம் உன் கதவுக்கும் வர இருக்கிறது. சாந்தமான பரிசுத்த ஆவி உன் இருதயத்தைத் தட்டும் போது நீ உன் உள்மனதைப் பூட்டிவைத்திருக்கிறாய்?

119. ஆகவே தானியேல் கரி அந்த வாசலிலே நிற்க, "உன் பெயர் இங்கே இருக்கிறதா என்று பார்க்கிறோம்" என்று சொல்லி பெயரைத் தேடினார்கள். ஆனால் அந்த பிரசங்கியின் பெயர் அங்கே இல்லை. "தானியேல் கரி என்னும் பெயர் இங்கே இல்லை" என்றார்கள்.

120. "ஏன்? நான் உண்மையில் ஒரு பிரசங்கியாச்சே. நான் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினேனே. நான் நல்லதையே செய்தவனாயிற்றே."

121. ஆனால் முத்துமாளிகையின் குமாஸ்தா, "தானியேல் கரி என்னும் பெயர் இங்கே இல்லை என்று சொல்ல வருந்துகிறேன். உமது பெயர் இங்கே இல்லை! நீர் செய்ய வேண்டியதை உமக்குச் சொல்லுகிறேன். உமக்காகப் பரிந்து பேச இங்கே எங்களுக்கு உரிமை இல்லை. வெள்ளை

சிம்மாசன நீதிமன்றத்தில் உமது நிலைமையை முறையிட வேண்டுமானால், நீர் அப்படி செய்யலாம். ஆனால் உமக்குக் கிருபை இங்கே கிடையாது. ஏனென்றால் உமது பெயர் இங்கே இல்லை. இங்கே உமக்குக் கிருபையும் இல்லை, நீர் உமது கேஸை அப்பீல் செய்ய விரும்புகிறீரா?" என்று கேட்டான்.

"அப்பீல் செய்வதை தவிர நான் வேறென்ன செய்ய முடியும்!" என்றார் தானியேல்.

122. "நீர் சென்று வெள்ளை சிம்மாசன நீதிமன்றத்தில் அப்பீல் செய்யலாம்"

123. ஒரு மணிநேரம் தானியேல் கரி ஆகாயவிரிவிலே சென்றாராம். போய்கொண்டிருக்கையில் வெளிச்சம் அதிகரித்துக் கொண்டே இருந்ததாம். அது சூரியனைவிட நூறுமடங்கு, ஆயிரம் மடங்கு அதிக வெளிச்சமாக இருந்ததாம். அவர் நடுங்க ஆரம்பித்தாராம். வெளிச்சத்தின் நடுவிலே வந்து சேர்ந்ததும் ஒரு சத்தத்தைக் கேட்டாராம்: "நீ உலகத்திலே பரிபூரணமாக சுத்தமான வாழ்வு வாழ்ந்தாயா?" (என்ற வார்த்தை வெளிச்சத்திலிருந்து வந்ததாம்).

"இல்லை. நான் முழு சுத்தத்துடன் வாழவில்லை" என்றாராம் நடுக்கத்துடன்.

"எப்பொழுதும் எல்லாருடனும் யோக்கியமாய் நடந்தாயா?"

124. "இல்லை, ஒரு சிலவற்றில் நான் யோக்கியமாக நடந்ததில்லை."

"யோக்கியனாய் நடந்ததில்லை."

"நீ உன் வாழ்க்கையில் எப்பொழுதும் உண்மையைப் பேசினாயா?"

125. "இல்லை, ஆம் இல்லை.... ஞாபகத்துக்கு வருகிறது.... நான் எல்லா சமயத்திலும் உண்மையை ... ஒரு சிலவற்றில் உண்மையைப் பேசவில்லை!"

126. "மற்றவருடைய பொருளை நீ அபகரித்தது உண்மைதானா? எந்த பொருளாவது? பணமாவது வேறெதுவும் உனக்கு சொந்த மில்லாதது"

127. "இல்லை .... ஆம்..... நான் மற்றவரின் பொருளை அபகரித்தது உண்மை "(தன்னை உலகத்தில் நல்ல மனிதன் என்று எண்ணியிருந்தார். ஆனால் அங்கே அவர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டார்!).

"அப்படியானால் நீ பரிபூரணமாக வாழவில்லை."

“ஆம், நான் சுத்தமாக வாழவில்லை” என்றார் தானியேல் கரி.

128. தானியேல் கரி சொன்னபடி, “அந்த பெரிய வெளிச்சத்திலிருந்து திடீரென்று, “நீ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டாய்!” என்னும் வெடியைப்போல ஒரு சத்தம் புறா உட்கார்ந்திருந்த கிளையின் வழியாய் வரும் என்று எதிர்பார்த்தேன். அச்சமயத்திலே பின்பக்கத்திலிருந்து தாயின் சத்தத்தைவிட ஒரு அருமையான சத்தம் கேட்டேன். என் தாயின் முகத்தைக் காட்டிலும் அன்பான முகத்தைக் காண நான் திரும்பினேன்.” **என் பின்பக்கம் நின்றவர் அன்புடன் “பிதாவே இந்த தானியேல் கரி எனக்காக நின்றான். இவன் அசுத்தமாக வாழ்ந்தது மெய்தான். ஆனால் உலகில் எனக்காக உழைத்தான். இவன் உலகில் எனக்காக நின்றான். ஆகவே இன்று நான் இவனுக்காகப் பரலோகத்திலே நிற்கிறேன். அவனுடைய பாவங்களை என் கணக்கில் கூட்டிவிடும்**” என்றார்.

129. **நீ இன்று அவரைத் துக்கப்படுத்தி வெளியே தள்ளினால், சகோதரனே, அங்கே உனக்காகப் பரிந்து பேசப் போவது**

**யார்?** என்னால் இனி பிரசங்கம் செய்யக் கூடவில்லை. ஜெபத்தில் தலைவணங்குவோமாக.

130. அன்புள்ள தேவனே, மரித்த அன்புள்ள ஆட்டுக்குட்டியே, தாழ்மையான, எளிய, சாந்தமான ஆட்டுக்குட்டியே, நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் இருந்தன. ஆனால் உமக்குத் தலைசாய்க்க இடமில்லாமலிருந்தது. மகிமையின் தேவனாகிய நீர் பிறந்த போது உமக்கு உடுத்த அவர்களிடம் துணி இருக்கவில்லை.

ஓ தேவனே, நியாயத்தீர்ப்பின் நாளிலே, இன்றைக்கு என்னிடமிருக்கும் நல்ல துணிமணி என்ன பிரயோஜனமாகும்? எனக்குக் கார் இருந்து என்ன பயன்? நல்ல வீடு இருந்து என்ன பயன்? இந்த உலகத்தின் என்ன பொருள் அங்கே பயன்படும்? இவ்வுலகத்தில் நீர் சிநேகிதரற்று இருந்தீர். யாரும் உம்மை நேசிக்கவில்லை, உமக்கு உணவளிக்க யாரும் இருந்ததில்லை. உமக்கு உதவி செய்யவும் யாரும் இருந்ததில்லை. அன்று நீர், "நான் பசியாக இருந்தேன் நீங்கள் என் பசியைத் தீர்க்கவில்லை. நான் வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுக்கவில்லை" என்பீர். கர்த்தாவே, நாங்கள் வைத்திருக்கும் பொருட்களெல்லாம் அன்று எங்களுக்கு என்ன

பயன் தரப்போகின்றன? உமக்காக நாங்கள் சாட்சியாக நிற்க உதவி செய்யும். அப்பொழுது, அந்த நேரம் வரும்போது, சர்வத்துக்கும் வல்லவரும் எல்லாவற்றையும் அறிந்தவரும், எங்கும் நிறைந்தவருமாகிய உமது சமூகத்தில் இருப்போம். ஓ, தேவனே, அந்தப் பெரிய ஒளியில் அந்த புறா தன் சிறகை விரித்து உட்காரும்போது, வெளிச்சம் அந்தமில்லா எல்லைகளுக்கும் எட்டும், அப்போது அந்த வெளிச்சத்தில் நீர் உட்காருவீர்.

131. தேவரீரின் சந்நிதானத்திலே நான் தனியாக நிற்க வேண்டியிருக்கும். என் தாயும் என் தகப்பனும், என் சகோதரரும், என் சபைக்கு போதகரும் என் மனைவியும் என் குழந்தைகளும் அங்கே என்னுடனே நிற்கமாட்டார்கள். (சகோ. பிரான்ஹாம் அழுகிறார் - ஆசி) ஓ... ஓ.... தேவனே, அப்பொழுது நான் என்ன செய்வேன்? கர்த்தாவே, அப்பொழுது நான் என்ன செய்வேன்! அந்த நேரம் இன்று சூரியன் அஸ்தமிக்குமுன் வரலாம். நான் என்ன செய்வேன்? நான் என்ன செய்வேன்? ஓ, கிறிஸ்துவே, இன்று நான் உமக்காக நிற்பேன். நான் இன்றைக்கே முடிவு செய்தேன். நான் மற்றவர்களை இழிவாய்ப் பேசுவதை விட்டுவிட்டேன். என் கோபத்தை விட்டு விடுகிறேன். எல்லா வேற்றுமைகளையும் விட்டு விடுகிறேன் ..... கர்த்தாவே, எல்லா

வேற்றுமைகளையும் விட்டு விடுகிறேன். கர்த்தாவே, என்னிடத்திலிருக்கும் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டாவது என்னை ஏற்றுக்கொள்ளும். இன்று உம்மிடத்தில் நிற்கத் தயாராக இருக்கிறேன். எல்லாவற்றையும் இழந்து போனாலும் உம்மை விடமாட்டேன். என்னில் இருக்கும் எல்லா தன்னலத்தையும் கர்வத்தையும் வேற்றுமைகளையும் அகற்றுவீராக. உலகத்தின் எல்லா இச்சைகளையும் விட்டு, தோலுரிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக உமக்கென்று நிற்க கிருபை செய்யும். சினிமா, துர்ச்சிநேகிதரோடு கூடுதல், அவலட்சணமான உடை உடுத்துவது, மேக் அப், உதட்டுச் சாயம், நகத்தில் போடப்படும் வர்ணம் எல்லாவித அலங்காரங்களையும் விட்டு விடுகிறேன். “உலகத்தாரைப் போல் நடக்காதே; உலகத்துடன் கூடாதே; அவர்களை விட்டு வெளியே வாருங்கள்” என்றீர். ஓ, தேவனே, இன்று என் தோலை உரித்தாகிலும் என்னை உம்முடைய ஆட்டுக்குட்டியாக்கி நான் மௌனமாக இருக்கச் செய்யும். கர்த்தாவே உலக சுபாவத்தை என்னிலிருந்து உரித்து எடுத்தருளும்; நான் மௌனமாகவும் ஓடிவிடாமலும் இருப்பேன்.

~ **10** ~

## *செய்தி:* **சபையும் அதன் நிலையும்,**

ஆகஸ்டு 5, 1956, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

★★★★★

# இப்பொழுதும் கூட அவர்கள் மணவாட்டியின் ஒரு பாகமாக - இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாக - இருக்கிறார்கள் என்றறிவேன்

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

19. இதை நான் வெளிப்படையாக கூற விரும்புகிறேன். என் தாயாரின் மறைவின் போது அவர்கள் அருகில் நின்று கொண்டு அவர்களுடைய ஆத்துமாவை தேவனிடத்தில் ஒப்புவிக்க வேண்டுமெனும் விருப்பம் எனக்கிருந்தது. ஏதோ வினோதமான ஒன்று என்னை அக்காலையில் மருத்துவமனைக்கு அனுப்பினது - என்னையும் மனைவியையும். அவர்கள் மிக மோசமான நிலையில் இருந்தார்கள். நான் அவர்களிடம் பேசின போது அவர்கள் கடைசியாக புரிந்த செயல் என் நினைவில் உள்ளது. அவர்களால் பேச முடியவில்லை. நான் அவர்களிடம், "அம்மா, நீங்கள் இன்னமும் கிறிஸ்துவில் அன்புகூர்ந்து, அவர் உங்களுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருந்தால், உங்கள் தலையை அசையுங்கள்" என்றேன். அவர்கள் தலையை அசைத்தார்கள். அப்பொழுது கண்ணீர் அவர்களுடைய கன்னங்களில் வழிந்தோடினது. பாதையின் முடிவிலும் அவர் எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருந்தார். அவர்களுடைய கன்னத்தை தட்டிக் கொடுத்து. அவர்களுடைய முகத்தை என் கைகளினால் இழுத்து, அம்மா. நீங்கள் உண்மையான போர் வீரர். உங்களைக் குறித்து நான் பெருமையடைகிறேன்" என்றேன்.

20. சாத்தான் யோபுவின் நாட்களில் கூறினது போல. இப்பொழுது என்ன கூறியிருப்பான் என்று வியக்கிறேன்” என்று எண்ணினேன். உங்களுக்குத் தெரியும், தேவன் நமது ஜீவனை எடுக்க முடியாது. சாத்தான் தான் அதை செய்ய வேண்டும். நாம் சாத்தானிடம் ஒப்படைக்கப்படுகிறோம்.

21. சாத்தான் அதை அறிந்தவனாய்; அவர்களுடைய வேளை வந்து விட்டதென்றும், அவர்கள் போக வேண்டுமென்றும் அறிந்தவனாய், தேவனிடம், “உமக்குத் தெரியும். அவளுக்கு ஒரு மகன் இருக்கிறான். அவன் ஒரு போதகர். அவளுடைய மற்ற பிள்ளைகளும் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கின்றனர். அவளை சிறிது காலம் துன்புறுத்தி, அவர்கள் எல்லோரும் உம்மை மறுதலிக்கும்படி செய்கிறேன்” என்று கூறியிருப்பான்.

22. தேவனுடைய கிருபையினால் அப்படி நடக்கவில்லை. அவர்களுடைய மறைவுக்கு முன்பு அவர்கள் புரிந்த கடைசி செயல், தலையை ஆட்டி, கிறிஸ்து அவர்களுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருக்கிறார் என்பதை அறிவித்ததே.

23. நான் வீடு திரும்பின போது, “நல்லது, அதுவல்லவா...” என்று எண்ணினேன். நான் உள்ளே சென்று, அறையில் உட்கார்ந்து,

வேதாகமத்தை கையிலெடுத்தேன் - ஒரு புதிய வேதாகமம். நான், “கர்த்தாவே, நீர் தேவன். நான் .... நீர் செய்யப்போவதை என்னிடம் கூறவேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்களை எடுத்துக்கொள்ளப் போவதை எனக்கு நீர் மறைத்த காரணம் என் இருதயம் உடைந்து விடக்கூடாதென்றா? அப்படியானால் உமது வார்த்தையினால் என்னை ஆறுதல்படுத்தும்” என்று சொல்லி,

24. வேதாகமத்தை திறந்தேன். ஒரு வேதாகமத்தை எடுத்து அதை இப்படி திறப்பது உங்களுக்குத் தெரியும். என் விரல்களை வேதாகமத்துக்குள் நுழைத்து அதை திறந்தேன். அப்பொழுது மத்தேயு 9ம் அதிகாரம் கிடைத்தது. அதில் சிகப்பு கொட்டை எழுத்துக்களில், “இவள் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்” என்றிருந்தது. பாருங்கள், நான் பார்த்தபோது, என் கண்களில் பட்ட முதலாம் வேதவசனம்.

25. நான் வேதாகமத்தை குறி சொல்லும் பலகையைப் போல் (Ouija board) உபயோகிப்பதில்லை. அது உங்களுக்குத் தெரியும். நாம் அப்படி செய்வதில்லை. ஆனால் அந்நேரத்தில் நான் அதிக துயரமுற்றவனாய், தேவன் அதைக் காணச் செய்வார் என்று

நம்பினேன். அதைத் தொடர்ந்து கிடைத்த வேதவசனம் அது சரியென்று நிரூபித்தது.

அன்றிரவு எனக்கு உறக்கமற்ற இரவாய் இருந்தது.

26. அடுத்த நாள் காலையில் நான்..... படுக்கையை விட்டு எழுந்தேன். அப்பொழுது எட்டு மணியிருக்கும், அல்லது அதைக் காட்டிலும் நேரமாகியிருக்கும். நான் அறையிலிருந்தேன். நான் பார்த்தபோது, பிள்ளைகள் ஊனமுற்ற பிள்ளைகளை எல்லாவிடங்களிலுமிருந்து உள்ளே கொண்டு வருவதை தரிசனத்தில் கண்டேன். அது ஒரு 'நகர் பிளாக்' அகலமும், இரண்டு நகர பிளாக்' நீளமும் கொண்ட இடத்தில் ஊனமுற்ற பிள்ளைகள் உட்கார்ந்திருந்தது போன்றிருந்தது. இடது பாகத்திலும் வலது பாகத்திலும் ஜனங்கள் நெடுக உட்கார்ந்து கொண்டிருந்தனர். அது சற்று உயரமான இடம் போன்றிருந்தது. அது ஒருவிதமான அரங்கம் போல் முன்பாகத்தில் தாழ்ந்ததாகவும், பின்பாகத்திலுள்ள ஜனங்கள் முன்னால் காணத்தக்கதாக சற்று உயரமாகவும் காணப்பட்டது. நான் ஊதா 'சூட்' போட்டுக் கொண்டு அங்கு நின்று கொண்டிருந்தேன். இது என்ன விசித்திரமாயுள்ளதே! நான் வீட்டில் அறையில் நின்று கொண்டிருக்கிறதை அறிகிறேன்.

ஆனால் அங்கு ஊதா சூட்' அணிந்திருக்கின்றேனே" என்று எண்ணினேன்.

27. நான், அவர்களை உள்ளே கொண்டு வாருங்கள், அவர்களை உள்ளே கொண்டு வாருங்கள்" என்னும் பாடலைப் பாடத் துவங்கி, இரு பக்கங்களிலுமுள்ளவர், "சிறு பிள்ளைகளை இயேசுவினிடம் கொண்டு வாருங்கள், அவர்களைப் பாவ உலகிலிருந்து கொண்டு வாருங்கள்" என்னும் பாடலின் மற்ற பாகத்தை பாடும்படி செய்தேன்.

28. அப்பொழுது பிரபலமான ஒரு சீமாட்டி அரங்கத்தின் பின்வாசலின் வழியாக பிரவேசித்தார்கள். அவர்கள் உள்ளே வருகிறார்கள் என்பதை நான் எப்படியோ அறிந்து கொண்டேன். அவர்கள் அங்கு கூடியிருந்தவர்களின் மத்தியில் நடந்து சென்றார்கள்.

29. நான், அவர்களை உள்ளே கொண்டு வாருங்கள்" என்று பாட, இந்த பக்கத்திலுள்ளவர்கள், அவர்களை உள்ளே கொண்டு வாருங்கள்" என்றும் அந்த பக்கத்திலுள்ளவர்கள், அலைந்து கொண்டிருப்பவர்களை இயேசுவினிடம் கொண்டு

வாருங்கள்' என்றும் ஒன்றன் பின் ஒன்றாக பாடிக் கொண்டிருந்தனர்.

30. நான் அங்கு கூடியிருந்த ஊனமுற்ற, வியாதிப்பட்டிருந்த சிறு பிள்ளைகளுக்காக ஜெபிக்க ஆயத்தமானேன்.

31. அந்த சீமாட்டி உள்ளே வந்து, சினிமாக் கொட்டகைகளில் உள்ளது போன்ற ஒரு தனி இடத்தில் (box)- அதாவது புகழ் வாய்ந்தவர் அல்லது ஜனாதிபதிக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள அப்படிப்பட்ட தனி இடத்தில் - போய் உட்கார்ந் தார்கள். நான் என்ன கூறுகிறேன் என்று நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்று நம்புகிறேன் - என் இடது பக்கத்திலுள்ள அப்படிப்பட்ட ஒரு இடத்தில்.

32. அந்த சீமாட்டி உள்ளே வந்து உட்கார்ந்தவுடன், அங்கிருந்த ஜனங்களிடம் திரும்பி தலைவணங்கி வணக்கம் தெரிவித்தார்கள். அவர்கள் பழமை நாகரீகமுள்ள உடை உடுத்தியிருந்ததை நான் கவனித்தேன். அதற்கு முன்பு, அவர்கள் தலைவணங்கி வணக்கம் தெரிவிக்க என் பக்கம் திரும்பினார்கள். நான் பிரசங்கம் செய்ய பிரசங்க பீடத்துக்கு நடந்து கொண்டிருந்தேன். அவர்கள் தலைகுனிந்திருந்த போது, நான் அவர்கள் பக்கம் இப்படி திரும்பினேன்.

33. நான் தலைநிமிர்ந்த போது, அவர்களும் என் முகத்துக்கு நேரே தலை நிமிர்ந்தார்கள். அது என் தாயார். அவர்கள் என்னைப் பார்த்து புன்முறுவல் செய்தார்கள். அவர்கள் வாலிபமாக, உண்மையில் வாலிபமாக காணப்பட்டார்கள். அப்பொழுது இடிமுழக்கம் போன்ற ஒரு பெரிய சத்தம் உண்டாகி அந்த இடத்தை அசைத்தது. அதிலிருந்து, **அவர்களைக் குறித்துக் கவலை கொள்ளாதே. அவர்கள் 1906ம் ஆண்டில் காணப்பட்டது போல் இப்பொழுது இருக்கிறார்கள்** என்னும் சொற்கள் எழுந்தன.

34. அந்த தரிசனம் என்னை விட்டு நீங்கின பிறகு, 1906ம் ஆண்டில் என்ன நடந்தென்று நோக்கினேன். அந்த ஆண்டில் அவர்கள் என் தகப்பனாருக்கு மணவாட்டியாக அவரை விவாகம் செய்தார்கள். இப்பொழுதும் கூட அவர்கள் மணவாட்டியின் ஒரு பாகமாக - இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாக - இருக்கிறார்கள் என்றறிவேன்.

*செய்தி:* **ஒரு உண்மையான சாட்சிக்காரரின் சாட்சி,** நவம்பர் 5, 1961, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

★★★★★

அந்த முகத்தை வரைய எந்த ஓவியனாலும் முடியாது. அது அதிகார தோரணையுடன் காணப்பட்டது. அவர் பேசுவாரானால், உலகம் முடிவுக்கு வந்து விடும் போல் காணப்பட்டது, ஆனால் அவருடைய கண்களில் இரக்கமும் தயவும் அன்பும் சுடர்வீசின

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**[1933–ம் வருடம் – அதாவது சகோதரன் பிரன்ஹாமுக்கு ஏறக்குறைய 24 வயதாகும் போது அவருடைய ஜீவியத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் சிலவற்றை இங்கு கொடுத்துள்ளோம். இது *இயற்கைக்கு மேம்பட்டவை – வில்லியம் பிரன்ஹாமின் ஜீவிய சரிதை (புத்தகம் – 2)* – லிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இங்கு "பில்லி" என்று குறிப்பிடுவது "தீர்க்கதரிசி வில்லியம் பிரன்ஹாமைக்" குறிக்கிறது.]**

---

ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவனுடைய ஜீவியத்தில் கர்த்தருடைய சித்தத்தை அறிய வேண்டும் என்ற நோக்கத்தில் தான் சர்வ வல்லமையுள்ள தேவன் தம்முடைய சிந்தைகளை வேதாகமத்தில் வரைந்து வைத்துள்ளார் என்றும் அதை அறிய வேதம் வாசித்து ஜெபிக்க வேண்டும் என்றும் பில்லியின் மேய்ப்பர் பிரசங்கிப்பதை அவர் கேட்டார். அது பில்லியைத் தொட்டது. எனவே அவர் ஆர்வமுடன் வேதம் வாசித்து, தேவனுடைய வார்த்தையைக் குறித்த அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

அவர் பத்து வருடங்களுக்கு முன்பு தம்முடைய ஏழாம் வகுப்பு படிப்பை முடித்ததிலிருந்து அவர் அநேக புஸ்தகங்களை

வாசித்திருக்கவில்லை, எனவே அவருடைய வாசிக்கும் திறமை மந்தமாகத்தான் இருந்தது. வேதத்தின் பொதுவான அர்த்தங்கள் புரிந்தாலும், நேபுகாத்நேச்சார், செருபாபேல், பெனாயா போன்ற கடினமான பழைய ஏற்பாட்டு பெயர்களை அவரால் உச்சரிக்க இயலவில்லை. மேலும் கிங் ஜேம்ஸ் ஆங்கில வேதாகமத்திலுள்ள வாக்கிய அமைப்புகள் அவருக்கு பெரும் போராட்டமாக அமைந்தன. அவர் 1933—ம் வருடத்தின் தொடக்கத்தில் தம்முடைய முதலாவது செய்தியைப் பிரசங்கித்த போது, வேதாகமத்தை சத்தமாக வாசிக்க தம்முடைய நாவை அவர் நம்பவில்லை. அதற்குப் பதிலாக வேதபாகத்தை அவருக்காக வாசிக்கும்படி, மேடையில் அவருக்கு பின்பாக உட்கார்ந்து கொண்டிருக்கும் ஹோப்பையே (பிரன்ஹாமின் மனைவி) வற்புறுத்தினார். அதற்காக அவளுக்கு அவர் சைகை காட்டி தெரிவித்தார். அவருடைய பாடமானது *ஒழுக்கங்கெட்ட விதத்தில் ஜீவித்த சிம்சோனிடத்தில் தேவன் கொண்டிருந்த கிருபையும் பாதுகாப்பும்* என்பதாக இருந்தது. ஹோப், நியாயாதிபதிகளின் புஸ்தகத்திலிருந்து வாசிக்க, பில் அதை விவரிக்கத் தொடங்கினார். உடனே இயேசு, யோவான் 14—ம் அதிகாரத்தில் கூறினதை சபையோரிடம் வாசித்துக் காட்ட அவர் விரும்பினார். அவர் ஹோப்பிடம்

தலையசைத்து சைகை காட்டினார். அவள், **"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக"** என்று வாசிக்கத் தொடங்கினாள், பில் உடனே நிறுத்தி, "வேதாகமம் கூறுவது உங்களுக்குக் கேட்டதா; நீங்கள் கலங்கிப் போகக் கூடாது" என்றார். பின் மீண்டும் ஹோப்பிடம் தலையசைத்து சைகை காட்டி, தொடர்ந்து வாசிக்கச் சொன்னார், அவள், **"தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்"** என்று வாசித்தாள், மீண்டும் பில்லி நிறுத்தி விட்டு, "நீங்கள் அதைச் செய்வீர்களா? நீங்கள் உண்மையாகவே விசுவாசிக்கிறீர்கள்?" என்று கேட்டார். அவர் தொடர்ந்து அலங்கோலமாகவும், மேடுபள்ளமாகவும் அவருடைய முதல் பிரசங்கத்தைப் பிரசங்கித்தாலும், அவர் இருதயத்தில் இருந்த அந்த உத்தமம் அவரை நல்ல பிரசங்கம் செய்பவராக ஆக்கியது.

அவருடைய பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களைக் கவனித்தார், எல்லா பிரன்ஹாம் (பிரன்ஹாமின் தாயார்) தம்முடைய மகனின் வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டார்கள். பில்லியின் ஜீவியத்தில் நடந்த வியக்கத்தக்க மனமாற்றமும் அவர் அற்புதமாக

சுகமடைந்ததும் அவர்களுடைய ஆத்துமாவைத் தட்டி எழுப்பியது. பில்லியின் தாயாராகிய எல்லா பிரன்ஹாம் தம்முடைய 39—ம் வயதில் இயேசு கிறிஸ்துவுக்குத் தம்முடைய ஜீவியத்தை ஒப்புக்கொடுத்தார்கள். சந்தோஷம் நிரம்பி வழிந்தது, பில்லி தம்முடைய தாயாருக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தார்.

அவருடைய தாயாருடைய மனமாற்றம் அவரை உற்சாகப்படுத்தினதால், பில்லி தம்முடைய தகப்பனாரையும் சபைக்கு வரும்படி வற்புறுத்தினார். சார்லஸ் பிரன்ஹாமோ (பில்லியின் தகப்பனார்) அதை மறுத்தார், பில்லி முழுமுயற்சியுடன் வற்புறுத்தியும் அவர் அசைந்து கொடுக்கவேயில்லை. அது பில்லியை கவலைப் பட செய்தது. ஆனாலும் இழக்கப்பட்டவர்களின் பேரிலுள்ள அக்கறையை அது எடுத்துப்போட முடியவில்லை. ஏனெனில் அவருடைய 14 வது வயதில் அவர் இழக்கப்பட்டவர்கள் இருக்கும் ஸ்லத்திற்கு போயிருந்த போது கிடைத்த திகிலூட்டும் அனுபவமும் அதற்குக் காரணமாயிருந்தது. இப்பொழுது, பில்லி, “அன்புள்ள தேவனே, என்னுடைய தகப்பனார் அதைப்போன்ற இடத்திற்குப் போகும்படி நீர்

அனுமதிக்க வேண்டாம். தயவுகூர்ந்து அவர் உம்முடைய கிருபையை காணும்படி செய்யும், அவர் உம்முடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளட்டும்" என்று அடிக்கடி ஜெபித்து வந்தார்.

ஒரு நாள் இரவு வேளையில், பெரும்பாலான அவருடைய குடும்பத்தினர் படுக்கைக்குச் சென்ற பிறகு, பில்லி முன் அறையிலிருந்த வைக்கோல் மெத்தையின் மேல் படுத்தவாறு அவருடைய தகப்பனாருக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார். அவருடைய தகப்பனாரோ உள்ளூர் மதுக்கடை ஒன்றில் குடித்துக் கொண்டிருந்தார். பில்லி ஜெபித்த வேளையில், ஒரு சத்தம், "எழுந்திரு" என்று கூறுவது போன்ற ஒரு உணர்வைப் பெற்றார். அவர் எழுந்து வாசலுக்கு வெளியே நடந்து சென்றார். ஏனென்று அவருக்குத் தெரியவில்லை, ஆனால் அவர் ஏதோவொன்றின் பக்கமாக இழுக்கப்படுவது போன்று உணர்ந்தார்.

வீட்டிற்குப் பின்னால், துடைப்பம் புல் (broomsage) மட்டுமீறி வளர்ந்து கிடந்தது. அவை சிவப்பு நிறத்தில் முழங்கால் உயரம் வரை வளர்ந்து கிடந்தது. அதற்குக் குறுக்காக ஒரு நடை பாதை சென்றது. பில்லி நட்சத்திர வெளிச்சத்தில் அப்பாதையைப் பின்தொடர்ந்து போனார். அந்த

மேய்ச்சல் நிலத்தின் நடுப்பகுதியை அவர் அடைந்த போது, அவர் முழங்கால்படியிட்டு, தம்முடைய தலையை தாழ்த்தி, தம்முடைய கரங்களை மடக்கிக் கொண்டு, தம்முடைய தகப்பனாருக்காகத் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவர் கண்களைத் திறந்து பார்த்தார், அவருக்கு முன்னே பத்து அடி தூரத்தில் ஒரு மனிதர் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். அவர் ஒரு வழக்கத்திற்கு மாறான மனிதராகவும், குட்டையான சிறிய தோற்றமுடையவராகவும், தம்முடைய தோள்கள் வரை மயிரைக் கொண்டவராகவும், வெண் வஸ்திரம் தரித்தவராகவும், நட்சத்திர வெளிச்சத்தில் தெளிவாக பார்க்கும்படியாக நின்று கொண்டிருந் தார். அந்த மனிதர் பில்லியின் பக்கவாட்டில் கிழக்கு திசையை நோக்கியபடி நின்று கொண்டிருந்தார். அவர் ஒரு அமைதியான மனிதராக இருந்தார். அவருடைய கரங்களை மடக்கிக் கொண்டும், அவருடைய ஒரு காலை மற்ற காலுக்கு சற்று முன்னால் வைத்துக் கொண்டிருந்தார். பில்லி அந்தக் கால்களை இரண்டாவது முறையாகப் பார்த்தார். நம்ப முடியாத அளவுக்கு அந்த கால்கள் தரையைத் தொடாமல் தரைக்கு மேலே அந்தரத்தில் நின்றன.

அவர் தம்முடைய சொந்த கைமுட்டியை போதுமான வலி உண்டாகுமளவுக்கு கடித்துக் கொண்டே, "இப்பொழுது, ஒரு நிமிடம் காத்திரு" என்று பில்லி நினைத்தார். "நான் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. இல்லை, நான் அங்கே உள்ளே அப்பாவுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன், ஏதோவொன்று இங்கே வெளியே வரும்படி சொன்னது... இங்கே இந்த மனிதர் நிற்கிறார்."

அது மிகவும் தத்ரூபமாக காணப்பட்டது. உயரமான புற்களில் வீசிய தென்றல் காற்றின் காரணமாக இந்த மனிதருடைய வெண் வஸ்திரம் காற்றில் அசைந்தது. பில் ஒரு துடைப்பக் குச்சியை ஒடித்து, பல்குத்தியைப் போன்று தம்முடைய வாயில் போட்டு மென்று கொண்டார். அவர், "அது கர்த்தராகிய இயேசுவைப் போன்று காணப்படுகிறதே. அது அவர் தானா என்று வியப்பாக உள்ளதே" என்று எண்ணினார்.

அவர் சிறிது அப்பால் நழுவிச் சென்று பார்த்தார். அப்போது அவரால் அம்மனிதருடைய முகத்தை சற்று அதிகமாக காண முடிந்தது. அவர் தம்முடைய தொண்டையைச் சரிசெய்ய, "ஊ—உம்" என்று கனைத்துப் பார்த்தார். அந்த மனிதர்

அசையவேயில்லை. பில்லி, “நான் அவரை கூப்பிடுவேன் என்று நம்புகிறேன்” என்று நினைத்து, “இயேசுவே?” என்று சத்தமாக அழைத்தார்.

அந்த மனிதர் திரும்பி, அவரை நோக்கி கரங்களை நீட்டினார்.

பில்லிக்கு ஞாபகம் உள்ள கடைசி காரியம் அதுதான். அவர் சுயநினைவை இழந்து, விழுந்தார், ஆனால் அந்த முகத்தை அவருடைய நினைவை விட்டு எடுத்துப் போடவே முடியவில்லை. அந்த முகத்தை வரைய எந்த ஓவியனாலும் முடியாது. அது அதிகார தோரணையுடன் காணப்பட்டது. அவர் பேசுவாரானால், உலகம் முடிவுக்கு வந்து விடும் போல் காணப்பட்டது, ஆனால் அவருடைய கண்களில் இரக்கமும் தயவும் அன்பும் சுடர்வீசின.

பொழுது புலர்ந்த போது, பில் தம்முடைய சுயநினைவிற்கு வந்தார். அவர் அப்போதும் துடைப்பப்புல் வயலிலேயே இருந்தார், குளிர்ந்த இரவுநேர காற்றின் காரணமாக நடுங்கிக்கொண்டிருந்தார். அவருடைய கண்ணீரால் பைஜாமா ஆடை ஈரமாகியிருந்தது. அவர் வீட்டிற்குச் சென்று உடையுடுத்தி விட்டு, அதைப்பற்றி அவருடைய மேய்ப்பருடைய

அபிப்ராயத்தைக் கேட்கும்படி உற்சாகத்தோடு கிளம்பி விட்டார்.

# அந்த நாள் எப்படிப்பட்ட ஒரு நாளாக இருக்கும்!

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

57. அதுதான் எனக்கான நாள், நாட்களில் எல்லாம் மகத்தான நாள் அதுவே! நாட்களிலெல்லாம் ஆசீர்வதிக்கப்பட்ட அந்த நாளுக்காக நாம் பிரசவ வேதனைப்பட்டு, காத்துக் கொண்டிருக்கையில், அந்த உயிர்த்தெழுதல் நம் எல்லாருக்கும் எவ்வளவு முக்கியமானதாக இருக்கும் என்பதைப் பார்க்கும் போது!

58. ஏதோவொரு நாளில், இந்த வயது சென்ற பெலவீனமான, மெலிந்த, தலை நரைத்த, வலுவிழந்த தாய்மார்கள் மறுரூபமடைவார்கள் என்ற வாக்குத்தத்தத்தை அது நமக்குக் கொடுக்கிறது. அங்கே அமர்ந்திருக்கும் தாய் மட்டுமல்ல, அவள் மட்டுமல்ல, அவளோடு கூட அவளுடைய முழுக் குடும்பமும் மறுரூபமாகி விடும்.

59. அந்த நாள் எப்படிப்பட்ட ஒரு நாளாக இருக்கும்! நாம் மிகவுமாக நேசித்த அந்த முகங்களை நாம் காணும்போது, அது என்னவொரு நேரமாக இருக்கும். அந்தக் காலையில், நாம் நம்முடைய அன்பார்ந்தவர்களைக் கண்டு, அவர்கள் அப்போது எப்படியிருப்பார்கள் என்பதைக் கவனிக்கும் போது, அது என்னவொரு வித்தியாசமாக இருக்கும். அப்போது எல்லா சஞ்சலங்களும் நீங்கிப் போய் விடும். கடினமான

துன்பங்கள் எல்லாம் சரியாகி விடும். மரணத்தின் வெளிறிப்போன கன்னங்கள் அதற்கு மேலும் இருக்காது. கண்களிலிருந்து சொரியும் கண்ணீர் அதற்கு மேல் இருக்காது. உயிர்த்தெழுதலானது அவை எல்லாவற்றையுமே வாக்குப்பண்ணுகிறது. அங்கே அடக்க ஆராதனைகள் அதற்கு மேலும் இருக்காது. ஈமச்சடங்குகளைச் செய்பவர் (*undertaker*) மரித்த சரீரத்திற்குத் தைலமிட்டு, அதை வெளியே இழுத்து, அது இயற்கையாக தோற்றமளிக்கும்படி அதற்கு வர்ணம் தீட்டவும் மற்ற காரியங்களைச் செய்யுமிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு துண்டு கல்லைப் போல குழந்தையின் கன்னத்தில் தட்டிக் கொடுப்பது அதற்கு மேலும் இருக்காது. அது அங்கே மீண்டும் ஒருபோதும் தேவைப்படாது.

60. அப்போது, அங்கே நின்று கொண்டிருக்கும் நம்முடைய அன்பார்ந்தவர்களையும், நம்முடைய தாய்மார்களையும், நம்முடைய இனஜனபந்துக்களையும் (*kindred*), நம்முடைய நண்பர்கள் எல்லாரையும் காணும் அந்த வேளையைக் குறித்து நான் எண்ணிப்பார்க்கிறேன்; நாம் அவர்களை அவர்களுடைய அழியாமையின் சரீரங்களிலும், அவர்களுடைய வானத்திற்குரிய

சரீரங்களிலும் கண்டு, அவர்களுடைய குணாதிசயத்தைக் கவனித்து, அவர்கள் எப்படியாக தங்கள் இனிமையோடும், அமரிக்கையோடும் நடந்து கொள்கிறார்கள் என்பதைக் காணும்போது. அதற்கு மேலும் பதட்டமோ அல்லது ஏமாற்றங்களோ இருக்காது. அவர்கள் அப்போது கர்த்தராகிய இயேசுவின் சாயலில் நின்று கொண்டிருப்பதைக் காணும்போது, அது ஒரு அற்புதமான நாளாக இருக்கும்.

61. நாம் அவர்களை சந்திக்கும் அந்த ஆறுதலின் வேளைக்காக நாம் ஒவ்வொருவரும் நம்முடைய உள்ளங்களில் அதை எதிர்நோக்கியவர்களாய் ஏங்கிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் தங்கள் அன்பார்ந்தவர்களைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள், ஒருக்கால் மரித்துப் போய்விட்ட தங்கள் தாயைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கலாம். நீ மீண்டும் அவளைக் காணும்போது, அது எப்பேர்ப்பட்ட ஒரு நாளாக இருக்கும்! அப்பாவுக்கும், சகோதரனுக்கும், அன்பார்ந்தவர்கள் எல்லாருக்கும் அது எப்பேர்ப்பட்ட ஒரு நாளாக இருக்கும்...

62. இப்பொழுது, நானும் கூட சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். நான் என்னுடைய

குடும்பத்தினரைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன், அந்த நாள் எனக்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்ததாய் இருக்கும்.

63. அநேகமாக அந்த உயிர்த்தெழுதல் காலையில் என்னை முதலாவது சந்திக்க வருவது என்னுடைய **சிறு ஷாரோனாயிருக்கும்** (*Sharon*) என்று நினைக்கிறேன். இல்லை, அவள் நடுங்கிக் கொண்டிருக்க மாட்டாள். அந்தப் பிசாசு அவ்விடத்தில் நுழைய முடியாது. எந்த மூளைக்காய்ச்சலும் அந்த தேசத்தை ஒருபோதும் தொடவே முடியாது. அவள் என்னைப் பார்த்து, போய் வருகிறேன் (*good-bye*) என்று கையசைக்க மாட்டாள். அவள் தன்னுடைய கரங்களை (என்மேல்) போட்டுக் கொண்டு, “அப்பா!” என்று உரத்த சத்தமிடுகையில், அந்தச் சிறு நீலநிற கண்கள் பளிச் பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருக்கும். நான் அவளைக் கண்டு, அவள் மீண்டும் ஒருபோதும் மரிப்பதில்லை என்பதை அறிந்து கொண்டு, அதெல்லாம் முடிந்து விட்டது என்பதை அறிந்து கொள்ளும் போது, மகிழ்ச்சியடைவேன், அதனால் தான் நான் உயிர்த்தெழுதலைக் குறித்து மிகவும் கடினமாகப் பிரசங்கித்தேன்.

64. அதன்பிறகு நான் **அவளுடைய தாயாரைக் காண்பேன்**, அது என்னுடைய மகன் பில்லியின் தாயார். நான் தொடர்ந்து நீண்ட நேரமாக அங்கே அதைக் குறித்த நினைவுகளை அதிகமாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். இங்கே மேலேயிருக்கும் திரு. காம்ப் அவர்களைக் கொண்டு, நான் அவளைத் தூக்கிக் கொண்டு வந்ததை நினைவுகூருகிறேன், அவர் கடைசியாக அவளை வைத்து ஓட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்தார், நான் அவளைத் தொடர்ந்து ஒரு காரில் சென்று கொண்டிருந்தேன்.

65. நாங்கள் அங்கே ஏழாவது தெருவில் போன போது, 18 மாத (குழந்தையாகிய) பில்லியை அவர்கள் எப்படியாக வெளியே தெருவில் கொண்டு வந்து, அவள் அவனைக் காணும்படி செய்தார்கள். அவள் படுத்துக் கொண்டே கதறி அழுதபடி அவளுடைய குழந்தையை உற்று நோக்கினாள், ஆனால் அவளால் அவன் அருகில் போக முடியவில்லை.

66. அதன்பிறகு ஈமச்சடங்கு பொறுப்பாளர் (*undertaker*) சாலையினூடாக வந்து, ஏழாவது தெருவுக்குப் போனார். அந்நேரத்தில் இங்கிருக்கும் அம்மா தான் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள், அவன் ஒரு ஜோடி

சின்னஞ்சிறு குட்டையான காற்சட்டைகளை (*pants*) அணிந்தபடி, ஒரு சிறு சிவப்பு நிற தொப்பியை பக்கவாட்டில் இழுத்தபடி அவனுடைய தலையில் அணிந்து கொண்டும் வெளியே முற்றத்தில் நின்று கொண்டிருந்தான். அந்தத் தாய் அந்த ஆம்புலன்ஸின் பின்பகுதியில் இருந்த அக்கட்டிலின் மேல் படுத்தபடி என்னைக் கவனித்துக் கொண்டிருந்தாள், அவள் தன்னுடைய பிள்ளை முற்றத்தில் நின்று கொண்டிருப்பதைக் கண்ட போது, அவள் தன்னுடைய கடைசி பிரயாணத்தைச் செய்து கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்து, அவள் அந்தக் கட்டிலிலிருந்து எழுந்து உரத்த சத்தமிட்டு, முற்றத்தில் இருந்த தன்னுடைய பிள்ளையை நெஞ்சார அணைத்துக் கொள்ளும்படி எலும்பும் தோலுமாயிருந்த தன்னுடைய கரத்தை வெளியில் போட்டாள். ஆனால் அவளால் அவனை அணைத்துக் கொள்ள முடியவில்லை.

67. ஓ, அந்நாளில் அவளைக் காண்பது சந்தோஷமாக இருக்குமே. இல்லை, அவள் எலும்பும் தோலுமான கரங்களைக் கொண்டிருக்க மாட்டாள், அந்தக் கன்னங்கள் மூழ்கிப் போவதுமில்லை. ஆனால் அவள் வானத்தின் ஒரு இராணியாக (a *queen of heaven*), ஒரு தாயாக,

தெய்வீக அழகைக் கொண்டவளாய் நிற்பாள். அவளுடைய கறுத்த கண்கள், அண்டங்காக்கைகளின் சிறகுகளைப் போன்று அவ்வளவு கறுப்பாயிருந்து, சந்தோஷத்தால் பளிச் பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருக்கும். அவள் சரீரம் எல்லாம் கூனிப் போகாது, அங்கே அந்த காசநோய் பிசாசு ஒருபோதும் அந்த தேசத்திற்குள் நுழைவதில்லை, ஆனால் அவள் அழிவில்லாதவளாய் அவருடைய சாயலில் நிற்பாள்.

68. அதன்பிறகு, அடுத்ததாக என்னைச் சந்திக்க வருவது **எட்வர்ட்டாக** இருக்கும் என்று நினைக்கிறேன், நாங்கள் அவனை “ஹம்பி” என்று சுருக்கமாக அழைப்போம். பிரன்ஹாம் குடும்பத்தின் ஒன்பது பெரிய இணைப்பு சங்கிலிகளில் அவன் தான் முதலாமவன் ஆவான். உடைக்கப்பட்டு போன முதலாவது இணைப்பு அவன் தான்; அவன் எனக்கு அடுத்தவன். எட்வர்ட் என்னை நோக்கி ஓடி வருவதை நான் காண்பேன். அவன் 19 வயதில் ஒரு இளைஞனாக மரித்த போதிலும். நான் அவனுடைய கரத்தைப் பற்றிப்பிடிக்கும்போது, நாங்கள் சிறு பையன்களாய் இருந்த போது நடந்தவைகளைக் குறித்துப் பேசுவதற்கு எங்களுக்கு அதிக காரியங்கள்

இருக்கும் என்பதில் நிச்சயமுடையவனாயிருக்கிறேன், ஏனென்றால் நாங்கள் சிநேகிதர்களாயிருந்தோம், நாங்கள் ஒன்றாக ஒட்டிக் கொண்டிருந்தோம். உண்மையான சகோதரர்கள் செய்வதைப் போன்று, நான் அவனுடைய சூட்டையும் காரியங்களையும் அணிந்து கொள்ள அவன் அனுமதிப்பான். நான் அவனை மீண்டும் காணும்போது, அது ஒரு சந்தோஷமாயிருக்கும்.

69. அவன், “பில்லி, என்னுடைய செய்தி உனக்குக் கிடைத்ததா? நான் இவ்வுலகத்தை விட்டுப் போய்க் கொண்டிருந்த சமயத்தில், நீ ஒரு கால்நடைப் பண்ணையில் வேலைபார்த்துக் கொண்டிருந்தாய். ஆனால் நான் மருத்துவமனையில் இருந்தபோது, ‘எல்லாமே சரியாக உள்ளன என்று பில்லியிடம் கூறி விடுங்கள்’ என்று நான் செய்தி அனுப்பியிருந்தேனே” என்று இவ்விதமாக ஏதோவொன்றைக் கூறுவதை நான் கேட்பேன்.

நானோ, “ஆமாம், அந்தப் பரந்த புல்வெளியில் இருக்கும்போது, உன்னுடைய செய்தி எனக்குக் கிடைத்தது” என்று கூறுவதற்கு மகிழ்ச்சியாயிருப்பேன்.

70. அதன்பிறகு, அடுத்ததாக வருவது என்னுடைய **தகப்பனாராக** இருக்கும் என்று நினைக்கிறேன். அறுந்து போன அடுத்த இணைப்பு அவர் தான். இல்லை, அடுத்த இணைப்பு **சார்லஸ்** என்று நினைக்கிறேன், அவன் ஒரு வாலிப சகோதரனாயிருந்தான்.

71. அவன் வெறுமனே ஒரு சிறு பையனாயிருந்த போது, அவனுக்கு ஒரு மோட்டார் வாகன விபத்து ஏற்பட்டது. அவன் எப்போதுமே நடக்கும்போது, அவனுடைய வலது காலை இழுத்து இழுத்து நடப்பான். ஆனால், உங்களுக்குத் தெரியும், நான் அவனைக் காணும்போது, அவன் அந்தக் காலை இழுத்து வைத்து நடக்க மாட்டான். அதெல்லாம் சரியாகி, ஒரு வாலிப மனிதனின் மகிமையோடு நின்று கொண்டிருப்பான்.

72. அவன் புன்சிரிப்போடு இவ்விதமான ஏதோவொன்றை என்னிடம் கூறுவான். அவன், “ஆமாம், பில்லி, இங்கே எந்த விபத்துமேயில்லை. எனக்கு மோட்டார் வாகன விபத்து ஏற்பட்டதற்கு முந்தின இரவு எனக்கு ஞாபகம் இருக்கிறது, அன்று இரவு நீ என்னிடம் பேசினாய், அப்போது நம்முடைய சிறிய தாழ்மையான வீட்டின் சிறு வளைவு பகுதியில் நின்று கொண்டிருந்தாய்” என்று

கூறுவான், நான் இப்பொழுதே அதன் உச்சியை கவனித்துக் கொண்டிருக்கிறேன். "நான் போவதற்கு ஒரு சில மணி நேரங்களுக்கு முன்பு, நீ கர்த்தரைக் குறித்து என்னிடம் பேசினாய். நான் போகும்போது, நீ பிரசங்க பீடத்தில் இருந்து பிரசங்கித்துக் கொண்டிருந்தாய்" என்று கூறுவான்.

73. அதன்பிறகு **அப்பா** வருவார். ஓ, நான் அவரைக் காணலாம். அவர் எனக்கு அதிக கடினமான சவுக்கடிகளைக் கொடுத்த போதிலும், சரியாக அதுதான் எனக்குத் தேவையாயிருந்தது. ஆனால் நான் அடர்த்தியான அந்தக் கருமையான அலையலையான முடியைக் காண்பேன், எப்பொழுதும் இருந்ததைக் காட்டிலும் அவர் அந்நாளில் அதிகப் பிரகாசமாக இருப்பார். அவர் என்னை நோக்கிப் பார்த்து, "என் மகனே, உனக்குத் தெரியும், அப்பா அவருடைய பிள்ளைகளைப் போஷிக்கும்படி இனிமேல் ஒருபோதும் பசியோடு மேஜையை விட்டு எழுந்திரிக்க மாட்டார், இங்கே எங்களுக்கு நிறைய உள்ளது. இங்கே ஒருபோதும் வறுமையே இருப்பதில்லை" என்பார்.

74. அவரைக் காணும்போது, அவர் ஒரு நாளைக்கு ஐம்பது அல்லது 75 சென்ட் காசுகளுக்கு *(cents)* வேலை செய்து,

பிள்ளைகள் சாப்பிட வேண்டுமென்று (சாப்பாட்டு) மேஜையை விட்டு எழுந்து, மீண்டும் வேலைக்குத் திரும்பிச் செல்வார்... அவருடைய சட்டையின் பின்பக்கம் அதிகமாக சூரிய ஒளி பட்டதினால் எரிந்து போகும் அளவுக்கு அவர் மிகவும் கடினமாக வேலை செய்தார், அம்மா அதை ஒரு கத்தரிக்கோலைக் கொண்டு வெட்டுவார்கள்.

75. அவர் இவ்விதமாக ஏதோவொன்றைக் கூறுவதைக் நான் கேட்பேன், “பில், நான் மரித்துக் கொண்டிருந்த போது, நீயும் சகோதரன் ஜார்ஜ்-ம் எனக்காக ஜெபிக்க வந்த அந்த இரவு உனக்கு ஞாபகம் உள்ளதா? இரண்டு வெண்ணிற தூதர்கள் படுக்கைக்கு அருகில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்றும், கால்பக்கத்தில் ஒரு சிவப்பு நிற தூதன் நின்று கொண்டிருக்கிறான் என்றும் நான் அம்மாவிடம் கூறினேன் என்று உனக்குத் தெரியும். சிவப்பு நிற தூதன் என்னைப் பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான், ஆனால் அந்த வெண்ணிற தூதன் இடையே நின்றானே. கடைசியாக அவர்கள் என்னை வீட்டிற்குக் கொண்டு சென்றார்களே” என்று கூறுவார்.

76. மேலும் அதன்பிறகு, அறுந்து போன அடுத்த இணைப்பு, அல்லது மரித்துப் போன **ஹவார்டு** வருவான். நான் ஹவார்டைக்

காண்பேன்; நாங்கள் அத்தேசங்களில் ஒன்றாக நெருங்கிய நண்பர்களைப் போல வசித்த போது, எல்லாவிடங்களிலும் அவன் ஒரு ஊழியக்காரன் என்று அழைக்கப்பட்டான், அவனுக்கு பெரிய தனித்தன்மை *(personality)* இருந்தது, ஆனால் அவனுடைய கூட்டாளிகள் அவனை நிராகரித்து விட்டனர். நான் அவனிடம் பேசின கடைசி வார்த்தை, அவன், "நான் போகும் போது, பில்..." என்றான்.

77. அவன் மரித்துப் போவதற்கு ஏறக்குறைய நான்கு வருடங்களுக்கு முன்பு, ஒரு தரிசனத்தின் மூலம், அவன் மரித்துப் போவதை நான்-நான் கண்டேன். பாப் *(Pop)* அவர்கள் அவனுடைய கல்லறையை அடையாளமிடுவதை நான் கண்டதாக அவனிடம் கூறி, அதுதான் அடுத்தது என்று கூறினேன்.

78. அவனோ, "நீ எனக்காக செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிற ஒரு காரியம் உண்டு. நான் என்னுடைய ஜீவியத்தை ஒழுங்கீனமாகக் குழப்பி விட்டிருக்கிறேன். நான் விவாகம் செய்தும் மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் செய்தும் இருக்கிறேன். என்ன நடந்தது என்றே எனக்கு-எனக்குத் தெரியவில்லை" என்றான்.

நான், “ஹவார்டு, நீ அவரை விசுவாசிக்கிறாயா?” என்று கேட்டேன்.

79. அவன், “எனக்குள் இருக்கிற எல்லாவற்றைக் கொண்டும் நான் அவரை விசுவாசிக்கிறேன்” என்றான். அவன் போவதற்கு ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பு, அவன் தேவனோடு சமாதானம் செய்து கொண்டான், சகோதரன் நெவிலும், அவர்களும் அங்கே இருந்தார்கள். அவன், “நீ ஒரு காரியத்தை செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். பில்லி, நான் போகும்போது, அவர்கள் எனக்காக, ‘அவர் புரிந்து கொண்டு, **“**நன்றாய் செய்தாய்**”** என்று கூறுவார்’ என்ற பாடலைப் பாட வேண்டும்” என்றான்.

80. நான் ஹவார்டின் கரத்தைக் குலுக்குவதற்கு முன்பு என்று நம்புகிறேன், அவன் நிறுத்தி விட்டு, என்னை நோக்கிப் பார்த்து, “பில்லி, அவர் புரிந்து கொண்டார்” என்று கூறுவதை நான் கேட்பேன்.

81. அதன்பிறகு, **சகோதரன் சிவார்டும், சகோதரன் ஃபிராங்க் பிராயும், சகோதரன் ஜார்ஜ் டீ ஆர்க்கும்** வருவார்கள். ஓ, உயிர்த்தெழுதல் எனக்கு மிக முக்கியமானது. அந்த மகத்தான முடிசூட்டப்படும் வேளைக்காக நான்

எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன். அதன்பிறகு வெளிச்சமானது பரவத் துவங்கும் போது, நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவோம். நாம் புரிந்து கொள்வோம், நமக்கு அறிமுகமானவர்களையும், அங்கேயிருப்பவர்களையும் நாம் நினைவுகூருவோம்.

82. மேலும் அநேகர் அங்கேயிருப்பார்கள் - **அங்கே இருப்பார்கள் என்று நாம் நினைத்துக் கூட பார்த்திராத அநேகரும் அங்கேயிருப்பார்கள்.** "தொல்லைகளுக்குட்பட்ட மனிதத் தண்ணீர்களின் *(human troubled waters)* மேல் போடப்பட்ட ஆகாரம் அந்நாளில் நம்மிடம் திரும்பி வரும்" என்று நான் விசுவாசிக்கிற அந்நேரம் அதுவாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரியும். ஜனங்கள் மேலுள்ள நம்முடைய சாட்சியைக் கேட்பவர் உள்ளத்தில் ஏற்படும் விளைவைப் பொறுத்து அவர்களுடைய நடவடிக்கை என்னவென்பதை நாம் புரிந்து கொள்ளாமல் இருப்பதை நாம் காணும் போது, அவர்கள் அங்கேயிருப்பது சாத்தியம் தான். அது என்னவொரு நாளாக இருக்கும்!

83. மேலும், அப்போது, நாம் விதைத்த விதைகள், அவர்கள் என்ன ஆவார்கள் என்று நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டோம், ஆனால்

இதோ அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விலையேறப்பெற்ற கனிகளைத் தந்தார்கள், நாம் அந்நாளில் அவர்களைக் காண்போம், கீழ்ப்படியாத பிடிவாதமுள்ள *(wayward)* அன்பார்ந்தவர்களையும், உறவினர்களையும் நாம் அந்நாளில் காண்போம்.

84. மனந்திரும்பினவர்களாய் நான் கண்ட ஆயிரக்கணக்கானோர்களைக் குறித்து எண்ணிப்பார்க்கிறேன், ஆம், இப்பொழுது மில்லியன் கணக்கானோர் (இலட்சக்கணக்கானோர், 1 மில்லியன் என்பது 10 இலட்சமாகும் - மொழிபெயர்ப்பாளர்) மனந்திரும்பிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களின் ஊழியம் என்னவாக இருந்தது. ஓ, அது ஒரு உயிர்த்தெழுதலைக் காட்டிலும் அதிகமான பேரை எடுத்துக் கொள்ளும். சுற்றிலும் போய் கரங்களைக் குலுக்கவும், நான் இப்பொழுது அறிந்திராத காரியங்களை அறிந்து கொள்ளவும் ஒரு நித்தியத்தையே அது எடுத்துக் கொள்ளும்.

*செய்தி:* **தாய்மார்களின் தினம்,** மே 10, 1959, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

★★★★★

# என்றோ ஒருநாள் அவர் வருவார்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

நான் அப்படியே விழுந்து என்னுடைய சிறிய பழைய அழுக்கான அங்கே இருந்த அறையில் அழ துவங்கினேன்.

267 நான் அப்படியே தூங்கி இருக்க வேண்டும். நான் தூக்கத்திலிருந்தேனோ அல்லது என்ன சம்பவித்ததோ எனக்கு தெரியாது.

268 நான் மேற்கு பக்கமாய் இருக்க எப்பொழுது வாஞ்சிப்பேன். நான் எப்பொழுதுமே அவர்களுடைய தொப்பிகளில் ஒன்றை அணிந்துகொள்ள விரும்புவேன். என்னுடைய தகப்பனார் அவருடைய வாலிப நாட்களில் குதிரைகளை அடக்குவார். நான் அவர்களுடைய தொப்பிகளில் ஒன்றை எப்பொழுதுமே அணிந்து கொள்ள விரும்பினேன். சகோதரன் டீமாஸ் ஷ்காரியன் நேற்று எனக்கு ஒன்றை வாங்கித் தந்தார். என்னிடத்தில் முதலில் (இருந்த) ஒன்று அதைப்போன்று இருந்ததில்லை. அந்தவிதமான அவர்களுடைய மேற்கத்திய தொப்பிகளில் ஒன்று.

269 நான் பரந்த புல்வெளியினூடாக தொடர்ந்து, அந்த நான்கு சக்கர பாரவண்டியில் ஒரு சக்கரம் உடைந்திருக்கிறது. பண்ணையின் மேல் அடையாளம், விற்பதற்காக' என்ற அந்த பாடலை பாடிக்கொண்டே போய்க்கொண்டு இருக்கிறதாக' நினைத்தேன். நான் தொடர்ந்து

போகையில், ஒரு பழைய மூடப்பட்ட நான்கு சக்கர பாரவண்டியை கவனித்தேன். ஒரு பழைய பரந்த உறுதியான பாத்திரம் போன்று இருந்தது. சக்கரமோ உடைந்திருந்தது. நிச்சயமாக அது என்னுடைய முறிந்துபோன குடும்பத்திற்கு பிரதிநிதித்துவமாய் இருந்தது. நான் நெருங்கி வந்தபோது, நான் நோக்கிப் பார்த்தேன். அங்கே உண்மையாகவே அழகான ஒரு ஒரு வாலிபப்பெண், சுமார் இருபத்தி மூன்று வயதிருக்கும். வெண்மையாக பறந்து கொண்டிருக்கும் தலைமுடியும், நீல கண்களும், வெண்மையான உடையும் உடுத்தி இருக்கக் கண்டேன். நான் அவளை நோக்கிப் பார்த்தேன். நான், "நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்?" என்றேன். பின்னர் கடந்து சென்றேன்.

அவள், "ஹலோ அப்பா" என்றாள்.

270 நான் அப்படியே திரும்பினேன். நான், "அப்பாவா?" என்று கேட்டேன். நான், "ஏன், குமாரி, நீ...நீ என்னைப் போன்ற வயதுடையவளாய் இருக்கும் போது, நான் எப்படி உன்னுடைய அப்பாவாக இருக்க முடியும்?" என்று கேட்டேன்.

271 அவள், "அப்பா நீர் எங்கிருக்கிறீர் என்று உமக்கு தெரியவில்லையா?" என்று கேட்டாள்.

அப்பொழுது நான், “நீ என்ன சொல்லுகிறாய்?” என்றேன்.

272 அதற்கு அவள், “இது பரலோகம்” என்றாள். “பூமியின் மேல் நான் உம்முடைய குட்டி சாரோனாக இருந்தேன்” என்றாள்.

நான், “ஏன், தேனே, நீ ஒரு சின்ன குழந்தையாய் இருந்தாயே” என்றேன்.

273 “அப்பா, சிறு குழந்தைகள் இங்கே சிறுகுழந்தைகள் அல்ல. அவர்கள் அழிவில்லாதவர்கள். அவர்களுக்கு வயதாகிப் போவதில்லை, அதாவது அவர்கள் ஒருபோதும் வளருவதில்லை” என்றாள்.

274 நான், “நல்லது, சாரோன், தேனே, நீ ஒரு அழகான வாலிப ஸ்திரீயாய் இருக்கிறாயே” என்றேன்.

அவள், “அம்மா உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறாள்” என்றாள். நான், “எங்கே?” என்று கேட்டேன்.

அவள், “உயரே உம்முடைய புதிய வீட்டிலே” என்றாள்.

275 நான், “புதிய வீட்டிலா?“ என்று கேட்டேன். பிரான்ஹாம்கள் நாடோடிகளாக

இருக்கின்றனரே. அவர்களுக்கு வீடுகளே கிடையாது. நான், "தேனே, எனக்கு வீடே இருந்ததில்லையே" என்றேன்.

276 அதற்கு அவள், "ஆனாலும் அப்பா உமக்கு இங்கே மேலே ஒன்று இருக்கிறது" என்றாள். ஒரு குழந்தையாய் இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனால் அது அவ்வளவு உண்மையாக எனக்கு இருக்கிறது. (சகோதரன் பிரான்ஹாம், "அழுகிறார்" - ஆசி.) அதைக் குறித்து நான் சிந்திக்க துவங்குகையில் அவை அனைத்தும் மீண்டுமாய் நினைவுக்கு வருகின்றன. மேலும், "அப்பா இங்கே உமக்கு ஒன்று இருக்கிறது" என்றாள். அங்கே எனக்கு ஒன்று இருக்கிறது என்று எனக்கு தெரியும். என்றோ ஒரு நாள் அங்கு நான் செல்வேன். அவள், "பில்லிபால், என்னுடைய சகோதரன் எங்கே?" என்று கேட்டாள்.

277 அதற்கு நான், "நான் அவனை திருமதி.பிராயிடம் ஒரு சில நிமிடங்களுக்கு முன்புதான் விட்டுவிட்டு வந்தேன்" என்றேன்.

மேலும் தொடர்ந்து அவள், "அம்மா உம்மை பார்க்க விரும்புகிறாள்" என்றாள்.

278 நான் திரும்பி பார்த்தேன். அங்கே மகத்தான பெரிய அரண்மனைகள் இருந்தன. தேவனுடைய மகிமை அவைகளை சுற்றிலுமாய் இருந்தது. நான், “என் வீடு இனிமையான வீடு” என்று தூதர்களின் பாடல்குழு பாடிக்கொண்டிருக்கிறதை கேட்டேன். நீண்ட படிகளின் வழியாக வேகமாக என்னால் முடிந்த அளவுக்கு வேகமாக ஓடத்தொடங்கினேன். நான் கதவண்டை வந்தபோது அங்கே அவள் ஒரு வெண்மையான வஸ்திரம் தரித்தவளாய், அந்த கருமையான நீண்ட தலைமுடி அவளுக்குப் பின்னாக கீழே தொங்கிக் கொண்டிருக்க நின்றாள். அவள் தன்னுடைய கரங்களை உயர்த்தினாள். நான் வீட்டிற்கு வேலையிலிருந்து அல்லது வேறொரு காரியத்திலிருந்து களைப்பாய் வரும்போது அவள் வழக்கமாக செய்வதுபோல் உயர்த்தினாள். நான் அவளை கரங்களால் பற்றிப்பிடித்து, “தேனே, நான் சாரோனை கீழே பார்த்தேன்” என்றேன். நான் “அவள் ஒரு அழகான பெண்ணாய் ஆகிவிட்டாளே, அவள் அப்படியாகவில்லையா?” என்று கேட்டேன்.

279 அதற்கு அவள், “ஆம், பில்” என்றாள். அவள், “பில்” என்று கூறி அவளுடைய கரங்களை என்னைச் சுற்றி, என்னுடைய

தோள்களைச் சுற்றி போட்டுக்கொண்டு அவள் என்னை தட்டிக் கொடுக்கத் துவங்கி, (அவள் கூறினாள்) "என்னையும், சாரோனையும் குறித்து கவலைப்படுவதை நிறுத்திக்கொள்ளுங்கள்" என்றாள்.

நான், "தேனே, என்னால் அதை தவிர்க்க முடியவில்லையே" என்றேன்.

280 அவள், "நானும், சாரோனும் உம்மை விட மேன்மையாய் இருக்கிறோம். எங்களைக் குறித்து இனி கவலைப்பட வேண்டாம். எனவே, நீர் அவ்வாறு கவலைப்படமாட்டீர் என்று எனக்கு வாக்களிப்பீரா?" என்று கேட்டாள்.

281 அதற்கு நான், "ஹோப், நான் உனக்காகவும், சாரோனுக்காகவும் அவ்வளவு தனிமையாய் இருக்கிறேன். பில்லி எல்லா நேரத்திலும் உனக்காக அழுகிறான். நான், அவனோடு என்ன செய்வதென்றே எனக்கு தெரியவில்லை" என்றேன்.

282 அவள், "அதெல்லாம் சரியாகிவிடும் பில்" என்றாள். மேலும் அவள், "இனி நீர் கவலைப்பட மாட்டீர் என்று எனக்கு வாக்களியும்" என்றாள். பின்னர் அவள், "உட்காரமாட்டீரா?" என்று கேட்டாள். அப்பொழுது நான் சுற்றும்

முற்றும் பார்த்தபோது அங்கே ஒரு மகத்தான பெரிய நாற்காலி இருந்தது.

283 ஒரு நாற்காலி வாங்க நான் முயற்சித்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. இப்பொழுது முடிக்கும் போது இதை கூறுகிறேன். ஒரு சமயம் நான் ஒரு நாற்காலி வாங்க முயற்சித்தேன். எங்களிடத்தில் சாதாரண அந்த பழைய மரத்தாலான அடிபாகம் கொண்ட நாற்காலிகள்தான் காலை சிற்றுண்டிக்கு பயன்படுத்தப்படும் நாற்காலியாக இருந்தது. அவைகளைத்தான் நாங்கள் உபயோகிக்க வேண்டியதாயிருந்தது. அவைகள் மட்டும்தான் எங்களிடம் இருந்தது. பின்னாக தள்ளி சாய்ந்து கொள்ளும்படியான நாற்காலிகளில் ஒன்றை எங்களால் வாங்க முடிந்தது...அது எந்தவிதமான ஓய்வெடுக்கும் நாற்காலி என்பதை நான் மறந்துவிட்டேன். அதின் விலை பதினேழு டாலர்கள். நீங்கள் மூன்று டாலர்கள் முன்பணம் கொடுத்து வாரத்திற்கு ஒரு டாலர் கட்டலாம். நாங்கள் ஒன்றை வாங்கினோம். ஓ, நான் உள்ளே வரும்பொழுது..., நான், நான் முழுவதுமாக வேலை செய்து, நடு இரவு வரை வீதிகளைச் சுற்றியும் எங்கெல்லாம் பிரசங்கிக்கக்கூடுமோ அங்கெல்லாம் பிரசங்கித்துவிட்டு வருவேன்.

284 ஒரு நாள் என்னுடைய தவணையை செலுத்துவதில் தவறிப்போனேன். எங்களால் அதை சரியாக கட்ட முடியவில்லை. நாளுக்கு நாள் அந்த தவணைப்பணம் அதிகரித்து விட்டது. முடிவில் ஒரு நாள் அவர்கள் வந்து என்னுடைய நாற்காலியை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அந்த இரவை என்னால் ஒரு போதும் மறக்கவே முடியாது. அவள் எனக்கு செர்ரி பழத்தை சமைத்திருந்தாள். பாவம் சிறிய பழைய காரியம். நான் மனமுறிவடையப் போவதை அவள் அவள் அவள் அறிந்திருந்தாள். இரவு ஆகாரத்திற்குப் பின்னர் நான், "தேனே இன்றிரவு நீ எவ்வளவு நன்றாய் இருப்பதைக் குறித்து என்ன?" என்று கேட்டேன்.

285 அவள், "அண்டை வீட்டிலிருக்கிற பையன்களைக் கூப்பிட்டு பள்ளம் தோண்டி மீன்பிடிக்கும் புழுக்களை எடுத்து வைத்திருக்கிறேன். நாம் சிறிது நேரத்திற்கு ஆற்றுக்குப்போய் மீன்பிடித்தாக வேண்டும் என்று நீர் நினைக்கவில்லையா?" என்று கேட்டாள்.

அதற்கு நான், "ஆம், போகலாம், ஆனால்" என்றேன்.

286 அவள் அழ ஆரம்பித்துவிட்டாள். அங்கே ஏதோ காரியம் தவறாக இருந்தது என்று

எனக்கு தெரியும். எனக்கு ஒரு கருத்து இருந்தது. ஏனென்றால் அதை எடுத்துக்கொண்டு போக அவர்கள் வருவதாக ஏற்கனவே ஒரு அறிவிப்பை அனுப்பியிருந்தனர். எங்களால் அந்த வாரத்திற்கான ஒரு டாலர் தவணையை செலுத்த முடியவில்லை. எங்களால் அதை செலுத்த முடியாமற்போயிற்று. எங்களால் அதை செலுத்த முடியவில்லை. அப்பொழுது அவள் அவளுடைய கரங்களை என்னை சுற்றிப்போட்டுக் கொண்டிருக்க நான் கதவண்டை சென்றேன். என்னுடைய நாற்காலி போய்விட்டது.

அவள் அங்கே உயரே என்னிடத்தில் கூறினாள், அவள், “பில், அந்த நாற்காலி உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?” என்று கேட்டாள். நான், “ஆம், தேனே, எனக்கு நினைவிருக்கிறது” என்றேன். “நீர் அதைக் குறித்துதானே நினைத்துக் கொண்டிருந்தீர் இல்லையா?” என்று கேட்டாள்.

அதற்கு நான், “ஆம்” என்றேன்.

287 அப்பொழுது அவள், “இந்த ஒன்றை அவர்கள் கொண்டு போகமாட்டார்கள். இந்த ஒன்றுக்கு கிரயம் செலுத்தப்பட்டாயிற்று” என்றாள்.

அவள், "ஒரு நிமிடம் உட்காரும், நான் உம்மிடத்தில் பேச விரும்புகிறேன்" என்றாள்.

நான், "தேனே, எனக்கு இது புரியவில்லை" என்றேன்.

288 அவள், "பில்லி, எனக்கு வாக்குக் கொடுங்கள், இதற்கு மேல் நீர் கவலைப்படமாட்டீர் என்று எனக்கு வாக்குக் கொடுங்கள், இப்பொழுது நீர் திரும்பிப் போகப்போகிறீர்" என்றாள். தொடர்ந்து, "இனி நீர் கவலைப்படமாட்டீர் என்று எனக்கு வாக்குக்கொடும்" என்றாள்.

நான், "என்னால் அதைச் செய்யமுடியாதே ஹோப்" என்றேன்.

289 சரியாக அந்த நேரத்தில் நான் என் சுயநினைவுக்கு வந்து தெளிந்தேன். அப்பொழுது அறைக்குள் இருட்டாக இருந்தது. நான் சுற்றும் முற்றும் பார்த்தேன், அவளுடைய கரம் என்னைச் சுற்றிலுமாய் இருப்பதை உணர்ந்தேன். நான், "ஹோப், நீ இந்த அறைக்குள் இருக்கிறாயா?" என்று கேட்டேன்.

290 அவள் என்னை தட்டிக்கொடுக்கத் துவங்கினாள். அவள், "பில், நீர் அதை எனக்கு வாக்களிக்கப் போகிறீரா?" என்று கேட்டாள். தொடர்ந்து அவள், "இனிமேல் நீர்

கவலைப்படமாட்டீர் என்று எனக்கு வாக்குக் கொடுங்கள்" என்றாள்.

நான், "உனக்கு வாக்கு கொடுக்கிறேன்" என்றேன்.

291 அதன்பிறகு அவள் என்னை இரண்டு அல்லது மூன்று முறைகள் தட்டிக்கொடுத்துவிட்டு போய்விட்டாள். நான் குதித்தெழுந்து விளக்கைப் போட்டேன். பின்னர் எல்லா இடத்திலும் பார்த்தேன். அவள் போய்விட்டாள். ஆனால் அவள் அறையை விட்டு போய்விட்டாள். அவள் போகவில்லை. அவள் இன்னும் ஜீவித்துக்கொண்டிருக்கிறாள். அவள் ஒரு கிறிஸ்தவளாய் இருந்தாள்.

292 சமீபத்தில் பில்லியும் நானும் கல்லறைக்கு சென்றோம். அவனுடைய தாய்க்கும், சகோதரிக்கும் பூக்களை எடுத்துக் கொண்டு ஈஸ்டர் காலையில் சென்று நாங்கள் அங்கே நின்றோம். அப்பொழுது என் சிறுபையன் அழ ஆரம்பித்துவிட்டான். அவன், "அப்பா, என் அம்மா, அங்கே கீழே இருக்கிறாள்" என்றான்.

293 நான், "இல்லை, தேனே. இல்லை. அவள் அங்கே கீழே ஒன்றும் இல்லை. சகோதரி அங்கே கீழே இல்லை, இங்கே நமக்கு மூடப்பட்ட

கல்லறைதான் இருக்கிறது. ஆனால் கடலினூடாக சென்றால் அங்கே ஒரு திறந்த கல்லறை இருக்கிறது. அங்கே இயேசு உயிர்த்தெழுந்தார். என்றோ ஒரு நாள் அவர் வருவார். அவர் சகோதரியையும், அம்மாவையும் அவரோடு கொண்டு வருவார்" என்றேன்.

294 நண்பர்களே, இன்றைக்கு நான் யுத்த களத்திலே இருக்கிறேன். என்னால் என்னால் இதற்குமேல் எதையுமே சொல்ல முடியவில்லை. நான் (சகோதரன் பிரான்ஹாம் அழுகிறார் - ஆசி.) தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஒரு நிமிடம் நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

*செய்தி:* **என் சுய சரிதை,** ஏப்ரல் 19, 1959

★★★★★

# நான் அவரை அறிந்து கொள்வேன்




வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **தேவன் மோசேயிடம் பேசினார்,**
ஆகஸ்டு 31, 1953, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

ஃபன்னி கிராஸ்பி, அவள்... சில குற்றம் கண்டுபிடிப்பவர்கள் உள்ளே வந்து - எவ்வாறு என்று அவளிடம் கூறி, அவள் கிறிஸ்தவ பாடல்களையும் மற்றவைகளையும் பாடுவதை குறைகூறிக் கொண்டிருந்தார்கள்... உங்களில் அநேகருக்கு ஃபன்னி கிராஸ்பியைத் தெரியும், அவளைக் குறித்து அறிந்திருக்கிறீர்கள், இன்னுஞ் சரியாகச் சொன்னால், அவள் குருடான கவிஞர் பெண்ணாக இருந்தாள்: அவள் உலகத்திற்கு அதனுடைய மிகச்சிறந்த பாடல்களைக் கொடுத்திருக்கிறாள். நான் எப்பொழுதும் பீட அழைப்புகளில் பாடி வருகிற மிகவும் இருதயத்தைத் தொடுகிற பாடலாகிய, "கனிவான இரட்சகரே, என்னைக் கடந்து சென்று விடாதேயும்" என்ற பாடல் அநேகமாக ஃபன்னி கிராஸ்பினுடையதுதான், மற்றும் இருதயத்தை எளிதாக கிளர்ச்சியூட்டுகிற அந்தப் பாடல்கள் எல்லாவற்றையும் (பாடியிருக்கிறாள்).

ஏதோவொரு சமயத்தில்... ஒருசமயம் அங்கே யாரோஒருவர் கடந்துசென்று, “நீ மறுகரையில் இருந்திருப்பாயானால், நீ... அங்கே அப்படிப்பட்ட ஒரு இடமாக இருந்து... நீ அங்கேயும் குருடாக இருந்திருப்பாயானால், நீ எப்பொழுதாவது அவரை எப்படித்தான் அறிந்து கொண்டிருப்பாய்?” என்று கேட்டார்.

அதற்கு அவள், “நான் எப்படியும் அவரை அறிந்திருப்பேன்” என்று கூறினாள்.

“நீ அவரை எப்படி அறிந்திருப்பாய் என்று நினைக்கிறாய்?” என்று கேட்டார்.

“நான் அவருடைய கரங்களை தடவிப்பார்த்திருப்பேன்” என்றாள். பாருங்கள். அப்போது அவள் திரும்பி, தன்னுடைய நாற்காலிக்கு திரும்பி நடக்கத் துவங்கினபோது, அந்தப் பாடல் வந்தது:

*நான் அவரை அறிந்து கொள்வேன், ஆம், நான் அவரை அறிந்துகொள்வேன்,* (நீங்கள் அதைக் கேட்டிருக்கிறீர்கள்.)

*மீட்கப்பட்டு அவர் பக்கத்தில் நான் நிற்பேன்;*

*நான் அவரை அறிந்து கொள்வேன், ஆம், நான் அவரை அறிந்துகொள்வேன்*

*ஆணிகடாவப்பட்ட அவருடைய கைகளில் உள்ள காயத் தழும்புகளினால்.*

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★

ஃபன்னி கிராஸ்பி அவர்களின் வாழ்க்கை குறிப்பு:

- ✓ ஃபிரான்ஸஸ் ஜேன் வான் ஆல்ஸ்டின் என்ற ஃபன்னி கிராஸ்பி அவர்கள் அமெரிக்க கவிஞராகவும், பாடலாசிரியராகவும், இசைப்பாடல் ஆக்குவோராகவும் இருந்தார்.
- ✓ அவர்கள் 8000 க்கும் மேற்பட்ட ஸ்தோத்திர பாடல்களையும், சுவிசேஷ பாடல்களையும் எழுதியிருக்கிறார்கள்.

- ✓ 100 மில்லியன் பிரதிகளுக்கு மேல் அச்சிடப்பட்டுள்ளன. (1 மில்லியன் என்பது பத்து லட்சமாகும்.)

**பிறப்பு**: மார்ச் 24, 1820, ப்ரூஸ்டர், நியூயார்க், அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**இறப்பு**: பிப்ரவரி 12, 1915, பிரிட்ஜ்போர்ட், கனக்டிகட், அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**கணவர்**: அலெக்ஸாண்டர் வான் ஆல்ஸ்டின்

**பெற்றோர்கள்**: மெர்ஸி கிராஸ்பி, ஜான் கிராஸ்பி

# காலத் திரைக்கு அப்பால்

**நானும் கர்த்தருடைய**
**வருகைக்காகக் காத்துக்**
**கொண்டிருக்கும் என்**
**சகோதரரையும் மற்ற**
**பரிசுத்தவான்களையும்**
**காண தேவனாகிய**
**கர்த்தர் அனுமதித்தார்**



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: **ஐந்தாம் முத்திரை**, மார்ச் 22, 1963, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

345. எனக்கு பிரசங்கத்திற்காக கொடுக்கப்பட்ட சமயம் முடிந்துவிட்டது. ஆனால் உங்களால் முடிந்தால், இன்னும் சில காரியங்களைக் கூற விரும்புகிறேன். (சபையார் "தொடர்ந்து பேசுங்கள்" என்கின்றனர் - ஆசி) இங்கு உஷ்ணமாயிருக்கிறதென்று எனக்குத் தெரியும். எனக்கும் வியர்க்கிறது.

346. ஆனால் கவனியுங்கள், சில காரியங்களை உங்களிடம் கூற நான் விரும்புகிறேன். அவை என் இருதயத்தை அனல் மூட்டும் அளவுக்கு நல்லவைகளாய் அமைந்துள்ளது. நீங்கள் அதை மறந்திருக்கமாட்டீர்கள் என்றே நான் நம்புகிறேன், பாருங்கள். இதை நான் தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக

உங்களிடம் கூறுகிறேன். ஏறக்குறைய ஒரு வருடத்துக்கு முன்பு, என் ஊழியத்தில் இரட்சிக்கப்பட்ட என் ஜனங்கள் வெள்ளை யங்கிகள் தரித்திருப்பதை நான் காண அவர் கிருபையாய் அனுமதித்தார். உங்களுக்கு ஞாபகம் உள்ளதா? (சபையார் "ஆமென்" - ஆசி) நினைவிருக்கின்றதா? புறஜாதி மணவாட்டியை நான் கண்டதை உங்களிடம் கூறினது நினைவிருக்கிறதா? (ஆமென்) இப் பொழுது அவர்கள் அங்கிருக்கின்றனர். நான் அவர்களைக் கண்டபோது அவர் களெல்லாரும் வெள்ளையங்கிகளை அணிந்திருந்தனர்.

347. நான் படுக்கையை விட்டு விழித்திருந்தேன். நான் ஒரு கூட்டத்தை நடத்தி முடித்திருந்தேன். ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்னால் இருக்கும். நான் ஒரு நாள் படுக்கையை விட்டு எழுந்தேன். என் மனைவியைப் பார்த்து, "அன்பே" என்று கூப்பிட்டேன். அவள் அசையவேயில்லை. பிள்ளைகள்... நான் எழுந்திருந்து, பழைய இடத்திலுள்ள பள்ளிக்கு பிள்ளைகளைக்

கொண்டு செல்ல வேண்டியிருந்தது. நல்லது, நான் படுக்கையை விட்டு எழுந்து, சாய்ந்து உட்கார்ந்தேன். எங்களிடத்தில் பழங்கால கட்டில் ஒன்று உண்டு. நான் அவ்விதமாக சாய்ந்து உட்கார்ந்தேன்.

348. "எனக்கு ஐம்பத்து மூன்று வயதாகிவிட்டது. தேவனுக்கென்று ஏதாவது செய்யவேண்டுமென்றால் உடனடியாக நான் செய்ய வேண்டும். இல்லையேல் சற்று கழிந்தால் ஒன்றும் செய்ய முடியாதபடிக்கு வய தாகிவிட்டிருக்கும்" என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

349. ஆகவே நான் அது உண்மை என்று நினைத்தேன். இன்னும் எனக்கு அதிக நாட்களில்லை என்றும், நான் சீக்கிரமாக கடந்து செல்ல வேண்டியவனாயிருக்கிறேன் என்றும் எண்ணினேன். நான் என் தந்தை வாழ்ந்ததைவிட இப்பொழுது ஒரு வயது கூடுதலாகவே வாழ்ந்திருக்கிறேன். பாருங்கள்? "நான் அதிசீக்கிரத்தில் கடந்து செல்ல வேண்டியவனாய் இருக்கிறேன். நான் அதைக் காண்கிறேன். ஆனால் தேவனுக்கென்று

இன்னும் ஒன்றும் செய்யவில்லை” என்றே எண்ணினேன். ’நான் தேவனுக்காக ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்று எப்பொழு துமே விரும்பியுள்ளேன். நான் அவ்விதமாகச் செய்ய வேண்டுமெனில், அதைத் துரிதமாகச் செய்ய வேண்டும். நான் அதை எப்படிச் செய்யப் போகிறேன் என்று அறியாதவனாய் இருக்கிறேன், அவ்வளவுதான், என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

350. அவரது வருகையின்போது நான் உயிர்வாழ்ந்து கொண்டிருக்க வேண்டுமென்னும் விருப்பம் எனக்கு எப்பொழுதும் இருந்து வந்தது. ஏனெனில் நான் ஒரு ஆவியாயிருக்க, ஒரு ஆவியின் உருவம் (spook) கொண்டவனாயிருக்க விரும்பவில்லை.

351. பாருங்கள், நான் அந்த ஆவி உருவத்திலிருக்க பயந்தேன். நீங்கள் அறிவீர்கள், அவ்விதமாக நான் சகோதரன் நெவிலை சந்திப்பேனானால் அவர் ஒரு வெண்மேகமாகவே சுற்றி அசைந்து கொண்டிருப்பார் என்றே நான் எப்பொழுதும்

எண்ணினேன். நான் வேறொரு உணர்வினால் அவரைப் பார்த்து, "ஹலோ, சகோதரன் நெவில்" என்பேன். அவரும் "ஹலோ சகோதரன் பிரான்ஹாமே" என்பார்; ஏனெனில் அவரால் அசைய முடியாதே என்றே எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அது சகோதரன் நெவில் என்பதை மாத்திரமே அறிந்திருப்பேன் என்று நினைத்தேன். ஆம், நான் எப்பொழுதும் செய்வதுபோல் சகோதரன் நெவிலுடைய கரங்களை குலுக்குவேன். மனிதனான நான், அதை மட்டுமே செய்ய அறிந்துள்ளேன். பாருங்கள், அவருடைய கரத்தை குலுக்குவேன்; ஆனால் அவருக்கு கைகள் இராதே. ஏனெனில் அவைகள் மரணக்குழியில் அழுகிப் போனதே என்று நினைத்தேன். பாருங்கள்?

352. "என்னே, நான் இவ்விதமாகக் கடந்து செல்ல வேண்டியதில்லை என்றே நம்புகிறேன்" என்று எண்ணினேன். இப்பொழுது... நான் உங்களுக்கு உண்மையைக் கூறிடவே விரும்புகிறேன். நான் மரிப்பதற்கு பயந்தேன். ஆனால் நான்

கைவிடப்படுவேன் என்ற பயம் எனக்கில்லை. ஆனால் என்னமோ ஒரு ஆவியாக இருக்க நான் விரும்பினதில்லை. உடலைக்கொண்ட ஒரு மனிதனாகவே இருக்க நான் விரும்பி னேன். நான் எடுக்கப்படுதலுக்காக காத்திருக்கவே விரும்பினேன். பாருங்கள். ஒரு ஆவியாக சுற்றிக் கொண்டிருக்க எனக்கு விருப்பமில்லை. இங்ஙனம் எண்ணியவாறே நான் படுத்துக்கொண்டிருந்தேன்.

353. திடீரென்று அதிசயமான ஒன்று சம்பவித்தது. (சகோதரன் பிரான்ஹாம் தன் விரல்களை ஒருமுறை சொடுக்கினார் - ஆசி).

354. இப்பொழுது, அந்த தரிசனங்களைக் குறித்து நீங்கள் அறிவீர்கள். அவைகள் உங்களுக்குப் பழக்கமானதே. இதை நான் தரிசனமென்று கூறத் தலைப்பட்டால், இத்தகைய ஒரு தரிசனத்தை நான் என் சிறுவயது முதல் கண்டதேயில்லை. பாருங்கள்?

355. சடுதியாக இச்சரீரத்தை விட்டுப்போகும் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

'ஊம்-ஓ' என்று நான் நினைத்தேன். "நான் ஏற்கனவே மரித்து விட்டேன், பாருங்கள்," என்றே எண்ணினேன். பாருங்கள்? என் ஆவி என் சரீரத்தை விட்டுப் பிரிந்தது.

356. நான் ஒரு ஸ்தலத்திற்கு வந்தேன். அப்பொழுது, "நான் திரும்பி பார்க்க விரும்புகிறேன்" என்று எண்ணினேன். நண்பர்களே, நான் உங்களுக்கு முன்பு நிற்பது போலவே, அது மிக உண்மையாகவே இருந்தது. பாருங்கள்? நான் திரும்பிப் பார்த்தபோது, என் சரீரம் மாத்திரம் என் மனைவியின் பக்கத்தில் படுத்திருப்பதைக் கண்டேன்.

357. இருதய அதிர்ச்சியின் காரணமாக நான் சடுதியாக இறந்து விட்டதாக எண்ணிக்கொண்டேன். பாருங்கள்? இவ்விதமாக சடுதியாய் மரிப்பதுதான் அருமையானது என்று எண்ணினேன். "இருதய அதிர்ச்சியினால் மரித்துவிட்டேன். நான் துன்பப்படவில்லை" என்று நினைத்தேன். நான் நோக்கிப் பார்த்து, "நல்லது, இப்பொழுது இது விநோதமாயுள்ளதே. அங்கே நான்

படுக்கையில் படுத்திருக்கிறேன்; இங்கே நிற்கிறேன்" என்று எண்ணினேன்.

358. ஆகவே, நான் திரும்பினேன். என் ஆவி சென்ற ஸ்தலத்தில் ஒரு மகத்தான, பெரிய வயல் வெளியைக் கண்டேன். அங்கே ஊதா நிறப் புற்கள் பரவியிருந்தன. இது என்னவென்று நான் அதிசயப்பட்டேன்.

359. நான் பார்க்கையில், சடுதியாக, லட்சக்கணக்கான வாலிபப் பெண்கள் வெள்ளையங்கி தரித்தவர்களாய், தலைமுடி இடுப்பு வரைக்கும் வளர்ந்து, காலில் ஒன்றும் அணியாமல் என்னை நோக்கி ஓடிவருவதைக் கண்டேன். நான் "இது என்ன" என்று நினைத்தேன். அவர்கள் மிகவும் அழகாயிருந்தனர்.

360. நான் திரும்பி அங்கே நோக்கினேன். நான் அங்குதான் (படுக்கையில் – தமிழாக்கியோன்) இருந்தேன். நான் இந்த வழியாய் மேலே நோக்கிப் பார்த்தேன். அதோ அவர்கள் வந்தார்கள். நான் என் நகத்தைக் கடித்துக் கொண்டேன். நான்

நித்திரையில் இல்லையே, அது சரி" ஆனால் என்னால் உணர முடிந்தது. ஆகவே, "நல்லது, ஏதோவொன்று, புதிராய் இருக்கின்றது" என்று எண்ணினேன்.

361. அந்த வாலிபப் பெண்கள் என்னை நோக்கி ஓடிவந்தனர். இவ்வித அழகான பெண்களை நான் ஒருபோதும் கண்டதேயில்லை. அவர்கள் என்னை நோக்கி ஓடி வந்தனர். அவர்கள் என்னிடம் ஓடி வந்தபோது...

362. நான் எவ்விதமானவன் என்று நீங்கள் அறிவீர்கள். நான் ஸ்திரீகளை வெறுப்பவன் என்று எல்லோரும் கூறுவது வழக்கம். ஆனால் அது உண்மையல்ல. பாருங்கள். ஒரு நல்ல ஸ்திரீ விலையேறப் பெற்ற ஆபரணமாயிருக்கிறாள். சாலமோன் கூறுவதைப்போல, இரத்தத்தில் தண்ணீர் கலந்த தண்ணீரைப்போல... நன்னடத்தை கெட்ட ஸ்திரீகளையே நான் வெறுக்கிறேன்.

363. இந்தப் பெண்கள் என்னருகில் வந்து, தங்கள் கரங்களினால் என்னைச் சுற்ற

ஆரம்பித்தனர். இப்பொழுது, இது அசாதாரண ஒன்றாகும். நான் அதற்கு ஒப்புதல் அளிப்பவன் அல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, அவர்கள். இது ஆண்களும் பெண்களுமாக ஒன்றாய் அமர்ந்துள்ள ஒரு கூட்டம். ஆகவே நான் இதை இவ்வழியில் கூற வேண்டியவனாய் இருக்கிறேன். அவர்கள் பெண்கள். அவர்கள் பெண்கள், அவர்கள் என்னை ஒவ்வொருவராகக் கட்டித் தழுவி, "எங்கள் அருமை சகோதரனே" என்றனர். என்னை ஒரு பெண் கட்டித்தழுவின பின்பு, வேறொரு பெண் என்னைக் கட்டித் தழுவினாள்.

364. நான் அங்கே நின்று, பார்த்துக் கொண்டிருந்தேன். "நல்லது, இப்பொழுது, இது என்ன?" என்று நினைத்தேன். அவர்கள் அங்கே நின்றிருந்தனர். "என்ன சம்பவித்தது" என்று எண்ணினேன். நான் திரும்பி கீழே பார்த்தேன். அங்கே நான் கட்டிலில் படுத்திருந்தேன். ஆனால் இங்கே நான் நின்றிருந்தேன். இந்த விசித்திரமான காட்சியை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

365. அந்தப் பெண்கள், “எங்கள் அருமை சகோதரனே,” என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தனர்.

366. சகோதரிகளே, நான் இப்பொழுது கூறப்போவதை நீங்கள் மன்னிக்க வேண்டும். நான் சொல்லுவதின் காரணம் என்னவெனில்... நீங்கள் உங்கள் வைத்தியரைக் கேட்டுப் பாருங்கள். **நமக்கு மாசற்ற சிந்தை இல்லாவிழல் நாம் கிறிஸ்தவர்களல்ல.** எனக்குக் கவலையில்லை...

367. நான் அவ்வாறு என் சிறு வயது முதல் வாழ்ந்து வந்திருக்கிறேன் என்பதை தேவனறிவார். நான் சிறுவனாயிருந்தபோது கர்த்தருடைய தூதன் என்னிடம், நான் புகைபிடித்தல், மது அருந்துதல், அல்லது சரீரத்தை அசுசிப்படுத்தும் எந்த செயல்களிலும் ஈடுபடக்கூடாது என்று கூறியிருந்தார். அது உண்மையாகவே இருந்து வந்திருக்கிறது. தேவ கிருபையினால் நான் அதை அனுசரித்து வந்திருக்கிறேன். இரட்சிக்கப்படுவதற்கு முன்பும்

கூட நான் எந்தப் பெண்ணுடனும் சுற்றித் திரிந்ததில்லை. ஆகவே ...

368. ஆனால் ஒரு மனிதன் ஒரு பெண்ணை கட்டித் தழுவும்போது, அவர்கள் ஆரோக்கியமுள்ளவர்களாயிருந்தால், அவர்களிருவருக்கும் ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. ஏனெனில் அவர்கள் அணுக்களைக் (Cells) கொண்டவராயிருக்கின்றனர். நீ யாராய் இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. இப்பொழுது, உனக்கு அவ்வித உணர்வு இல்லை என்று நீ என்னிடம் கூற வேண்டாம்.

369. ஆனால் நான் ஆவியில் சென்றவிடத்தில் அங்குள்ளவர்களுக்கு அணுக்கள் இல்லாததால் அவர்கள் கட்டித் தழுவினாலும் பாவம் செய்வதில்லை. அங்கே ஒரு வித்தியாசம் இருந்தது. அந்தப் பெண்களிடம் சகோதர அன்பு காணப்பட்டதேயன்றி வேறல்ல.

370. ஒரு ஸ்திரீ தனக்களிக்கப்பட்ட ஸ்தானத்தில் நிலை நின்றால், அவள் பூமியில்

ஒரு விலையேறப்பெற்ற ஆபரணமாயிருக்கிறாள். இயல் நயமுடைய நேர்த்தியான ஒவ்வொன்றையும் நான் விரும்புகின்றேன். அவள் அப்பொழுது கௌரவிக்கப்படும் ஒரு சிலையைப் போன்றிருக்கிறாள். நானும் அதை நம்புகிறேன். ஆனால் அவள் நிலை மாறும்போது, கிறிஸ்துவுக்கும் அந்திக்கிறிஸ்துவுக்கும் என்ன வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசம் அவர்களிருவருக்கும் உண்டு.

371. இயற்கையான ஒவ்வொன்றையும் நான் விரும்புகிறேன். ஒரு அசலான, அழகான குதிரை தன் ரூபத்தில் நிற்பதால் நான் அழகான குதிரையை விரும்புகிறேன். அதைப் போலவே ஒவ்வொன்றையும் விரும்புகிறேன். தேவனுடைய அமைப்பில் நிற்கிற ஒரு அழகான மலை, ஸ்திரீகள், அழகான புருஷர்கள் மற்றவை எல்லாவற்றையும் நான் வியந்து பாராட்டுகிறேன்.

372. ஆகவே, அவர்கள் குறைபாடற்றவராய் இருந்தனர். அவர்கள் ஸ்திரீகள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். அவர்கள் தங்கள் கரங்களில் எவ்வளவாய்க் கட்டித் தழுவினாலும், பாவம் என்பதே அங்கே ஒருபோதும் இல்லை. ஏனெனில் ஆண் பெண் இருவரின் சுரப்பிகளும் (பாலினச் சுரப்பிகளும்) நீக்கப்பட்டிருந்தன. (சகோதரன் பிரான்ஹாம் தன்னுடைய கரங்களை ஒன்று சேர்த்து ஒரு முறை கொட்டுகிறார் – ஆசி) கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர்கள் குறைபாடற்ற என் சகோதரிகளாக இருந்தனர்.

373. நான் நோக்கிப் பார்த்தேன். ஆகவே, நான் துவங்கி... நான் என் கைகளைப் பார்த்தேன். அந்தப் பெண்கள் காண்பதற்கு மிகவும் வாலிபமாயிருந்தனர். நானும் வாலிபனைப் போலிருந்தேன். நான்...

374. நான் இளைஞனாக இருந்தபோதே என் தலைமயிரை இழந்திருந்தேன். நான் சிறியவனாக இருந்தபோது, ஒரு சவரத் தொழிலாளி என் தலைமயிரில் கார்பாலிக்

அமிலத்தை (carbolic acid) கொட்டி விட்டதால் எனக்கு அவ்விதமாயிற்று. அப்பொழுது முதல் அது அவ்விதமாகவே இருந்து வருகின்றது. என் தலையுச்சி வட்டம் (scalp) மிருதுவாக இருப்பதால், நான் மிக விரைவில் தடுமல் கொள்கிறேன் (get cold). என் தலையில் மயிர்க்கால்கள் இருந்த போதிலும், அது கார்பாலிக் அமிலத்தால் சுடப்பட்டதால், இனிமேல் ஒருபோதும் தலைமயிர் முளைக்காது. பாருங்கள்?

375. பல வருடங்களுக்கு முன்பாக நானும் என் மனைவியும்.... என் தலையை மூடுவதற்கென்று ஒரு சிறிய பொய்மயிர்த்தோகையை (hair piece - wig) வாங்கினோம். அது பொய்யான ஒன்றாய் எனக்குத் தோன்றினதால், நான் அதை அணிவதற்கு எப்பொழுதும் வெட்கப்பட்டேன். நான் பொய்யான ஒன்றையும் விரும்பமாட்டேன்.

376. ஆகவே நான் இவ்விதமான ஒரு தொப்பியை அணிந்து கொள்வேன் என்று நினைத்து சிறிது காலம் அவ்விதமாக

அணிந்திருந்தேன். அவர்கள் என்ன செய்தனர் என்று நீங்கள் அறிவீர்களா? அவர்கள் என்னை பேராயர் (Bishop) என்று அழைக்க விரும்பினர். நான் இவ்விதமாக முயல்கிறேன் என்று... பாருங்கள்? ஆகவே நான் "இது வேண்டாம்" என்று கூறிவிட்டேன்.

377. ஆனால், இப்பொழுது ஜன்னல்கள் அல்லது மற்றொன்றை உயர்த்துவதால் சிறிது குளிர்ந்த காற்று என்னைத் தாக்கும்போது, நான் ஜலதோஷத்தினால் அவதியுறுகிறேன்.

378. இதைக் குறித்து அவருடைய கருத்து என்ன என்று கேட்பதற்காக நான் ஒரு மருத்துவரிடம் சென்றேன். அதற்கு அவர், "நல்லது பாருங்கள், உங்களுடைய மயிர்க்கண்கள் (pores) திறந்துள்ளன. நீங்கள் பிரசங்கிப்பதால் வியர்வை உண்டாகிறது. குளிர்ந்த காற்று வீசுவதால், ஜலதோஷக் கிருமிகளால் சளிபிடித்து, அது உமது தொண்டையில் இறங்குவதால் அடுத்த நாள் காலையில் உம்முடைய தொண்டை கரகரப்பாகிவிடுகின்றது. அவ்வளவுதான்" என்றார்.

379. ஆகவே – ஆகவே, ஓ, என்னே, தலைமயிர் உடையவர்களே, நீங்கள் அதற்காக எவ்வளவு நன்றியுடைவர்களாய் இருக்க வேண்டும். அது சரி. பாருங்கள்?

380. நல்லது, இப்பொழுது, நான் கண்டுபிடித்தது, நான்... எனக்கு பல் இல்லாமல் போனாலும், நான் ஒரு நாள் அவைகளைப் பெற்றுக் கொள்வேன்.

381. ஆகவே ஒரு மனிதனோ ஸ்திரீயோ தான் விரும்பினால் தன் தலை மயிரின் இழப்பை ஈடு செய்ய பொய் மயிர்த்தோகை இனிமேல் அணிந்து கொள்ள வேண்டியதில்லை என்றும், ஒரு ஸ்திரீ தன் தலையில் எலிகள் அல்லது ஐந்து சுண்டெலியைப் போன்று வைத்துக் கொள்ளக் கூடாது என்று நான் நினைக்கமாட்டேன். பாருங்கள். ஆனால் நீங்கள் அதைச் செய்வீர்களானால், நீங்கள் அதை எதற்காக செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. பாருங்கள்? நீங்கள் எதற்காக அதைச் செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்ததாகும். ஆகவே...

382. நான் அவ்விதமாக அங்கே நின்று கொண்டிருந்தேன். நான் இழந்து போயிருந்த தலைமயிரும் மறுபடியும் அடர்த்தியாக முளைத்து விட்டது போன்று தோன்றியது. என்னே! நான் ஒரு வாலிபனைப் போலிருந்தேன். அந்தப் பெண்களும் அனைவரும் வாலிபமாயிருந்தனர். இது என்ன விசித்திரமாயிருக்கிறதே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவர்கள் என்னை நோக்கி ஓடி...

383. அவர்கள் ஓடி வருவதைக் காண்கையில், என் மனைவி ஹோப் (Hope) வருவதைக் கண்டேன். அவள் பார்த்தாள்... அவள் இருபத்திரெண்டு வயதில் மரணமடைந்தாள் என்பது உங்களுக்குத் தெரியும். அவள் முன்பிருந்தது போல அழகாகக் காணப்பட்டாள். அவளுக்குக் கறுத்த பெரிய கண்களும் நீண்ட கருமையான தலைமயிரும் இருந்ததென்று அநேகர் அறிவீர்கள். அவள் ஜெர்மனி நாட்டவள். அவளுடைய கறுத்த கூந்தல் பின்புறமாக கீழே தொங்கிக் கொண்டிருந்தது. “இப்பொழுது,

அவள் இங்கே வந்து, அவள் என்னை, பில்லி" என்று கூப்பிடுவாள் என்று நினைத்தேன். அவள் அவ்விதம் அழைப்பாள் என்று அறிவேன். அவள் இங்கே வந்து 'பில்லி' என்று கூப்பிடுவாள் என்று நான் அறிவேன்."

384. நான் கவனித்துக்கொண்டேயிருந்தேன். அங்குள்ள ஒவ்வொரு பெண்ணும் என்னிடம் வந்து, என்னைக் கட்டித் தழுவி, "ஓ, அருமையான சகோதரனே, நாங்கள் உம்மைக் காண்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்" என்று கூறினர். நான் நினைத்தேன்... அனைவரும் ஒரே விதத்தில் உடை அணிந்துள்ளனர். ஆனால் அவர்கள் தலைமயிர், கறுப்பு, சிகப்பு, வெண்பொன்னிறம் என்று வெவ்வேறு வித்தியாசமான நிறத்தில் இருந்தது. அவர்கள் என்னை நோக்கி வந்தார்கள்; ஆனால் அவர்கள் அனைவரும் வாலிபமாயிருந்தனர்.

385. அவள் என்னிடத்தில் வரும்போது, "அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று

மாத்திரம் நான் பார்க்கப்போகிறேன்" என்று நான் நினைத்தேன்.

386. அவள் என்னை நோக்கிப் பார்த்து, 'எங்கள் அருமை சகோதரனே' என்றழைத்தாள். அவள் என்னைக் கட்டி தழுவிவிட்டு, பேசாமல் சென்றாள். மற்ற பெண்களும் என்னிடம் வந்து, என்னைக் கட்டித் தழுவி சென்று விட்டனர்.

387. ஒரு சத்தம் கேட்டது. நான் இவ்விதம் பார்த்தபோது, வாலிபர்கள் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஏறக்குறைய இருபது வயது நிரம்பியதுபோல் காணப்பட்டனர். அவர்களும் கறுப்பு, பொன்நிறம் என்று வித்தியாசமான தலைமயிர் உடையவராய் இருந்தனர். அவர்களும் வெள்ளையங்கி தரித்து, காலணிகளின்றி என்னை அணுகி, கட்டித் தழுவி, "எங்கள் அருமை சகோதரனே" என்றனர்.

388. நான் கீழே நோக்கியபோது, என் உடல் அங்கு இருப்பதைக் கண்டேன். என்ன அதிசயம்" என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

389. ஆகவே, அப்பொழுது ஒரு சத்தம் என்னிடம் பேச ஆரம்பித்தது. 'உன் ஜனங்களிடம் நீ சேர்க்கப்பட்டிருக்கிறாய்' என்று சொன்னது. அந்த சத்தத்தை நான் காணமுடியவில்லை. அப்பொழுது ஒருவர் என்னை இதைப் போன்ற ஒரு உயர்ந்த பீடத்தின்மேல் நிறுத்தினார். "ஏன் அவ்வாறு செய்கின்றீர்?" என்று நான் கேட்டேன்.

அவர், "பூமியில் எங்களுக்கு வழிகாட்டியாய் இருந்தீர்" (Leader) என்றார். ஆகவே நான், "நல்லது என்னால் - என்னால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே" என்றேன்.

390. அந்த சத்தம் என்னிடம் பேசிக் கொண்டிருந்தது. ஆனால் நான் அந்த சத்தத்தைக் காண முடியவில்லை. இப்பொழுது அது எனக்கு மேலாக இருந்தது, என்னுடன் பேசிக்கொண்டிருந்தது.

391. "நல்லது, நான் கடந்து வந்திருப்பேனாகில், நான் இயேசுவைக் காண விரும்புகிறேன். அவரே என் ஜீவன், நான்

அவரைக் காண விரும்புகிறேன்" என்று கூறினேன்.

அதற்கு அவர், "அவரை நீ இப்பொழுது காண முடியாது. அவர் இன்னும் உயர்ந்த ஸ்தலத்தில் இருக்கிறார்" என்றார்.

392. பாருங்கள்? மனிதன் மரித்த பின்பு ஆறாம் ஸ்தலத்துக்குப் போகிறான். அது பலிபீடத்தின் கீழிருக்கும். ஆனால் தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார். இது ஆறாவதாகும்.

393. ஆகவே அவர்கள் அங்கே இருந்தனர். ஒவ்வொருவரும் கடந்து சென்றுக் கொண்டிருந்தனர். நான் கூறினேன். அங்கே உண்மையாகவே அவர்கள் அங்கே லட்சக்கணக்கில் இருந்தனர். நான் அவர்களை ஒருபோதும் காணவில்லை... நான் அங்கே உட்கார்ந்திருந்தபொழுது, இந்தப் பெண்களும், ஆண்களும் என்னிடம் ஓடிவந்து, இன்னும் என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு, "சகோதரனே" என்று அழைத்துக் கொண் டிருந்தனர். நான் அங்கே உட்கார்ந்திருந்தேன்.

394. அப்பொழுது அந்தச் சத்தம், "யாக்கோபு தன் ஜனங்களோடு சேர்க்கப்பட்டதுபோல, நீயும் உன் ஜனங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கிறாய்" என்று கூறிற்று.

"இவர்களெல்லாம் என் ஜனங்களா? இவர்கள் பிரான்ஹாம் குடும்பத்தைச் சார்ந்தவர்களா?" என்று நான் கேட்டேன்.

அவர் "இல்லை, அவர்களெல்லாம் உன் மூலமாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள்" என்று பதில் கூறினார்.

395. நான் சுற்றிலும் நோக்கினேன். அப்பொழுது மிக அழகிய ஒரு ஸ்திரீ என்னிடத்தில் ஓடி வந்தாள். அவளும் மற்ற பெண்களைப் போலவே இருந்தாள். அவள் தன் கரங்களால் என்னைச் சுற்றி, என்னைத் தழுவி, "என் அருமை சகோதரனே" என்று கூறி, என்னை நோக்கிப் பார்த்தாள்.

396. "என்னே! அவள் ஒரு தூதனைப்போன்று காணப்பட்டாள்" என்று நான் எண்ணினேன்.

அவள் கடந்து சென்றாள். அந்த சத்தம் என்னிடம், 'அவள் யாரென்று தெரிகிறதா?' என்று கேட்டது.

"இல்லை, என்னால் அவளை அடையாளங் கண்டுகொள்ள இயலவில்லை" என்றேன்.

397. அதற்கு அது, "அவள் தொண்ணூறு வயது கடந்த பிறகு அவளை நீ கிறிஸ்துவினிடம் வழி நடத்தினாய். ஆகவே அவள் உன்னை அதிகம் மதிக்கிறாள்" என்றது.

"அந்த அழகிய பெண் தொண்ணூறு வயது கடந்தவளா?" என்றேன்.

398. "ஆம், அவள் இனி ஒருபோதும் வயது சென்றவளாக மாறுவதில்லை. ஆகவேதான் அவள், 'அருமையான சகோதரனே' என்று அழைக்கிறாள்" என்று அது கூறினது.

399. "ஓ, என்னே! நான் இதைக் குறித்தா பயந்தேன். இவர்கள் தத்ரூபமாக இருக்கிறார்களே! இவர்கள் வேறெங்கும் செல்வதில்லை. அவர்கள் அங்கு சதாகாலமும்

இருப்பதால் சலிப்பு கொள்வதில்லை" என்று நினைத்துக்கொண்டேன்.

"நான் ஏன் இயேசுவைக் காணமுடியாது?" என்று கேட்டேன்.

400. அப்பொழுது அந்த சத்தம் என்னிடம், "அவர் ஒரு நாள் வருவார். அவர் முதலில் உன்னிடம் வந்து உனக்குத் தீர்ப்பளிப்பார்' என்றது. அது, "இவர்கள் நீ வழிநடத்தின உன்னுடைய ஜனங்கள் உன்னால் மாறுதல் அடைந்தவர்கள் (Converts)," என்று கூறினது.

401. அதற்கு நான், "இவர்களுக்கு வழிகாட்டினதினாலே அதை அனுசரித்து எனக்குத் தீர்ப்பளிக்க வேண்டுமா?" என்று கேட்டேன்.

'ஆம்' என்று பதில் வந்தது.

402. "ஒவ்வொரு வழிகாட்டிக்கும் இவ்வாறே தீர்ப்பளிக்கப்பட வேண்டுமா" என்றேன்.

அது 'ஆம்" என்றது. நான் "பவுலைக் குறித்து என்ன?" என்றேன்.

அவர், "அவனும் அவனுடைய கூட்டத்துடன் நியாயந்தீர்க்கப்படுவான்" என்றார்.

403. "**பவுலின் கூட்டம் பிரவேசிக்குமானால் என் கூட்டமும் பிரவேசிக்க வேண்டும், ஏனெனில் அவன் பிரசங்கித்த அதே வார்த்தையையே நானும் பிரசங்கித்தேன்.**" அதுதான். **அவன் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தான்; நானும் அவ்வாறே ஞானஸ்நானம் கொடுத்தேன்; நான் பிரசங்கித்தேன்..** என்றேன்.

404. அதற்கு லட்சக்கணக்கான அவர்கள் எல்லாரும் ஒன்றாக, "அதன் பேரில்தான் நாங்கள் இளைப்பாறிக்கொண்டிருக்கிறோம்" என்றனர்.

405. என்னே, "இதை மாத்திரம் நான் முன்னமே அறிந்திருந்தால், எல்லோரையும் இங்கு வரவழைத்திருப்பேன். அவர்கள்

ஒருக்காலும் இதைக் காணத் தவறக்கூடாது" என்று நான் நினைத்தேன்.

406. அவர், "இப்பொழுது, ஒரு நாள் அவர் வருவார்; அதன்பின்... நாங்கள் இங்கே புசிப்பதும், குடிப்பதும், நித்திரை செய்வதும் இல்லை. நாங்கள் அனைவரும் ஒன்றாக மாத்திரம் இருக்கிறோம்," என்றார்.

407. அது பரிபூரணமல்ல; அதற்கும் மேம்பட்ட காட்சியாயிருந்தது. பயபக்தியூட்டும் ஒன்றுக்கும் மேம்பட்டதாயிருந்தது. அதற்கு எந்தப் பெயரும்... உன்னால் நினைக்கவும் முடியாத... அதை விவரிப்பதற்கு அகராதியில் எந்த வார்த்தையும் கிடையாது. நீங்கள் இந்த க்ஷணத்தில் வந்துவிட்டீர்கள், அவ்வளவே.

408. "நல்லது, இது பரிபூரணமாக இருக்கும். ஆகவே பிறகு அடுத்ததாக நாம் என்ன செய்யப் போகிறோம்" என்று நான் கேட்டேன்.

409. அவர்கள், "இயேசு வந்து உம்முடைய ஊழியத்தை தீர்ப்பளித்த பிறகு, நாங்கள் பூமிக்கு சென்று சரீரங்களை

பெற்றுக் கொள்வோம்” என்றனர். நல்லது, அதைப்பற்றி நான் யோசிக்கவேயில்லை. அது வேத வாக்கியத்துடன் ஒத்திருக்கிறது. “நாங்கள் பூமிக்குச் சென்று, சரீரங்களைப் பெற்றுக் கொள்வோம். அங்கு நாங்கள் புசிப்போம். இங்கு நாங்கள் புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லை, நித்திரை செய்வதுமில்லை, நாங்கள் பூமிக்குச் சென்று அங்கு புசிப்போம்” என்றனர்.

410. இது மிகவும் அற்புதமாயிருக்கிறதல்லவா? ஓ, என்னே! நான் ஏன் மரணத்திற்குப் பயந்திருந்தேன்? நான் இங்கு வருவதற்கு, நான் ஏன் மரணத்தைக் குறித்து பயந்தேன்? நல்லது. இது பரிபூரணமான, இன்னும் மிகுதிப்படியான பரிபூரணம், இன்னும் மிகுதிப்படியான பரிபூரணமாயிருக்கிறது. ஓ, இது அற்புதமானதாகும்.

411. பாருங்கள். நாங்கள் அனைவரும் அங்கு பீடத்தின் (altar) கீழ் தான் இருந்தோம். பாருங்கள்? அவர்கள் அங்கு இருந்து கொண்டு கர்த்தருடைய வருகையை

எதிர்நோக்கியிருக்கின்றனர். அவர் நித்திரை யடைந்தவர்களின் சரீரங்களைப் பூமியின் தூளினின்று எழுப்புவார். அவர் வருகையில் நம்மை எழுப்புவார். அவர் வருகையில் நம்மை எழுப்புவார்.

412. அப்பொழுது பரதீசியில் காத்திருக்கும் இவ்வாத்துமாக்கள் அவர் களுடைய சரீரங்களைப் பெற்றுக் கொள்வார்கள். இயேசு பரதீசுக்குச் சென்று ஆபிரகாம், ஈசாக்கு இன்னும் பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களை உயிரோடெழச் செய்தார். அவர்களும் பரிசுத்த நகரத்தில் பிர வேசித்து அநேகருக்குக் காணப்பட்டனர்.

413. இது பூரணமாக வேதப்பூர்வமாய் அமைந்துள்ளது. நான் கண்டது தரிசனமோ அது வேறொன்றே, அது பூரணமாய் வேதப்பூர்வமாயிருக்கிறது.

414. 'இது மிகவும் அதிசயம்' என்று எண்ணியிருக்கும்போது,

415. ஏதோ ஒன்று சத்தமிடுவதைக் கண்டேன். நான் திரும்பிப் பார்த்த போது,

நான் சவாரி செய்த 'பிரின்ஸ்' என்னும் குதிரை என்னருகில் நின்று அதன் தலையை என் தோளின்மேல் போட்டு என்னைத் தழுவ வந்தது. நான் அதற்கு சர்க்கரை கொடுக்கும்போது இருப்பதுபோன்று, உங்களுக்குத் தெரியும், அது தன்னுடைய... நானும் என் கையை அதன் மேலிட்டு, "பிரின்ஸ், நீ இங்கு இருப்பாய் என்று எனக்குத் தெரியும்" என்றேன்.

பிறகு ஏதோ ஒன்று என் கையை நக்கியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. என் நாய் அங்கு நின்று கொண்டிருந்தது.

416. ஷார்ட் (Short) என்பவர் அதற்கு விஷம் கொடுத்து கொன்ற போது, அவரைக் கொன்று பழிவாங்குவேன் என்று சபதம் செய்தேன். அப்பொழுது, எனக்கு ஏறக்குறைய பதினாறு வயதிருக்கும். துப்பாக்கியை எடுத்துக்கொண்டு காவல் நிலையத்திலேயே அவரைச் சுட்டுக்கொல்ல நான் புறப்பட்டபோது, என் தகப்பனார் என்னைத் தடுத்து விட்டார். நான் அந்த நாயின் கல்லறைக்குச் சென்று, எப்படியாவது அவரைக் கொன்று

பழிவாங்குவேனென்று சபதம் செய்தேன். நான் "ஃபிரிட்ஸ் (Fritz) நீ எனக்கு ஒரு தோழனைப் போலிருந்தாய். நான் பள்ளிக்கு செல்ல, என்னை கவனித்தாய். உனக்கு வயதாகும்போது, நான் உன்னைக் காப்பேன். ஆனால் இப்பொழுதோ உன்னைக் கொன்று விட்டார்களே. ஃபிரிட்ஸ் அவர் இனிமேல் உயிர்வாழ்வதில்லை என்று நான் உனக்கு வாக்களிக்கிறேன். அவர் வாழமாட்டார் என்று நான் உனக்கு வாக்கு கொடுக்கிறேன். அவர்மீது வண்டியை ஏற்றி கொன்று விடுவேன் என்று நான் நினைத்தேன். (என்றைக்காவது தெருவில் அவர் நடந்து செல்வதைப் பார்ப்பேன் அப்பொழுது) உனக்காக நான் அவரை கொல்வேன்" என்று இவ்விதமாய்க் கூறினேன்.

417. ஆனால் என்ன நேர்ந்தது தெரியுமா? அந்த மனிதனை நான் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தி, அவருக்கு இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தேன். அவர் மரித்தபோது அவர் உடலை அடக்கம் செய்தேன். ஆம், ஐயா. என்

நாயை அவர் விஷம் வைத்துக்கொன்ற சில வருடங்களுக்குள் நான் இரட்சிக்கப்பட்டேன். அதன்பின் நான் காரியங்களை வித்தியாசமாகக் கண்டேன். அப்பொழுது அவரை வெறுப்பதற்கு மாறாக அவரை சிநேகித்தேன்.

418. அங்கு ஃபிரிட்ஸ் (Fritz) என்னும் பெயர் கொண்ட என் நாய் என் கையை நக்கினவாறு நின்றுகொண்டிருந்தது. நான் பார்த்தேன்...

419. அதைக் கண்டபோது, என்னால் அழமுடியவில்லை. அங்கு எவரும் அழவே முடியாது. அங்கு எல்லோரும் மகிழ்ச்சியுற்றிருக்க வேண்டும். விசனம் என்பது அங்கு காணப்பட முடியாது. அங்கு எவரும் மரிக்கவும் முடியாது. ஏனெனில் அங்கு எல்லாம் ஜீவனாகவே அமைந்திருந்தது. பாருங்கள்? பாருங்கள்? அவ்வாறே எவரும் அங்கு வயோதிபப் பிராயத்தை அடைய முடியாது. எல்லோரும் வாலிபராகவே இருந்தனர். அது மிகவும் பரிபூரணமாயிருந்தது. ’ஓ, இது மிகவும்

அற்புதமல்லவா!' என்று நான் நினைத்தேன். இத்தகைய லட்சக்கணக்கானவர் மத்தியில் நானும் இருந்தேன். ஓ, என்னே! நான் உண்மையாக என் வீட்டில் இருந்தேன், பாருங்கள்.

420. அப்பொழுது அங்கு ஒரு சத்தம் கேட்டது. அது, 'நீ சிநேகித்த அனைவரையும், உன்னை மனப்பூர்வமாக சிநேகித்த அனைவரையும், தேவன் உனக்குக் கொடுத்திருக்கிறார்' என்றது. இது நான் செய்த ஊழியத்திற்கு தேவன் அளித்த பலன். ஆனால் எனக்கு எவ்வித பலனும் வேண்டாம்.

நான் 'கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என்றேன்.

421. எனக்கு ஒரு விசித்திரமான உணர்ச்சி அப்பொழுது ஏற்பட்டது. அப்பொழுது நான் காரியம் என்ன? விசித்திரமாக உணர்கிறேன்" என்று நினைத்தேன். நான் திரும்பிப் பார்த்தபோது கட்டிலின் மேல் கிடந்திருந்த என் உடல் அசையத் தொடங்கினது. அப்பொழுது நான், 'ஓ, எனக்கு

இங்கிருந்து போவதற்கு மனதில்லை. என்னைப் போகவிட வேண்டாம்' என்றேன்.

422. ஆனால் சுவிசேஷம் மக்களுக்குப் பிரசங்கிக்கப்பட வேண்டும். ஒரு நொடிப்பொழுதில் நான் மறுபடியும் கட்டிலின் மேல் படுத்துக் கொண்டிருந்தேன்.

423. இந்த என் அனுபவம் 'வியாபாரிகளின் சத்தம்' (Business men's Voice) என்னும் பத்திரிக்கைளில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அச்சடிக்கப்பட்டு உலகம் பூராவும் சென்றது. சகோ, நார்மன்– அவர் இக்கூட்டத்தில் இருக்கிறார் என்று நினைக்கிறேன். அவர் அதனை மொழிப் பெயர்த்து கைப்பிரதிகளாக அச்சடித்து விநியோகம் செய்தார். அது எல்லா இடங் களுக்கும் சென்றது. அநேக ஊழியர்கள் அதைக் குறித்து எனக்கு எழுதினார்கள். அவர்களில் அநேகர்...

424. அவைகளில் ஒன்றை நான் கூறட்டும். நூற்றுக்கணக்கானவர் எனக்கு எழுதினர். இதோ இது இவ்விதமாக இருந்தது,

"சகோதரன் பிரான்ஹாம், வியாபாரிகளின் சத்தம் என்னும் பத்திரிகையில் வந்த உங்களுடைய தரிசனம்..."

425. டாமி நிக்கலை (Tommy Nickel) நான் பாராட்டுகிறேன். அவர் இப்பொழுது வியாபாரிகள் சங்கத்தில் இல்லை. என்ன காரணமோ நான் அறியேன். திரித்துவக் கொள்கையைக் கடைபிடிக்கும் அந்த பத்திரிக் கையில் அவர், 'பவுல் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்து அவ்விதம் செய்யக் கட்டளையிட்டுள்ளார். நானும் அதையே செய்துள்ளேன்' என்று நான் கூறியதை எவ்வித மாற்றமுமின்றி அப்படியே பிரசுரித்தார். அதன்பின் நான், "என்னே!" என்று யோசித்தேன்.

426. அந்த போதகர், "சகோதரன் பிரான்ஹாமே உங்கள் தரிசனம்..." என்று எழுதியிருந்தார்.

427. அவர் அதை தரிசனம் என்று குறிப்பிட்டிருந்தார். அது ஒருக்கால் தரிசனமாய் இருந்திருக்கலாம். நான் வானத்துக்கு எடுத்துக்

கொள்ளப்பட்டதாகக் கூற விரும்பவில்லை. **நான் முதலாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டு இத்தகைய சம்பவங்களைக் கண்டேனோனால், மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்ட பவுல் என்னவெல்லாம் கண்டிருப்பான்?** அது என்ன? அதைக் குறித்து மனிதர் பேசவும் கூடாது என்று அவன் கூறினான். எனக்கு நேர்ந்ததும் எடுக்கப்படுதலா என்னவென்பது எனக்குத் தெரியவில்லை. என்னால் சொல்ல முடியவில்லை. நான் அதை உங்களுக்கு கூறவும் முடியாது.

428. அதை வாசித்த ஒரு போதகர், "சகோ. பிரான்ஹாம் உங்கள் தரிசனம் பெரும்பாலும் வேதவாக்கியங்களுடன் ஒத்திருக்கின்றது. ஆனால் குதிரை அங்கு இருந்ததாக நீர் கூறுவது மாத்திரம் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பரலோகம் மனிதருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதேயன்றி குதிரைகளுக்கல்ல" என்று எழுதியிருந்தார். வேததத்துவத்தினால் உண்டாகும் மனித ஞானத்தைப் பாருங்கள்.

429. நல்லது, நான் அங்கு சபையின் அலுவலகத்தில் அமர்ந்திருந்தேன். நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு முன்பு எனது மகன் பில்லி அந்தக் கடிதத்தை என்னிடம் கொண்டு வந்தான்.

430. நான் அந்த போதகருக்கு இவ்விதம் பதிலளித்தேன்; 'என் அருமை சகோதரனே, நீங்கள் வேதவாக்கியங்களைக் குறித்து கொண்டுள்ள அறிவைக் குறித்து அதிசயமுறுகிறேன். நான் பரலோகத்திலிருந்ததாகச் சொல்லவில்லை. பரதீசைப் போன்ற ஒரு ஸ்தலத்தில் இருந்ததாகவே நான் குறிப்பிட்டுள்ளேன். ஏனெனில் கிறிஸ்து அதற்கும் உயரமாயுள்ள ஒரு ஸ்தலத்தில் இருந்தார். உங்கள் சந்தேகம் தீரவேண்டுமானால், வெளிப்படுத்தல் 19-ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். இயேசு பரலோகத்திலிருந்து புறப்பட்டு வரும்போது வெள்ளைக் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு வருகிறார். (வெளி. 19:11-14). அது மாத்திரமல்ல. அவருடன் காணப்படும் பரிசுத்தவான்கள் அனைவரும் வெள்ளைக்

குதிரைகளின்மேல் காணப்படுகின்றனர் என்பதை அறியவும். சரி. முற்றிலும் சரி. ஆம், உண்மையாக.

431. அதே ஸ்தலத்தில்... கழுகைப் போன்ற ஜீவன், காளையைப் போன்ற ஜீவன் இருக்கின்றனவே... நல்லது, என்னே, எலியாவைக் கொண்டு சென்ற குதிரைகள் எங்கிருந்து வந்தன? மனித சிந்தை அதில் தவறு காண விழைவதைப் பாருங்கள். அது உண்மை.

432. இப்பொழுது கவனியுங்கள். இந்த அருமையான, தேவபக்தியுள்ள சகோதரன் யோவானைக் குறித்து நான் சற்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்... நான் முடிக்கும் முன்பாக இதைக் கூறுவதற்கு சரியான நல்ல இடம் இதுதான் என்று நான் சற்று யோசித்தேன். யோவான் கொஞ்ச காலம் துன்புறுத்தப்பட்டு அவனுடைய சகோதரரைக் காண அனுமதிக்கப்பட்டான். அவ்வாறே நானும் கர்த்தருடைய வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கும் என் சகோதரரையும் மற்ற பரிசுத்தவான்களையும் காண தேவனாகிய

கர்த்தர் அனுமதித்தார். கவனியுங்கள். நான் கண்ட என் ஜனங்கள் பரிசுத்தவான்கள் பலி செலுத்தப்படும் பீடத்தின் கீழ் இல்லை. ஆனால் ஐந்தாம் முத்திரையில் காணப்படும் ஆத்துமாக்கள் தாங்கள் கடைப்பிடித்திருந்த கொள்கைக்காக உயிர்த்தியாகம் செய்ததால், பலிபீடத்தின் (Altar of sacrifice) கீழ் காணப்படுகின்றனர்.

433. இப்பொழுது இதை நீங்கள் நன்கு கவனிக்க விரும்புகிறேன். இன்னும் பத்து நிமிடங்களுக்குள் சரியாக 10.00 மணிக்கு முடித்துவிடுகிறேன்.

434. கவனியுங்கள், கர்த்தர் எனக்குக் காண்பித்த மணவாட்டி பலிபீடத்தின் கீழ் காணப்படவில்லை. ஏனெனில் அவள் ஜீவனுள்ள வார்த்தை கிருபையாய் அளித்துள்ள மன்னிப்பை எற்றுக்கொண்டதன் விளைவாக வெள்ளையங்கியை கிறிஸ்துவினிடமிருந்து பெற்றுக் கொண்டாள். நான் நினைக்கவில்லை, திறக்கப்பட்டதால்...

435. ஐந்தாம் முத்திரை நமக்குத் திறக்கப்பட்டு விட்டதென நான் முற்றிலும் நம்புகிறேன். தேவனிடத்திலிருந்து நான் தெளிவான வெளிப்பாட்டைப் பெற்று அதை சுத்த மனச்சாட்சியுடன் உங்களுக்கு அளித் தேன். நான் அதை ஊகித்து உங்களுக்குப் போதிக்கவில்லை. எக்காலத்தும் நான் ஸ்தாபனங்களுக்கு விரோதமாயுள்ளவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். முத்திரைகள் திறக்கப்படுவதன் மூலம் அதன் உண்மை புலப்பட்டுவிட்டது.

436. வேறொரு காரியத்தையும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். இந்த ஐந்தாம் முத்திரை இந்த நாளில் திறக்கப்பட்டதனால், 'ஆத்துமாக்கள் உறங்குதல்' (Soul Sleeping) என்னும் போதகம் தவறென்பது ருசுவாகிட்டது. அப்போதகத்தை விசுவாசிப்பவர் சிலர் இங்குள்ளனர் என்று நானறிவேன். ஆனால் அது தவறென்பது இப்பொழுது நிரூபிக்கப்பட்டு விட்டது. அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் உயிரோ டுள்ளனர். சரீரங்கள் மாத்திரமே

கல்லறைகளில் உறங்கிக் கொண்டிருக் கின்றன. ஆனால் அவர்களுடைய ஆத்துமாக்கள் தேவ சமூகத்தில் பீடத்தின் கீழ் உயிரோடுள்ளன.

★★★★★

# கர்த்தராகிய இயேசுவே, வாரும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **தேவன் மோசேயிடம் பேசினார்**, ஆகஸ்டு 31, 1953, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

அதைப் போன்று பாடுவது என்பது... நீங்கள் மேலே பரலோகத்திற்குப் போகும்போது, அங்கு அவ்விதமாக பாடிக் கொண்டிருக்கும் இடத்தை அடையும்போது, என்னைக் காண விரும்புகிறேன். நான் அதைச் சுற்றி தான் எங்காவது இருப்பேன். நான்... ஏனென்றால் நான் நிச்சயமாகவே அதை நேசிக்கிறேன்.

மேலும் நான் எப்போதுமே ஜனங்களிடம் கூறியிருக்கிறேன், அங்கே... பிறகு, அங்கே சிங்காசனத்தின் கீழிருந்து தண்ணீர்கள் வெளியே வந்து, இங்கே கீழே பாய்ந்து, நதியின் இரு கரைகளிலும் இருக்கும் ஜீவ விருட்சத்தினூடாக கடந்து போகிறது. அது வளைந்தும், இவ்விதமாக ஒரு பெரிய மலையைச் சுற்றியும் செல்கிறது. மேலும் தூதர்களின் பாடற்குழு நாள்முழுவதும் பாடிக் கொண்டிருக்கிறது, ஏனென்றால் அங்கே இராக்காலம் கிடையாது...

2. இந்த மறுபக்கத்தில், அதோ ஒரு சிறிய புதர் இருக்கிறது. அங்கே தான் அந்த புதரின் கீழ்

தான் நான் உட்கார்ந்து, மறுகரையில் பாடிக்கொண்டிருக்கும் அவைகளைக் கவனித்துக் கேட்க விரும்புகிறேன். பாடுவது உண்மையாகவே எனக்குப் பிடிக்கும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இசையைக் குறித்தும், கூட்டத்தில் தேவனுடைய ஆவியைக் கொண்டு வரும் பாடுதலைக் குறித்தும் ஏதோவொன்று உள்ளது என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? அது சரியே.

இல்லினாயிஸில் உள்ள ஜெனீவாவில், எப்பொழுதும் தேசத்தை வீசியடித்துச் சென்றதிலேயே மிகப்பெரிய பயங்கரமான போலியோ கொள்ளை நோய்களில் ஒன்று அங்கே இருப்பதாக, எனக்கு இங்கே வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அங்கே பத்தொன்பது நோயாளிகள் மற்றும் அவர்களில் அநேகம் பேர் ஏற்கனவே மரித்து விட்டார்கள் என்று நினைக்கிறேன், அது மிகவும் பரிதாபகரமாக உள்ளது, அந்த பயங்கரமான சத்துரு.

எனவே, தேவன் தம்முடைய பலமுள்ள அன்பின் வல்லமையோடு இறங்கி வந்து, அந்தக் கொள்ளைநோயை அங்கே தேசத்தை விட்டு எடுத்துப்போம்படியாக, அதற்காக

ஜெபிக்கும்படியான ஒரு ஜெபத்தைச் செய்யும்படி என்னிடம் கேட்கப்பட்டிருக்கிறது, எனவே இப்பொழுது, நாம் நம்முடைய தலைகளைத் தாழ்த்தி, அதற்காக ஜெபிப்போம்.

3. எங்கள் அன்புள்ள விலையேறப்பெற்ற கர்த்தாவே, நாங்கள் உம்மிடத்தில் வர மிகவும் தகுதியற்றவர்களாக இருக்கிறோம், ஆயினும் நாங்கள் எதையாகிலும் விண்ணப்பம் பண்ணுவோமானால், நீர் அதைச் செய்வீர் என்று எங்களுக்கு வாக்குப்பண்ணும்படியாக, நீர் எங்கள் மேல் மிகவும் அன்புள்ளவராயிருந்து வருகிறீர். அந்த நம்பிக்கையில் தான், நாங்கள் இன்றிரவு உள்ளே வந்து, எங்கள் பாவங்கள் எல்லாவற்றையும், இந்த தேசத்தின் பாவங்களையும், நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் இந்தப் பட்டணத்தின் பாவங்களையும் அறிக்கை பண்ணிக் கொண்டிருக்கிறோம், தேவனே, நீர் இரங்கி, அந்தப் பயங்கரமான போலியோ பிசாசினால் விழுந்து கொண்டிருக்கிற அந்தப் பரிதாபமான சிறு பிள்ளைகளை நினைத்தருளும்.

இப்பொழுதும், உம்மால் இந்தக் காரியத்தை அகற்றிப்போட முடியும் என்று அறிந்திருக்கிறோம். மேலும், தேவனே, அங்கே ஒரு பழைமை நாகரீகமான கூட்டம் தொடங்கப்பட

வேண்டுமென்றும், அந்தப் பட்டணத்தைச் சுற்றிலும் எல்லாவிடங்களிலும் ஒரு ஜெபக்கூட்டம் துவங்கப்பட வேண்டுமென்றும் நான் ஜெபிக்கிறேன். சபைகளும், ஜனங்களும் முகங்குப்புற விழுந்து தேவனை நோக்கி உரத்த சத்தமிட்டு கூக்குரலிட்டுக் கதறுவார்களாக. அந்தக் கொள்ளைநோயை நீர் நிறுத்திவிடுவீர் என்று நான் விசுவாசிக்கிறேன், கர்த்தாவே.

4. அந்த ஜனங்களுக்காகவும், அந்தப் பட்டணத்திலுள்ள அந்தக் கிறிஸ்தவர்களுக்காகவும், மற்றும் அந்தப் பரிதாபமான சிறு பிள்ளைகளுக்காகவும் எங்கள் இருதயங்களிலிருந்து இரத்தம் கசிகிறது என்பதை நாங்கள் கூற விரும்புகிறோம். ஓ தேவனே, சாபங்கள் யாவும் விலகிப்போய், அதற்கு மேலும் வியாதியோ, மனத்துயரமோ இல்லாமல் இருக்கும் அந்த நாள் சீக்கிரமாக வரட்டும்.

நாங்கள் இன்றிரவு அந்தப் பரிதாபமான தகப்பன்மார்களுக்காகவும் தாய்மார்களுக்காகவும் வருந்துகிறோம். அதைக் குறித்த அனுபவத்தை நான் அறிந்தவனாக அவர்களுக்காக நான் வருந்துகிறேன். அந்தப் பரிதாபமான இருதயங்கள் நொறுக்கப்பட்டிருப்பதை நான்-நான் உணருகிறேன், கர்த்தாவே. தேவனே, இரக்கமாயிரும். அந்தக்

கொள்ளைநோய் இந்த இதே இரவிலேயே விலகிப்போகும்படியாக, நான் ஜெபிக்கிறேன். இன்னும் கூடுதலாக ஒரு நோயாளியும் பாதிக்கப்படாமல் (broke out) இருப்பார்களாக. அது இப்பொழுதே நிறுத்தப்படுவதாக. சத்துரு தாமே பின்வாங்கிப் போய், அழிவுக்குள்ளாக வீசி எறியப்பட்டுப் போவானாக.

தேவனுடைய தூதனானவர் தாமே அந்தப் பட்டணத்திற்கு ஆதரவாக நிற்பாராக. அவர் நிற்பதை அவைகள் காணும்போது, அந்தப் பிசாசுகள் சிதறி ஓடும் என்பதை நாங்கள் அறிவோம். இதை அருளும், பிதாவே, நீர் இதைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம், நாங்கள் கெஞ்சி மன்றாடுகிறோம், நாங்கள் பாவிகள் என்றும், இதற்கு தகுதியற்றவர்கள் என்றும் அறிக்கை பண்ணுகிறோம். ஆனால் தேவனுடைய இராஜ்யத்தின் நிமித்தமாக, நீர் இதைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோம், நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

பரிதாபமான சிறு பிள்ளைகள் அவ்விதமாக அவதிப்பட வேண்டியிருப்பது மிகவும் மோசமாக இருக்கிறது. அந்தக் கடைசி சத்துரு அவருக்கு கீழ்ப்படுத்தப்படும் போது, அது ஒரு அற்புதமான

நாளாக இருக்காதா? அப்போது நாம் வெற்றி வாகைசூடினவர்களாக, அவருடைய சாயலுக்குள்ளாக்கப்பட்டு, அழகானவர்களாக நின்று கொண்டிருப்போம், முப்பர்கள் எல்லாரும் அவருக்கு முன்பாக முகங்குப்புற, அவருக்கு முன்பாக தங்கள் முகங்குப்புற விழுந்தார்கள் என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. சகோதரன் ரியான் அவர்களே, அது அற்புதமாக இருக்கும், அது அவ்வாறு இருக்காதா?

5. எப்படியாவது இதெல்லாம் முடியும்போது, நான் சந்தோஷப்படுவேன். உங்களுக்குத் தெரியும், உலகமானது எல்லா நேரமும் கொடுமையுள்ளதாகவும் மேலும் மோசமாகவும் ஆகிக் கொண்டு வருவதை நீங்கள் காணும்போது, பத்மு தீவிலிருந்த யோவான், "கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று கூறினதை எண்ணிப் பார்க்கிறேன். இதைக் குறித்து ஒருவிதத்தில் களைப்புற்றவர்களாகவும் சலிப்படைந்தவர்களாகவும் இருக்கிறேன், நீங்களும் அவ்வாறு இல்லையா?

பிரிவதைக் குறித்து நான் எண்ணிப் பார்க்கிறேன். நான் ஒரு கூட்ட ஜனங்களுக்குள் வருகிறேன். அப்போது சில நண்பர்களைப் பார்த்து, அவர்களுடைய கரங்களைக் குலுக்கத்

தொடங்குகிறேன், பிறகு பிரியாவிடை பெற்று, தேசத்தைக் கடந்து வேறு ஏதோவொரு இடத்திற்கும், அதன்பிறகு இங்கும் பிறகு அங்குமாகப் போய்விடுகிறேன்... வீதிகளில் நோக்கிப் பார்க்கும்போது, இதோ பாவத்தைக் காண்கிறோம் மேலும் அது - அது அப்படியே ஒருவிதத்தில் உங்கள் இருதயத்தை இரத்தம் கசிய வைத்து விடுகிறது, நீங்கள் - ஒருகாலத்தில் அனுபவங்களை உடையவர்களாக இருந்த ஜனங்களில் அநேகர் பழைய நிலைக்கு விழுந்து போகத் தொடங்குவதை நீங்கள் காணத் தொடங்குகிறீர்கள்.

அப்போது நீங்கள், "கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று கதறத் தொடங்குகிறீர்கள்.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# அவரை என்றாவது ஒரு நாள் முகமுகமாக நான் நிச்சயம் காண விரும்புகிறேன்

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

7. எனவே நாம் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் முடிவு காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். நான் .... இது சிலருக்கு பயங்கரமாக தென்படக்கூடும். ஆனால் கிறிஸ்தவர்களுக்கோ; நான் இங்கு அடைந்துள்ளது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. நாம் கடைசி காலத்தில் இருப்பதற்காக நான் மகிழ்கிறேன்.

இதை ஒருகூட்டத்தில் நான் கூறினபோது, ஒருவர் என்னிடம் வந்து, "நீர் என்ன பேசுகிறீர்? உலகம் முடிவைக் காண உமக்கு மகிழ்ச்சியாயுள்ளதா என்ன?" என்று கேட்டார்.

நான், "ஆம், ஐயா நிச்சயமாக" என்றேன்.

அவர், "உலகம் முடிவுறுவதைக் காண விரும்புவது புத்திசாலித்தனமல்ல" என்றார்.

நான், "உலக முடிவின்போது இயேசு வருவார். அவரை தான் நான் காண விரும்புகிறேன். அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும்" என்று வேதம் கூறியுள்ளது (2 தீமோ. 4:8)" என்றேன்.

இந்நாட்களில் ஒன்றில், இவ்வுலகில் உள்ள இந்த பழைய காரியங்கள் ஒழிந்து போய், நாம் அவரைக் காணப்போகிறோம் என்று அறிந்திருப்பது நமக்கு மகிழ்ச்சியூட்டுகிறது.

8. சில ஆண்டுகளுக்கு முன்பு … ஓ, அநேக ஆண்டுகளுக்கு முன்பு அடிமைத்தனம் இருந்தது. அப்பொழுது கறுப்பு நிறமுள்ள வயோதிபர் ஒருவர் இருந்தார். அவர்கள் ஆலயங்களில் பாடுவார்கள் - நகர் புறப்பாடல்கள். அவர்கள் அடிமைகளை ஒன்று கூட்டி, கூட்டங்கள் நடத்தி, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதுண்டு. ஒரு இரவு கூட்டத்தில், கறுப்பு நிறமுள்ள அந்த வயோதிபர் இரட்சிக்கப்பட்டார். அவர் அப்பொழுது விடுதலையடைந்ததை உணர்ந்தார். அடுத்த நாள் காலையில், அவர் வேலை செய்து கொண்டிருந்த தோட்டத்தில், அவர், “நான் விடுதலையடைந்து விட்டேன்” என்று மற்ற அடிமைகளிடம் கூறினார்.

அவருடைய முதலாளி வந்து, “சாம், இங்கே பார். மற்ற அடிமைகளிடம், நீ விடுதலையாகி விட்டதாக கூறினதாக கேள்விப்படுகிறதெல்லாம் என்ன?” என்று அவரைக் கடிந்துகொண்டார்.

அவர், “ஆம், முதலாளி. அது உண்மை. சென்ற இரவு நடந்த கூட்டத்தில் நான் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையானேன் (ரோமர் 8:2)” என்றார். அதுதான், அதுதான்.

9. நான் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையானேன். ஒரு

காலத்தில் நீங்கள் அதற்கு அடிமைகளா யிருந்தீர்கள். ஆனால் இப்பொழுதோ நீங்கள் அதனின்று விடுதலையாகிவிட்டீர்கள். பாருங்கள்? இன்று காலை நான் கூறினது போன்று, மரணம் பாவத்தில் தான் தங்கியுள்ளது. பாவமும் மரணமும் ஒன்றே. நீங்கள் பாவத்தினின்று விலகும்போது மரணத்தினின்று விலகுகின்றீர்கள். நீங்கள் பாவத்தில் நிலைத்திருந்தால், மரணத்தில் நிலைத்திருக்கின்றீர்கள், பாருங்கள்? எனவே நீங்கள் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாகும் போது, நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறீர்கள். அப்பொழுது நீங்கள் சுயாதீனராகின்றீர்கள்.

அவருடைய முதலாளி அவரிடம் "சாம், நீ கூறுவது உண்மைதானா?" என்று கேட்டார்.

அவர், "ஆம், ஐயா, என் ஜனங்களிடம் பேசி, அவர்களை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கும்படிக்கு சென்ற இரவு கர்த்தர் என்னை அழைத்தார். நாங்கள் அடிமைகளாயிருந்தாலும், பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று நாங்கள் விடுதலையாயிருப்போம்" என்றார்.

முதலாளி, "சாம், நீ கூறுவது உண்மை தானா?" என்றார்.

அவர், "முதலாளி, நான் இவ்வாறு கூறினதால், நீர் என்னை என்ன செய்யப் போகின்றீரோ, எனக்குத் தெரியாது. ஆனால் உங்களிடம் இதை கூறுகிறேன். நான் சுயாதீனமுள்ள மனிதன். நான் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையானவன்" என்றார்.

முதலாளி, "சாம், நானும் ஒரு கிறிஸ்தவன் என்று நீ அறிவாய்... தேவன் உன்னை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கி, நீ கிறிஸ்தவனாகி, அதைக் குறித்து உன் சகோதரர்களுக்கு நீ கூற விரும்புவதால், இன்று காலை உன்னை விடுதலையாக்கி, அதற்கான பிரகடனத்தில் கையொப்பமிடப்போகின்றேன். அப்பொழுது நீ யாருக்கும் அடிமையாயிராமல், சுயாதீனமுள்ளவனாக உன் சகோதரருக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கலாம்" என்றான்.

10. அந்த வயோதிபர் அநேக ஆண்டுகளாக பிரசங்கித்து வந்தார். பின்பு ஒரு நாள், நாமெல்லாரும் நமது பாதையின் முடிவை அடைவது போல் அவரும் அடைந்தார். அவர் அநேக மணி நேரம் சுய நினைவற்று கிடந்தார்.

அவருடைய வெள்ளை சகோதரரில் அநேகர் அவரைக்காண வந்திருந்தனர். அவர் உணர்வடைந்து விழித்தபோது, ஒருகூட்டம் ஜனங்கள் அவரைச் சூழ இருந்தனர். அவர் சுற்று முற்றும் பார்த்து விட்டு, "இன்னுமா முடியவில்லை?" என்று கேட்டார்.

அவர்கள், "சாம், நீர் உறங்கிக்கொண்டிருந்தீர்" என்றனர்.

அவர், "இல்லை, நான் உறங்கவில்லை. நான் அக்கரைக்கு சென்றிருந்தேன்" என்றார்.

அங்கு குழுமியிருந்த போதகர் சகோதரர்கள், "சாம், அக்கரையில் என்ன கண்டீர் என்று கூறும்" என்றனர்.

அவர், "நான் முத்துக்கள் பதித்த அந்த பெரிய வெள்ளை வாசலுக்குள் நடந்து சென்றேன். அப்பொழுது வெள்ளை சிங்காசனத்தையும் அவரையும் கண்டேன். தேவதூதன் ஒருவன் வந்து, "நீ தான் சாம் என்பவனா?" என்றான்.

நான், "ஆம்" என்றேன்.

அவன், "சாம், இங்குள்ள அங்கியையும் கிரீடத்தையும் கண்டாயா? நீ பூமியில் செய்த

மகத்தான பணியின் நிமித்தம் இவைகளைப் பரிசுகளாக வென்றுவிட்டாய்" என்றான்.

அவர், "அங்கி, கிரீடம் போன்ற பரிசுகளைக் குறித்து என்னிடம் பேச வேண்டாம்" என்றார்.

தேவதூதன், "அப்படியானால் உனக்கு என்ன பரிசு வேண்டும்?" என்று கேட்டான்.

அவர், "அவரை ஆயிரம் ஆண்டுகள் பார்த்துக்கொண்டிருக்க மாத்திரம் அனுமதித்தால் போதும்" என்றார்.

11. நாம் அனைவருக்குமே அது போன்ற உணர்வுதான் உள்ளதென்று கருதுகிறேன். உங்களுக்கும் இருக்கிறதல்லவா? எனக்கு அங்கிகளும், கிரீடங்களும், மாளிகைகளும் வேண்டாம். அவரைப் பார்த்துக்கொண்டிருக்க மாத்திரமே எனக்கு விருப்பம். உங்களுக்கும் அதே விருப்பம் உள்ளதல்லவா? சகோ.நெவில், அப்படி செய்யும்போது, உங்களுடன் கைகோர்த்துக்கொள்ள விரும்புகிறேன். நாம் ஒருமித்து அவரைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது, நான், "சகோ.நெவில், யோசித்து பாருங்கள், நாம் கூடாரத்தில் ஒன்றாக இருந்தோம். அங்கு வெயிலும் குளிருமாய் இருந்தது. இப்பொழுது நாம் யாரைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று

கவனியுங்கள், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனை" என்பேன். அவருடைய முகச்சாயலைக் காண்பது மிகவும் அற்புதமாயிருக்கும் அல்லவா?

12. என் வாழ்க்கையில் இருமுறை - இதுவரை மூன்று முறை - அவரை தரிசனத்தில் கண்டிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவர் ஒரேவிதமான தோற்றத்தை உடையவராயிருந்தார். அவருடைய உருவத்தை வரைய இவ்வுலகில் எந்த ஓவியனும் இல்லை. அவர்கள் ஒருக்கால் அவரைப்போல் காணப்படும் ஒரு படத்தை வரையலாம். அவர் எனக்கு எப்படி தோற்றமளித்தார் என்றால், அவர் பேசினால் உலகம் முடிவடையும் என்பது போன்ற ஆண்மைத்தனம் கொண்டவராயும், அதே சமயத்தில் இனிமையாகவும் அழகாகவும் காணப்பட்டார். அதற்கு இணையேயில்லை .... ஒரு ஓவியன் தன் துரிகையினால் (brush) தீட்டமுடியாத அளவுக்கு அநேக சிறப்பு அம்சங்கள் அவருக்குள்ளன. அவரை என்றாவது ஒரு நாள் முகமுகமாக நான் நிச்சயம் காண விரும்புகிறேன்.

13. அவர் தமது விலையேறப்பெற்ற கரங்களையுயர்த்தி, "என்னிடத்தில் வாருங்கள்" என்று கூறினதை கேட்க எனக்கு எவ்வளவு

விருப்பம் என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு. அவர் பயணம் செய்து களைத்துப்போய், அந்த களைப்பான தோற்றத்துடன், "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" (மத்.11:28-29) என்று கூறினதை கற்பனை செய்து பாருங்கள். அப்படி அவர் கூறினதை எனக்கு கேட்க விருப்பம். அந்த நாளில் நான் இருக்கவில்லை. நான் பேதுரு, யாக்கோபு, யோவான் இவர்களுடன் நின்று கொண்டிருக்கவில்லை. ஆனால், "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத். 25:21) என்று அவர் கூறுவதை அவர்களுடன் கூட நின்று கொண்டு கேட்பேன் என்று நம்புகிறேன்.

*செய்தி:* **மரியாதைகள்,** அக்டோபர் 15, 1961, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

★★★★★

# ஒன்றுக்கும் மேற்பட்ட வானம் இருக்கின்றதா?




வில்லியம் மரியன் பிரன்ஹாம்

134. இப்பொழுது நாம் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக உன்னதங்களில் ஒன்று சேர்ந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். இப்பொழுது இயேசு, இயேசுவின் சரீரமானது உயிர்த்தெழுதலிலிருந்து மேலே எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதை நாம் தெளிவாக உணருகிறோம். இப்பொழுது **மூன்று வானங்களைக் குறித்து வேதம் பேசுகிறது என்பதை நாம் அறிவோம். நாம் அதை முதலாம் வானம், இரண்டாம் வானம், மூன்றாம் வானம் என்று அறிவோம். பவுல் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டு, பேசப்படாத வாக்குக்கெட்டாத காரியங்களைக் கண்டு, அவைகளைக் குறித்து அவன் பேசமுடியாதவனாயிருந்தான்.** இப்பொழுது **வேதாகமத்தில் முதலாம் வானம் மேகங்களைப் போன்றுள்ளது என்றே அழைக்கப்படுகிறது.** வேறு வார்த்தைகளில் கூறினால் கீழே இங்கே பூமிக்குரிய பிரகாரமான முத்திரை என்று அழைக்கப்படுகிறது. இப்பொழுது மேலே மேகங்களிலிருந்து உண்டாகும் சூழ்நிலையானது கீழே சபைக்குள்ளாக மாறி அது ஓர் உன்னத ஸ்தலமாயிருக்கிறது. அதன் பின்னர் **இரண்டாம்**

**வானம் கதிரவன் மண்டலம் என்று எண்ணப்படுகிறது. மூன்றாம் வானமோ அதற்கு அப்பாலே செல்லுகிறது.**

135. இப்பொழுது நாம் சற்று சிந்திக்க நேரிடும், எனவே இதை அப்படியே ஒரு நிமிடம் கவனித்துப் பார்ப்போம். இப்பொழுது ஐன்ஸ்டீன் விஞ்ஞானத்தின் மூலம் நிரூபித்தார். அதாவது இரண்டு கார்கள் சாலையில் பக்கத்திற்கு பக்கமாக வந்து கொண்டிருப்பது போல, இரண்டு பொருள்கள் ஒன்றுக்கொன்று பக்கத்திற்கு பக்கமாக வந்து கொண்டிருந்தால், அவைகள் போதுமான அளவிற்கு வேகமாய் வந்து கொண்டிருந்தால் (இப்பொழுதோ அவைகள் ஒரு வினாடிக்கு கோடிக்கணக்கான மைல்கள் வேகத்தைப் போன்று, உண்மையாகவே அவ்வளவு வேகமாய் இருக்க வேண்டும்) ஆனால் அவைகள் ஒன்று மற்றொன்றைச் சரியாக கடந்து செல்க்கூடும், எந்த ஒரு காரியத்தையும் ஒருபோதும் தொல்லைப்படுத்தாது. வேகம் அதைச் செய்யும், அது எந்தக் காரியத்தையும் தொல்லைப்படுத்தாமலேயே ஒன்று மற்றொன்றை சரியாகக் கடந்து செல்லும்.

136. இப்பொழுது, இப்பொழுது நீங்கள் கவனிப்பீர்களேயானால், நான் இங்கே

அண்மையில் கலிபோர்னியாவில் உள்ள பால்மோர் மலையில் நின்றுகொண்டிருந்தேன். அப்பொழுது என்னால் தூரதரிசினி கண்ணாடியின் மூலம் அங்கே நூற்றிருபது கோடி ஒளி ஆண்டுகளின் விண்வெளி தூரத்தைக் காணமுடிந்தது. இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள், நூற்றிருபது கோடி ஒளி ஆண்டுகளின் விண்வெளி தூரம், அங்கு செல்ல எத்தனை மைல்கள் வேகத்தில் செல்ல வேண்டியதாயிருக்கும் என்று கணக்கிட்டுப் பாருங்களேன்! புரிகின்றதா?

137. **ஆனால் அதேசமயத்தில் பரலோகம் கோடான கோடிக் கணக்கான ஒளி ஆண்டுகளின் தூரத்திற்கு அப்பால் உள்ளது. அதை நினைத்துக்கூட பார்க்க கூடாத அளவிற்கு தூரமாய் உள்ளது.** நாம் எப்படி அங்கே செல்வோம்? அது பயணமாயிருக்கிறது. **அது சிந்தையைப்போன்று அவ்வளவு வேகமாய்ச் செல்வதாயிருக்கும். அது மிகவும் வேகமாக இருக்கும். உங்களால் பரலோகத்தைக் குறித்து நினைத்துப்பார்க்கக் கூடுமானால், அந்தவிதமாகத்தான் அவ்வளவு துரிதமாக நீங்கள் அங்கே இருப்பீர்கள்.**

**இயேசுவானவர், அவர் உயிர்த்தெழுந்த பிறகு, சுவர்களினூடாக வந்தார், சரியாக கதவுகளினூடாக வந்தார், வந்து நின்று பொரித்த மீனையும், தேன்கூட்டுத் துணிக்கையையும் புசித்தார்.** அல்லேலூயா. வேகமாயிற்றே! **இந்தச் சரீரத்தைவிட்டு ஜீவன் வெளியேறினவுடனே, நாம் அப்பால் உள்ள தேவனுடையப் பிரசன்னத்தில் இருக்கிறோம்.** நாம் அடி, அங்குலங்கள், கெஜங்கள், மைல்கள் போன்றவற்றை மாத்திரமே அறிந்துள்ளோம். நாம் இந்த நிலவுலகத் தொடர்புடைய முறைமையில் இருக்கிறோம். **ஆனால் சகோதரனே, நாம் இங்கிருந்து செல்லும்போது, ஓ, என்னே, என்ன ஒரு நேரமாயிருக்கம்!**

*செய்தி: 61-04-02 உண்மையான ஈஸ்டர் முத்திரை*

★★★★★

## 83. ஒன்றுக்கும் மேற்பட்ட வானம் இருக்கின்றதா?

162. ஆம், I - II கொரிந்தியர் 12:3ல் **மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்ட ஒரு மனிதனை தான் அறிந்துள்ளதாக பவுல் கூறுகிறான். மேலும் வெளிப்படுத்தின விசேஷத்தில் இன்னும் பிறவற்றில் அதிக வானம் காணப்படுகிறது.** நான் வேகமாக கடந்து செல்லப் போகிறேன், ஏனெனில் முடிக்க வேண்டிய நேரத்தைக் கடந்துவிட்டேன். இவைகளில் மற்றவற்றை வாசித்து கருத்தைக் கூறினால் பரவாயில்லையா?

*செய்தி:* 59-06-28E *கேள்விகளும் பதில்களும்* COD #8 AND #9

★★★★★

**அங்கு பாவம் இருக்க முடியாது. பொறாமை இருக்க முடியாது, வியாதி இருக்க முடியாது. இவையனைத்தும் பரலோகக் கரையை அடையவே முடியாது.** இதை எடுத்துக்

கூறும் சிலாக்கியம் எனக்கு அருளப்படாமல் போனால், ஒருக்கால் அது அருளப்படாமல் இருக்கலாம். அப்படியானால் தேவன் என்னை மன்னிப்பாராக. ஆனால், அந்த சிலாக்கியம் எனக்கு அருளப்படுமானால், நான் சிலவற்றைக்காண தேவன் என்னை முதலாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொண்டார் என்பதைக் கூற விரும்புகிறேன். வேதத்தில் ஒருவர், அது பவுல் என்று நம்புகிறேன், மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்து கொள்ளப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. **முதலாம் வானமே, இவ்வளவு மகிமை பொருந்தினதாயிருக்குமானால், மூன்றாம் வானத்தின் மகிமை எப்படி இருந்திருக்கும்? அதைக் குறித்து பவுலால் பதினான்கு ஆண்டுகளாக பேச முடியவில்லை என்பதில் வியப்பொன்றுமில்லை. அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்போயிருந்தானோ என்று தெரியவில்லையென்று அவன் கூறுகிறான்.** அந்த மகத்தான அப்போஸ்தலனுடன் கூட நானும் சேர்ந்து, அவனுடைய உத்தியோகத்தை பகிர்ந்து கொள்ளவோ அல்லது என்னை அவனுக்கு சமமாக்கிக்கொள்ளவோ நான் முயலவில்லை, நான்

சரீரத்திற்குப் புறம்போயிருந்தேனோ என்று அறியேன் என்று கூற விரும்புகிறேன். **ஒன்று மாத்திரம் எனக்குத் தெரியும். உங்களை எவ்வளவு தத்ரூபமாகக் காண்கிறேனோ, அவ்வளவு தத்ரூபமாக அது அமைந்திருந்தது.**

*செய்தி:* 60-05-15E *புத்திரசுவிகாரம்* #1

★★★★★

நேற்று இத்தகைய ஊழியத்தில் எப்படிப்பட்ட சோர்வுள்ள தருணம் வரும் என்று ஜனங்கள் அறிவதில்லை. எனக்கு உண்மையாகவே சோர்வு ஏற்பட்டது. என் மனைவியிடம் நான், "இவ்வூழியத்தில் என்னால் தொடர்ந்து செல்லக் கூடுமானால் நலமாயிருக்கும்" என்றேன்.

அவள், "பில், ஏன் அப்படி சொல்லுகிறீர்கள்" என்றாள்.

நான், "ஓ, எனக்கு அதிக சிரமங்கள் ஏற்படுகின்றன" என்றேன்.

"அவைகளையெல்லாம் விட்டுவிட்டு வேறு வழியில் செல்லப் பார்கின்றாயா? அவைகளிலிருந்து ஏமாற்றி செல்ல

முயற்சிக்கின்றாயா?" என்று பரிசுத்த ஆவியானவர் என்னிடம் கூறுவது போல் தோன்றினது. பாருங்கள்?

"இல்லை, நான் சிரமங்களை முகமுகமாய் சந்திப்பேன் என்றேன்" பாருங்கள்?

**அங்கு மிகவும் நன்றாக இருக்கும்.** நான் உத்தமமாக உண்மையாக, என் கண் கண்டவைகளை சாட்சியாக அறிவிக்கிறேன். **இவ்வாழ்க்கை முடிவுற்ற பின்பு, நாம் நினைப்பதைக் காட்டிலும் மிக்க மேன்மையுள்ள ஒரு தேசத்தில் பிரவேசிப்போம்.** இங்கு அந்நியர்கள் யாராகிலும் இருப்பார்களானால், நான் மூடபக்தி வைராக்கியம் கொண்டவன் என்று நீங்கள் எண்ணிவிட வேண்டாமென்று தேவனை நோக்கி ஜெபிக்கிறேன். உத்தமமாக உங்களிடம் உண்மையையே கூற விரும்புகிறேன். இங்கு இவ்வளவு சத்தியம் உள்ள பொழுது தவறான ஒன்றை உங்களிடம் கூறுவதனால் என்ன பயன்? நான் ஏன் தவறானவைகளைக் கூற வேண்டும்? பாருங்கள்? இது சத்தியம்.

**பவுல் மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டு பேசப்படாத வார்த்தைகளை**

**அவன் கேட்டதில் வியப்பொன்றுமில்லை. ஒரு நாள் அவன், "தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" என்றான்.** ஓ, அது ஜீவனுள்ளதாயிருக்கிறது!

இங்கு நாம் அழுக்குக் குவியலில் வாழ்ந்து வருகிறோம். அவ்வளவுதான்... புகைந்து கொண்டிருக்கும் அழுக்குக் குவியல். அதனால் நாம் அழுக்காகாமல் போனாலும், அதிலே தான் நாம் வாழ்ந்து வருகிறோம். அது பாவம் என்பதை அங்கு எரிப்பதனால், புகைந்து வருகின்றது. பட்டினத்திலுள்ள அழுக்கு குவியல் எரிந்து புகைவதைப் போன்ற குமட்டலான காரியம் வேறெதுவும் இருக்க முடியாது. நீங்கள் எப்பொழுதாகிலும் அதனருகில் சென்றதுண்டா? அந்த அழுக்கிலிருந்து, எல்லாவித துர்நாற்றம் கலந்த புகை தோன்றி வெளிவரும். நீங்கள் அதை முகர்ந்தால், அது உங்களை மயக்கத்தில் ஆழ்த்தும்.

நான் நியூ ஆல்பனியில் பதினெட்டாம் தெருவுக்குச் சென்று, மீட்டரை பார்த்து பணம் வசூல் செய்யும் சமயம் என் ஞாபகத்திற்கு

வருகின்றது. அங்கு ஒரு அழுக்கு குவியல் இருப்பது வழக்கம். அவ்வழியில் போகவேண்டிய நாள் வந்தாலே எனக்கு வெறுப்பு தோன்றும். ஏனெனில் அங்கு பயங்கரமான துர்நாற்றம். அங்கு எலிகளின் உடல்களும், நாய்களின் உடல்களும் எரிந்து புகைந்து, பயங்கரமான துர்நாற்றம் தோன்றும்.

**இந்த வாழ்க்கையை அதனுடன் ஒப்பிடலாம். ஆவிக்குரிய விதமாக கூறினால், பாவமானது எரிந்து புகைந்து, எல்லாவிடங்களிலும் துர்நாற்றம் வீசுகின்றது. ஆனால் நதிக்கு அப்பால், காற்று சுயாதீனமாக வீசி, எங்கு பார்த்தாலும் அழகாகவும், அன்பு, சந்தோஷம், நித்திய ஜீவனாகவும் காணப்படுகின்றது. ஆனால் நாம் ஒரு போரில் ஈடுபட்டிருக்கிறோம். எனவே, நமது போராயுதங்களைக் கீழே வைத்து விட்டு,** "நாம் துரிதமாக அங்கு சென்றுவிடலாம்" **என்று சொல்ல வேண்டாம். நாம் யாரையெல்லாம் நம்முடன் கொண்டு வர முடியுமோ, அவர்களையெல்லாம் கொண்டு வருவோம்.** ஆம்,

## *செய்தி:* 60-05-22M *புத்திரசுவிகாரம்* #3

★★★★★

118. தேவனுடைய சத்தம் உங்களோடு பேச நீங்கள் கேட்கையில் ஏதோ ஒன்று சம்பவிக்கிறது. ஆமென்! அவ்வாறு உங்களுக்கு சம்பவித்ததுண்டா? முப்பதொன்று ஆண்டுகளுக்கு முன்பாக எனக்கு அவ்வாறு சம்பவித்தது. அதன்பிறகு நான் முன்பு போல் இருக்கவில்லை. "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று அவர் கூறினார். அது என்னை மாற்றினது.

119. யோவான் கூறினான்:

***"உடனே ஆவிக்குள்ளானேன் (என்ன ஆவிக்குள்? பரிசுத்த ஆவிக்குள் ஓ!) ஆவிக்குள்ளானேன்.... இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்."***

வெளி.4:2

120. இப்பொழுது யோவான் பூமியைவிட்டு புறப்பட்டு விட்டான். கிறிஸ்து பூமியை விட்டு

கிளம்பிவிட்டு (பரிசுத்த ஆவியின் ரூபத்தில்) மீண்டும் சரீரத்திற்குள்ளாக திரும்பிவிட்டார். இன்றைக்கு சரீரமானது ஒரு நினைவுகூருதலாக அங்கே இருந்து கொண்டு இருக்கிறது. ஒரு பலியாக இருந்து கொண்டிருக்கிறது. இவ்வதிகாரத்தினூடே நாம் அவ்விஷயத்தைப் பார்க்கிறோம். **ஆனால் கிறிஸ்துவின் ஆவியானது சபைக்குள் வாசம்பண்ணும்படி திரும்பி வந்திருக்கிறது. நமக்குள் வாசம் பண்ணும்படியாக.**

121. இப்பொழுது, இங்கே பூமியில் அவரது கிரியையின் காலத்தின் முடிவைக் குறித்து காண்பித்த பிறகு, அவர் பரலோகத்திற்குள் சென்றார். "இவைகளுக்குப் பின்பு சம்பவிக்கப் போகிறவைகளை நான் உனக்குக் காண்பிப்பேன். சபைக்காலங்களுக்குப் பிறகு உள்ளவைகளை காண்பிப்பேன்" என்று யோவானிடம் கூறினார். "யோவானே, நான் இனிமேல் கீழே பூமியில் இருந்து எதையும் உன்னோடு பேச முடியாது; ஏனெனில் நான் அதைவிட்டு நீங்கி வந்துவிட்டேன். நான் உன்னதத்திற்கு வந்துவிட்டேன். எனவே நீ மேலே என்னோடு வந்துவிடு" என்று கூறினார். ஆமென்! "இதற்குப் பிறகு சம்பவிக்கப்போகிறவைகளை நான் உனக்கு

காண்பிப்பேன்” என்றார். ஓ, என்னே! ஓ! தரிசனத்தில் மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டான்.

122. அவனுடைய அனுபவம் பவுலுடைய அனுபவம் போன்றதாகத்தான் இருக்கவேண்டும். 2கொரிந்தியர் 12:2-4 குறித்துக் கொள்ள விரும்பினால் அதைக் குறித்துக்கொள்ளுங்கள். 2 கொரிந்தியர் 12:2-4. பவுலும்கூட ஒரு நாளிலே தரிசனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டான். அதை நீங்கள் அறிந்தீர்களா? அவன் பார்த்த காரியங்கள், அவைகளைப் பற்றி வெளியே பேசுவதற்கு உகந்ததல்ல என்பதாய் இருந்தது. பதினான்கு வருடங்கள் அவன் அதைப்பற்றி குறிப்பிடவேயில்லை. ஆனால் அவ்விரு அனுபவங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டைக் கவனிக்கவும்.

123. **பவுல் எதைக் கண்டானோ அதைப்பற்றி வெளிப்படையாக பேசவோ அல்லது அதைக்குறித்து சொல்லவோ தடை செய்யப் பட்டான்.** ஓ, என்னே! அவன் அதை வெளியே சொல்ல முடியும் என்பதை நான் விசுவாசிக்கவில்லை. **ஒரு சிறு**

**பயனமான நான் ஒரு நாள் இவ்வாறு சென்றிருந்தேன். அதைப்பற்றி நான் குறிப்பிட்டதேயில்லை. இனி ஒருபோதும் கூறவுமாட்டேன்.**

**அவன் வெளியே பேச இயலாதபடிக்கு உள்ள காரியங்களை அவன் பார்த்தான். அவன் மூன்றாம் வானம் வரைக்கிலும் எடுத்துக் கொள்ளப் பட்ட போதிலும், அதைப்பற்றி விவரிக்க வார்த்தைகளே அவனுக்கு இருக்கவில்லை என்று நான் கருதுகிறேன்.** மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டான், பாருங்கள்.

124. யோவான் எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது அது எத்தகையதொரு வேறுபாடானதாக இருந்தது! அவன் அப்பொழுது இயேசுவைக் கண்டான். அவர் அவனிடம், "நீ கண்டவைகளை ஒரு புஸ்தகத்தில் எழுதி, சபைகளுக்கு அனுப்பு" என்று கூறினார். பவுல் கண்டவைகளைப் பேச தடை

செய்யப்பட்டான். ஆனால் யோவானோ, ஒரு புஸ்தகத்தில் அதை எழுதி, அது காலங்கள் நெடுகிலும் போகும்படியாக அவனுக்குக் கூறப்பட்டது. ஓ, என்னே! அது இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது இந்தக் கடைசி நாட்களில் தான் வெளிப்படுத்தப்படவேண்டும் என்று இருக்கிறது. யோவானின் நாளில் அது வெளிப்படுத்தப்படவில்லை. நாம் போய்க் கொண்டிருக்கையில், இப்பொழுது அது வெளிப்படுத்தப்படுகிறது.

125. ஓ கவனியுங்கள், சபைக்காலம் முடிவடைந்த உடனேயே, யோவான் எடுத்துக்கொள்ளப்பட்டதானது, லவோதிக்கேயா சபைக்காலம் முடிவடைந்த உடனேயே எடுத்துக்கொள்ளப்பட்ட சபைக்கு முன்னடையாளமாக இருக்கிறது. இந்த சபைக் காலத்திற்குப் பிறகு எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது. யோவான் மேலே போனது போல, சபையும் தேவனுடைய சமுகத்திற்கு மேலே போகிறது. **அதை நினைக்கையில் அது என் ஆத்துமாவை எழுச்சியூட்டச் கூடியதாக இருக்கிறது. சபையானது எடுத்துக் கொள்ளப்படுதலில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.** வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் இந்த

இடம் பாருங்கள், சபைக் காலத்திற்கு முடிவிலே எழுதப்பட்டிருக்கிறது.

***செய்தி: 60-12-31 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #1***

★★★★★







# நான் அப்பொழுதும் அவரை நேசித்திருப்பேன்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

*செய்தி:* **தேவன் மோசேயிடம் பேசினார்,** ஆகஸ்டு 31, 1953, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

8. நாம் அவரை அறிந்துகொள்வோம் என்று நான் விசுவாசிக்கிறேன். "நாம் இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை, ஆகிலும் அவருடையதைப் போன்ற ஒரு சரீரத்தை நாம் உடையவர்களாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோம். அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம்." நல்லது, அது-அதுவே எனக்குப் போதுமானது, அப்படியே அவர் இருக்கிற இடத்தில் இருப்பது. அது-அது சரி.

இவை எல்லாம் முடிந்து நீங்கள் அவரை சந்திக்க வேண்டி இருந்திருக்குமானால், நீங்கள் என்ன செய்ய விரும்பியிருப்பீர்கள் என்ற ஒரு கருத்தை எப்பொழுதாவது உடையவர்களாயிருந்திருக்கிறீர்களா? நீங்கள் என்ன செய்ய விரும்பியிருப்பீர்கள் என்று எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தது உண்டா: என்னுடைய கைகளையும் முழங்கால்களையும்

தரையில் ஊன்றி (Get down), அவர் நின்று கொண்டிருக்கும் இடத்தை நோக்கி ஊர்ந்து (தவழ்ந்து) சென்று இவ்விதமாக அவருடைய காலை அன்புடன் தட்டிக் கொடுத்திருப்பேன். அது... இருந்திருக்கும். நான்... அப்போது அவர் என்னை மறுத்துவிட்டு (நிராகரித்து), என்னை அகற்றி, நான் நரகத்திற்குப் போயிருந்தாலும், (நான் பட்ட) பெரும் பிரயாசத்திற்கு அதைப் பெற்றுவிட்டதைப் போன்றே உணருவேன். அது சரியே. நூறு வருடங்கள் நான் வாழ்ந்திருந்தாலும், அந்த எல்லா பிரயாசங்களுக்கும், ஒரே (ஒரு) முறை அவருடைய காலை அன்பாக தட்டிக் கொடுக்க மாத்திரம் என்னால் முடிந்திருக்குமானால்... அவர் எவ்வளவு-எவ்வளவு அற்புதமானவர் என்றும் அவர் எனக்கு என்னவாக இருக்கிறார் என்பதையும் சிந்தித்துப் பார்க்கும் போது.

நான்-நான் இன்றிரவு அவரை என்னுடைய முழு இருதயத்தோடும் நேசிக்கிறேன். அவர் என்னை ஏற்க மறுத்து (நிராகரித்திருப்பாரென்றாலும்), அவர் இன்னும் நீதிபரராகவே இருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். நான் நரகத்திற்கு போக வேண்டியிருந்து, அன்பு என்ற அப்படிப்பட்ட ஒரு

காரியம் அங்கே இருந்திருக்குமானால், நான் அப்பொழுதும் அவரை நேசித்திருப்பேன். அவர் எனக்கு என்னவாக இருப்பார் என்று நான் அறிந்திருப்பது அல்லாமல், அவர் இப்பொழுதும் கூட எனக்கு என்னவாக இருந்து வருகிறார் என்பதற்காக நான் அவரை அப்பொழுதும் நேசித்திருப்பேன்…

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★

# நான் இயேசுவைக் காண விரும்புகிறேன். நீங்கள் விரும்பவில்லையா?

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

நான் ஒரு கணப்பை மூட்ட முயன்றுகொண்டிருந்தேன். அப்பொழுது நான் வானொலியைத் திருப்ப நேர்ந்தது, அப்பொழுது நான் சில நிமிடங்களில் உடல் உஷ்ணமடைந்தேன், சகோதரி கேடில் அவர்கள் வானொலியில் தூரத்தில் அத்தேசத்தை, அக்கரையிலுள்ள அத்தேசத்தை, நான் அடையும் பொழுது, நான் இயேசுவைக் காண விரும்புகிறேன். நீங்கள் விரும்பவில்லையா?" என்ற பாட்டை பாடிக்கொண்டிருந்தார்கள்.

116. நான் தரையில் நடுவில் உட்கார்ந்து, அழ ஆரம்பித்தேன். அச்சகோதரி மிக இனிமையான குரலில், பாடும் பறவையின் இனிய குரலில் (Mocking bird என்னப்படும் அமெரிக்கப் பறவை மற்ற பறவைகளின் குரலைப் பாவனை செய்து பாடக்கூடியது - மொழிபெயர்ப்பாளர்) பாடிக்கொண்டிருந்தார்கள். நான் அக்கரைத் தேசத்தில் செல்லும்பொழுது, அச்சகோதரியின் இனிய பாடலைக் கேட்க விரும்புகிறேன். "நான் இயேசுவைக் காண விரும்புகிறேன், நீர் விரும்புகிறீரா?" என்பதே அப்பாடல்.

117. "ஓ தேவனே, நான் ஒரு நாளில் அவரைக்காண விரும்புகிறேன், மலர்களெல்லாம் அருகில் மிதந்து வருகையில் நான் இயேசுவைக்

காண விரும்புகிறேன்" என்று நான் எண்ணினேன். அழகாக, பட்டொளி வீசிப்பறந்திடும் அவரை அவரது சிங்காசனத்தின்மேல் பார்ப்பது எப்படியாயிருக்கும் யோவான் நின்ற அதே இடத்தில் நானும் நிற்க விரும்புகிறேன், எனவே, நானும் அவரை நின்று நோக்கிப் பார்த்திட முடியும்.

***செய்தி:*** வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரம் #2, ஜனவரி 1, 1961, இந்தியானா, அமெரிக்கா

★★★★★

# ஒருக்கால் அவர்கள் ஒரு கோடி வயதானவர்களாயிருக்கலாம். ஆனாலும் அவர்கள் என்றும் போல் யொவனமாகக் காணப்படுவார்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# ஏசாயா 65: 24, 25

அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப்போல வைக்கோலைத் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.



**ஏசாயா 11:6-9**

அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்.

பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப்படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்.

பால் குடிக்குங்குழந்தை விரியன்பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்,

என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

செய்தி: **புத்திரசுவிகாரம் - பாகம் - 2**
Jeffersonville, Indiana, USA
60-05-18

44. இப்பொழுது நாம் எங்கு வந்திருக்கிறோம்? வரப்போகும் அந்த மகத்தான காலத்தில் நாம் மகிமையின் சரீரத்தை தரித்துக் கொள்வோம். வானத்துக்குறிய இந்த சரீரம் அப்பொழுது மகிமையின் சரீரமாக மாறும். நான் கூறுவது உங்களுக்குப் புறிகின்றதா? அப்பொழுது நான் நடந்து சென்று, "சகோ. நெவில்" என்று அவருடன் பேசுவேன்.

ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். நான், "சகோ. ஹ்யூம்ஸ், இன்று காலை தந்தையிடம் செல்லலாம்" என்பேன். அந்த தந்தை யார் தெரியுமா? அவர்தான் தேவன். அவரை நாம் இப்பொழுது அறிந்திருக்கிறோம். அவர் இரட்சகர், சுகமளிப்பவர்.

பாவம் சிருஷ்டிக்கப்பட்டது என்பது கிடையவே கிடையாது. கேட்பதற்கு அது

அவ்வளவு நன்றாக இல்லை. இல்லையா? பாவம் சிருஷ்டிக்கப்படவில்லை. இல்லை, ஐயா பாவம் தாறுமாறாக்கப்பட்ட ஒன்றாகும். சிருஷ்டி கர்த்தர் ஒருவரே. அவர் தான் தேவன். பாவம் என்பது நீதி தாறுமாறாக்கப்படுதல் (Perversion). விபச்சாரம் என்பது என்ன? நீதியான ஒரு செயல் தாறுமாறாக்கப்படுதல். பொய் என்பது என்ன? உண்மை தவறாக உரைக்கப்படுதல். நிச்சயமாக. சபித்தல் என்பது என்ன? தேவனுடைய ஆசிர்வாதங்கள் சபித்தலாக மாற்றப்படுதல். எனவே ஆசிர்வாதங்களுக்குப் பதிலாக அவர்கள் சாபத்தைப் பெற்றனர்.

பாவம் என்பது சிருஷ்டிப்பல்ல. அது தாறுமாறாக்கப்பட்ட ஒன்று. சாத்தானால் பாவத்தை சிருஷ்டிக்க முடியவில்லை. எனவே தேவன் சிருஷ்டித்ததை அவன் தாறுமாறாக்கினான். அது முற்றிலும் உண்மை. மரணம் என்பது ஜீவன் தாறுமாறாக்கப்படுதல்.

45.
இதை கவனியுங்கள், இதை கவனியுங்கள். நான் நடந்து சென்று, "சகோ. ஹ்யூம்ஸ், நீங்களும் நானும் சகோ. பீலரும் இன்னும் சில சகோதரர்களும் நமது தந்தையிடம் போகலாம்" என்பேன். நான் மேலும், "நாம் சுற்றுப் பயணம் செய்யலாம்.



நீங்கள் பூமியிலிருந்த போது மலைகளை விரும்பினீர்கள் அல்லவா?”



“ஆம், நிச்சயமாக.”

“அப்படியானால் கோடிக்கணக்கான மைல்கள் தொலைவில் அந்த புதிய உலகில், சில உள்ளன. அங்கு சென்று உலாவி வாருங்கள்.”

“சூரியன் உதிப்பதற்காக ஒவ்வொரு நாளும் அதை நான் உதிக்கச் செய்ய வேண்டும்.” “நான் மறு உத்தரவு கொடுப்பேன். அவர்கள் பேசும் போதே நான் கேட்பேன்” ஏசாயா: 66. அது உண்மை.

46. உங்களுக்குத் தெரியுமா, அங்கு நான் நடந்து கொண்டிருப்பேன், நாமெல்லாரும் அங்கு ஐந்நூறு ஆண்டு காலமாக நடந்து கொண்டிருப்போம். ஆனால் கோடிக்கணக்கான ஆண்டுகளுடன் அதை

ஒப்பிடும் போது, அது ஒரு சிறு பயணமாகவே அமைந்திருக்கும். நான் கூறுவது பைத்தியமாகத் தென்படலாம். ஆனால் அதுவே உண்மை. பாருங்கள், அது உண்மை. ஏனெனில் காலவரம்பு என்பது அங்கு கிடையாது. அது நித்தியம்.

அங்கு நான் நடந்து சென்று கொண்டிருக்கும் போது யாரை சந்திக்கிறேன் தெரியுமா? சகோதரி ஜார்ஜி ப்ரூஸ் அல்லவா அது? சகோதரி ஜார்ஜி, உங்களைக் கண்டு அதிக காலமாகிவிட்டது. நீங்கள் எப்பொழுதும் போலவே காணப்படுகின்றீர்கள்.

ஒருக்கால் அவர்கள் ஒரு கோடி வயதானவர்களாயிருக்கலாம். ஆனாலும் அவர்கள் என்றும் போல் யௌவனமாகக் காணப்படுகின்றார்கள். அவர்கள் ஏதாவதொன்றின் முதுகை தடவிக் கொண்டிருப்பார்கள். அது என்னவென்று பார்த்தால், சிறுத்தையாக அல்லது சிங்கமாக இருக்கும்.



நான், “சிறுத்தையே, இன்று காலை எப்படியிருக்கிறாய்?” என்று கேட்க, அது, “மியாவ்” என்று பூனைக் குட்டியைப் போல் பதிலுரைக்கும்.

அந்த சகோதரி, “ஓ, நான் பெரிய பூக்கள் வளர்ந்துள்ள பூங்காவில் சில சகோதரர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். நாங்கள் அந்த பூக்களைப் பார்த்துக் கொண்டே ஐந்நூறு ஆண்டுகள் அங்கேயே தங்கிவிட்டோம்” என்பார்கள். கேட்பதற்கு அது பைத்தியமாகத் தோன்றும், ஆனால் அது உண்மை. அது முற்றிலும் உண்மை. தேவன் அவ்வாறே அதை நிர்ணயித்துள்ளார்.

47. சகோதரி ஜார்ஜியா, கர்த்தர் உங்கள் இருதயத்தை ஆசிர்வதிப்பாராக. அங்கு எவ்வித தீங்கும் நேரிடாது.

சாயங்கால நேரத்தில் நாம் மலையின் உச்சியில் சென்று, “ஓ, பிதாவாகிய தேவனே, ஒரு சமயம் நான் பாவத்தில் விழுந்து கிடந்தேன். நான் பாவம் என்னும் உளையான சேற்றில் மூழ்கியிருந்தேன். பிதாவாகிய தேவனே, என்னை நீர் இரட்சித்தீர்” என்போம்.



## குறிப்பு:

இந்தச் சிறு புத்தகத்திலுள்ள எல்லா படங்களும் இணைதளத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

தேவனுடைய வார்த்தைகளும், செய்தியும் முற்றிலும் சத்தியமாக இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். ஆனால் பரலோகத்திலுள்ள காட்சிகளை யாராலும் அப்படியே வரையவே முடியாது. ஏனென்றால் அதை கண்கள் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை என்று வேதாகமம் கூறுகிறது. எனவே மனுஷனுடைய இருதயத்தில் தோன்றாமல் மனிதனால் எவ்வாறு அதைத் தத்ரூபமாக வரைய முடியும்? ஆனாலும் சில ஓவியர்கள் வேதவசனங்களை ஆதாரமாகக் கொண்டு இந்தப் படங்களை வரைந்திருக்கிறார்கள். அவர்களுக்காக தேவனுக்கு நன்றி.

ஏனென்றால், இவைகளைக் காணும்போது, நாம் இக்கொஞ்ச கால உலக வாழ்க்கை முடிந்து நித்திய நித்திய காலமாக வசிக்கப் போகும் அந்த மகத்தான ஒளிமயநாட்டைக் குறித்து ஓரளவு நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஆனாலும் அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது ஒன்றுமே இல்லை. அதை எந்த மனிதனாலும் வரைய முடியாது. ஒருநாள் நாம் அங்கு போகும்போது தான் அதை அனுபவித்து மகிழ்வோம். இந்த படங்களை வரைந்த ஓவியர்களுக்கு நன்றி. மேலும் இந்தப் படங்களில் கலர் உடைகளை அணிந்திருப்பதாக வரையப்பட்டுள்ளது. ஆனால் அங்கே வெண்ணாடை அணிந்திருப்பார்களோ என்று நினைக்கிறேன்.

# நரகம்

# நரகம் ஒரு எரிகிற ஸ்தலம் என்று பேசுகிறோமே, அங்குள்ள பயங்கரங்களை நினைக்கும்போது அது இன்னும் பத்து லட்சம் மடங்கு மோசமாயுள்ளது

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## **செய்தி: தேவனால் அருளப்பட்ட ஒரே ஆராதனை ஸ்தானம்,**
## நவம்பர் 28, 1965, ஷ்ரீவ்போர்ட், லூயிசியானா, அமெரிக்கா

23. மேலும், அனேக ஆண்டுகளுக்கு முன்பு நான் இழக்கப்பட்டவர்களின் பிரதேசங்களையும் கண்டேன். அங்கேயிருந்தேன்.

நண்பனே, நான் உனக்குக் கூறுகிறேன், ஒரு முதிர்வயதுள்ள மனிதனாக நான் உன்னை இதை நம்பச் செய்யட்டும். தேசம் முழுவதும் இந்தக் காலை வேளையில் செய்தியைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களே, **அந்த இடத்தைப் பார்க்க விரும்பவே விரும்பாதீர்கள்.**

**நான் அதை விவரிக்கத்தக்கதான வழியேயில்லை. நான் ஒரு ஓவியனாயிருப்பேனோனால், ஒரு தூரிகை**

(Brush) **மையைக் கொண்டு என்னால் அதைப் படமாக வரைய இயலாது.**

ஒரு தேவ ஊழியக்காரனாக என்னால் அதை உங்களுக்கு விவரித்துக் கூறமுடியாது. **நரகம் ஒரு எரிகிற ஸ்தலம் என்று பேசுகிறோமே, அங்குள்ள பயங்கரங்களை நினைக்கும்போது அது இன்னும் பத்து லட்சம் மடங்கு மோசமாயுள்ளது.**

24. ஆனால் **மோட்சம்**... அல்லது இந்த இடம் எங்கானாலும் சரி, அதை என்னவென்று அழைப்பதென்று எனக்குத் தெரியவில்லை. "பலிபீடத்தின் கீழ் உள்ள ஆத்துமாக்கள்" என்று அந்த இடத்தைக் குறித்துக் குறிப்பிட்டார். அப்போது, நான் ஒரு போதும்...

**அது எவ்வளவு மகிமையான காரியம் என்று விவரித்துச் சொல்ல வழியே இல்லை,** அங்கே... இப்பொழுது, நீங்கள் என் வார்த்தையை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும், நான் ஒரு மனிதன் மட்டுமே, பாருங்கள்? ஆனால் இந்தத் தரிசனங்கள்

நான் கூறிய பிரகாரமே எப்பொழுதும் நிறைவேறி வந்திருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் மெய்யாகவே இருந்திருக்கின்றன. அதுவும் கூட (அந்த தேசத்தைக் கண்டது. 21ம் பத்தி – – தமிழாக்கியோன்) மெய்யாகவே உள்ளது.

**நீங்கள் எதைச் செய்தாலும், நீங்கள் மற்ற எல்லாவற்றையும் தவறவிட்டாலும் (சுகம், பலம், உங்கள் கண்பார்வை எதுவாயிருந்தாலும் சரி), அதை தவறவிட்டு விடாதீர்கள். அதோடு ஒப்பிடப்படக்கூடியது ஒன்றும் இல்லை.**

**எனக்குத் தெரிந்து, அதை விவரிக்கத்தக்கதான வார்த்தை ஆங்கில மொழியில் இல்லை.** அது **"பூரணமானது"** எனக் கூறுவீர்களானால், அது அதையும் கடந்திருந்தது; **"மிக நேர்த்தியானது"** என்பீர்களானால் அது அதையும் கடந்திருந்தது. **"உயர்ந்தது"** எனக் கூறுவீர்களானால்,.... **எனக்குத் தெரிந்தபடி அதை விவரிக்கத்தக்கதான வார்த்தை இல்லை,** ஏனென்றால் அது அவ்வளவு...

# ஐசுவரியவானும் லாசருவும் உங்களுக்கு நினைவிருக்கிறதா?

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **ஆண்டவரை நினைவுகூருதல்**, டிசம்பர் 9, 1962, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

68. நான் வேறொரு மனிதனை இங்கு குறிப்பிட்டு, அவனைக் குறித்து சற்று பார்க்க விரும்புகிறேன். யூதாஸைக் குறித்தென்ன? அவன் எதை நினைவுகூருவான்? இப்பொழுது நாம் ஆண்டவரை நினைவு கூருதலைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம், ஓ, யூதாஸ், இன்றிரவும், அவன் இல்லாமற் போகுமட்டும், தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்று போட்டதைக் குறித்து சதா நினைத்துக் கொண்டிருப்பான். அவன் இயேசுவைத் தன் சொந்த ஆதாயத்திற்காக விற்றுப் போட்டான். நாம் யூதாஸை ஏளனம் செய்கிறோம். அவன் மிகவும் பொல்லாதவன் என்றும், சமுதாயத்தில் எந்த இடத்தையும் பெறுவதற்கும் அவனுக்குத் தகுதியில்லையென்றும் நாம் கூறுகிறோம். ஏன்? அவனுக்கு அப்போஸ்தலனாயிருக்கத்

தருணம் கிடைத்திருந்தும், அவனுடைய ஆண்டவரை அவன் விற்றுப் போட்டான், அப்போஸ்தலனின் பதவி மிகவும் உன்னத அழைப்பாக வேதத்தில் கருதப்படுகிறது, தீர்க்கதரிசியின் அழைப்பைக்காட்டிலும் அது உன்னதமானது. அவனுக்கு அப்போஸ் தலனாயிருக்கத் தருணம் வாய்த்தது. ஆயினும் அந்த உரிமையை அவன், தன் சொந்த ஆதாயத்திற்காக விற்றுப்போட்டான். இப்பொழுது யூதாஸ் அதை – நினைவுகூர வேண்டியவனாயிருக்கிறான். அப்படித்தான் அவன் இயேசுவை நினைவுகூர வேண்டும். சொந்த ஆதாயம்.

69. இன்றிரவு எத்தனை பேர் பிரசங்க பீடத்தில் நின்று கொண்டும், பாடகர் குழுக்களின் அங்கியை அணிந்து கொண்டும், மூப்பர்களின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டும், பொருளாளர், தர்மகர்த்தா போன்ற முக்கிய ஸ்தானத்தை வகித்துக் கொண்டும், அதே சமயத்தில் அவர்களுக்களிக்கப்பட்டுள்ள தருணத்தை தங்கள் சொந்த புகழுக்காகவும், “டாக்டர் இன்னார் இன்னார், அல்லது பேராயர்

இன்னார் இன்னார்" என்று அழைக்கப்படுவதற்காகவும், சொந்த ஆதாயத்திற்காகவும் விற்றுப்போடுகின்றனர் என்பதை - நினைத்துப் பார்க்கிறேன்.

70. ஒருவர் ஒருமுறை என்னிடம், "இந்தச் செய்தி உண்மையென்று நான் நம்புகிறேன். ஆனால் அதை நான் பிரசங்கித்தால், தெருவில் பிச்சையெடுக்க நேரிடும்" என்றார்.

71. ஐசுவரியவானும் லாசருவும் உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவர்களுடைய கடைசி கட்டம் - நித்திய கட்டம் - எவ்வாறிருந்தது? இவ்வுலகிலிருந்த போது ஒருவன் பிச்சைக்காரன், மற்றவன் ஐசுவரியவான். **ஆனால் ஒரு நாள் அந்த காட்சி மாறினது.** இருவரும் அதை நினைவுகூருவார்கள். யூதாஸ் இயேசுவைத் தன் சொந்த ஆதாயத்திற்காக விற்றுப் போட்டான் என்று ஜனங்கள் இன்று கூறுகின்றனர். ஆனால் அநேகர் இன்றைக்கும் அதையே செய்து கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் அவரைத் தங்கள் சொந்த ஆதாயத்திற்காக விற்றுவிட்டனர்.

72. அக்காலத்திலிருந்த ஆசாரியர்களும், அவருடைய ஊழியக்காரராக, சீஷர்களாக, ஆகும் தருணத்தை இழந்து விட்டதை நினைவுகூர வேண்டியவர்களாயிருக்கின்றனர். அவர்கள் பொறாமை என்னும் விஷத்திற்கு அதை விற்றுப் போட்டனர். அவருடைய போதகத்தைக் குறித்து அவர்கள் பொறாமை கொண்டனர். ஏன்? அவருடைய பன்னிரண்டாம் வயதிலேயே அவர் அவர்களைத் திணறடித்து விட்டார். அப்படியிருந்தும் கூட, அவர் தான் மேசியாவென்று அவர்களால் அடையாளம் கண்டு கொள்ள இயலவில்லை. அவர் செய்த கிரியைகளை அவர்களால் செய்ய முடியவில்லை. அவருடைய போதகங்களை ஏற்றுக்கொண்டால், உயர்ந்த நிலையிலுள்ளவர்களிடம் தங்கள் கீர்த்தியை இழந்து விடுவார்களோ என்று அவர்கள் பயந்தனர். அதன் விளைவாக அவர்கள் தங்களுக்குக் கிடைத்த தருணத்தை விற்றுப்

போட்டனர். ஏரோது எவ்வளவு குற்றவாளியோ, இவர்களும் அவ்வளவு குற்றவாளிகளே.

73. இன்றுள்ள ஸ்தாபனங்களிலுள்ள அங்கத்தினனும் அதே நிலையில் இருக்கிறான். இயேசுவின் காலத்திலிருந்தவர்கள் தங்கள் ஸ்தாபனத்தின் மேல் நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்களுடைய புகழ் போய்விடுமோ என்று அவர்கள் பயந்தனர். இயேசுவின் போதகங்களை அவர்கள் ஏற்றுக் கொள்ள நேரிட்டால், அவர்கள் ஜெப ஆலயங்களிலிருந்து புறம்பாக்கப்படுவார்கள். அது என்ன? அது விக்கிரகாராதனை. அவர்களுக்கு முன்பாக வெளிப்பட்ட ஜீவனுள்ள வார்த்தையை ஏற்றுக் கொள்வதற்குப்பதிலாக, அவர்கள் விக்கிரகமாகிய ஸ்தாபன கோட்பாடுகளையும், விக்கிரகமாகிய ஸ்தாபன மார்க்கத்தையும் வழிபடுகின்றனர்.

அவர்கள் அவனுக்கு மகா பெரிய ஒரு அடக்க ஆராதனை செய்தார்கள், ஒருக்கால் கொடியானது அரைக்கம்பத்தில் பறந்திருக்கலாம், அந்த பட்டினத்தின் மேயர் அங்கு வந்து இருக்கலாம், போதகர்கள் வந்திருக்கலாம், நம்முடைய சகோதரன் இப்பொழுது மகிமைக்குள்ளாக போயிருப்பார் என்று சொல்லி இருப்பார்கள். ஆனால் வேதம் என்ன சொல்லுகிறது என்றால், அவன் பாதாளத்திலே வேதனையில் தன் கண்களை ஏறெடுக்கும்போது, அந்த ஆழிவிற்கு (பெரும்பிளப்புக்கு) அப்புறமாக அவன் தூரத்தில் நோக்கி பார்த்தபிறகு வாசலண்டையிலே பருக்களால் நிறைந்த அந்த பிச்சைக்காரனை கண்டான். அங்கே பரலோகத்திலே கண்டான்

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: வழிநடத்தும் தன்மை, 65-10-31

79. ஜனங்கள் அப்படி செய்வதை நீங்கள் கேட்டிருக்கலாம் நான் கேட்டிருக்கிறேன், பாருங்கள். அவர் என்னை ஆசீர்வதித்திருக்கிறார் அதனுடைய அர்த்தம் அதுவல்ல புரிகின்றதா, கொஞ்ச காலம் கழித்து அவனுடைய களஞ்சியங்கள் எல்லாம் மிகுதியாய் வழியத் தொடங்கின, அவன் ஆத்துமாவே உன்னுடைய இளைப்பாறுகளை எடுத்துக்கொள், என்னிடம் அவ்வளவு பணமும் அவ்வளவு வெற்றியும் இருக்கிறது, நான் அவ்வளவு பெரிய ஒரு மனிதன் எல்லா கிளப்புகளிலும் எனக்கு பங்கு உண்டு, உலகத்தின் ஐசுவரியங்கள் என் கரங்களில் இருக்கின்றது, மிகுதியான நிலங்களும் மிகுதியான பணமும் எனக்கு சொந்தம், நான் ஒரு நல்ல அருமையான மனிதன், எல்லாருக்கும் என்னை பிடிக்கும், ஆனால்

உங்களுக்குத் தெரியுமா? வேதம் அது சொல்லுகிறது அந்த இரவு தேவன் அவனிடத்தில். நான் உன் ஆத்துமாவை போகிறேன் என்று சொன்னார்..

80. பின்னர் என்ன நடந்தது, அங்கே ஒரு பிச்சைக்காரன் இருந்தான், ஒரு ஏழையான வயதான கிழவன் அவனுடைய வெளி வாசலில் கிடந்தான், அங்கு எங்கோ அந்த எருசலேமிலே, அவர்கள் அங்கே வீட்டின் மாடியிலே சாப்பிட்டார்கள், அந்த விதமான ரொட்டி துணிக்கைகளும் இறைச்சி துணிக்கைகளும் அவர்கள் அதை கீழே போடும் போது, அவைகள் தரையிலே வந்து விழும், அவைகளை அவர்கள் திரும்ப எடுப்பதில்லை ஏனென்றால் எருசலேமில் உள்ள எல்லாம், அந்தப் பழைய பட்டினம் அது, ஒரு சிறு காரியம் ஆச்சரியமாக சொல்வதற்கு ஒன்றுமில்லையே அவைகள். ரொட்டியின் மீது ஈ, மாமிசத்தின் மீது ஈ, வெண்ணையின் மீது ஈ, எல்லாவற்றின் மேலும் ஈ, அவைகள் அங்கே வீதிகளிலும் சாக்கடைகளிலும், எல்லா காரியங்களிலும்

இருக்கும் அப்படியே உள்ளே பறந்து வந்து அப்படியே சாப்பாட்டின் மேல் உட்காரும். ஆகவே இந்த ஜனங்கள் அவர்களுடைய வீட்டின் மேலேறி கொள்வார்கள், அங்கே சாப்பிடுவார்கள், அப்பொழுது இப்படி மேலும் துணிக்கைகளை பொறுக்கி தள்ளுவார்கள், வீதிகளில் இருக்கும் நாய்கள் அந்த துணிக்கைகளை சாப்பிடும்.

81. அந்த ஏழை வயதான கிறிஸ்தவன் அங்கே வீதியிலே இருந்து, அவனுடைய தட்டிலிருந்தும் படுக்கையில் இருந்தும், அவனுடைய மேஜையிலிருந்தும் துணிக்கைகளை சாப்பிடும்படி அனுமதித்தான். அதன் பின்னர் அவன் உள்ளே வந்தபோது எருசலேமுக்குள்ளாக அவனுக்கு (லாசரு) பருக்கள் உண்டானது அந்தப் பருக்கைகளின் மேல் போட்டு மூடுவதற்கு அவனிடத்தில் ஒன்றுமில்லை அவனுடைய பெயர், லாசரு. அவன் சொஸ்தம் அடையும்படியாக நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கினது, கொஞ்ச காலத்திற்குப் பிறகு உங்களுக்கு தெரியுமா இந்த ஆஸ்தி உள்ள மனிதன், அவன்

சுகவீனமானான். எல்லாவித மருந்துகளையும் வாங்கும்படியாக அவனிடம் பணம் உண்டு என்று கண்டான்.

82. எல்லாவிதமான வைத்தியர்களும் அவனுக்கு இருந்தனர், ஆனால் உங்களுக்கு தெரியுமா? சில நேரங்களில் வைத்தியர்களால் நமக்கு உதவி செய்ய முடியாது போய்விடும், மருந்துகள் நமக்கு உதவி செய்ய முடியாமல் போகும், ஒன்றும் நமக்கு உதவி செய்ய முடியாமல் போகும், நாம் தேவனுடைய இரக்கத்தைதான் நம்பி இருக்கின்றோம், அவன் தன்னுடைய பாதையின் முடிவுக்கு வந்தான், வைத்தியர்களால் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை, நர்சுகளால் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை, மருந்தினால் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை, அவன் மரித்தான்.. அவனுடைய ஆத்துமா அப்படியே சரீரத்தை விட்டு வெளியேறின பிறகு, பாருங்கள்.

83. அது அவனுடைய எல்லா பணத்தையும், அவனுடைய எல்லா கல்வியையும், அவனுக்கிருந்த எல்லா

காரியங்களையும் அவனுடைய எல்லா புகழையும் விட்டு சென்றது. அவர்கள் அவனுக்கு மகா பெரிய ஒரு அடக்க ஆராதனை செய்தார்கள், ஒருக்கால் கொடியானது அரைக்கம்பத்தில் பறந்திருக்கலாம், அந்த பட்டினத்தின் மேயர் அங்கு வந்து இருக்கலாம், போதகர்கள் வந்திருக்கலாம், நம்முடைய சகோதரன் இப்பொழுது மகிமைக்குள்ளாக போயிருப்பார் என்று சொல்லி இருப்பார்கள். ஆனால் வேதம் என்ன சொல்லுகிறது என்றால், அவன் பாதாளத்திலே வேதனையில் தன் கண்களை ஏறெடுக்கும்போது, அந்த ஆழிவிற்கு (பெரும்பிளப்புக்கு) அப்புறமாக அவன் தூரத்தில் நோக்கி பார்த்தபிறகு வாசலண்டையிலே பருக்களால் நிறைந்த அந்த பிச்சைக்காரனை கண்டான். அங்கே பரலோகத்திலே கண்டான், அவன் சத்தமிட்டான், கொஞ்சம் தண்ணீரோடு கூட லாசருவை இங்கே அனுப்புங்கள் இந்த அக்கினி தழல் எனக்கு வேதனையை

கொடுக்கிறது என்று சத்தமிட்டான். ஓ முடியாது என்று சொல்லப்பட்டது, பாருங்கள்..

84. அவன் ஜீவியத்தில் அவன் தவறான தெரிந்து கொள்ளுதலை செய்தான், புரிகின்றதா. அவனுடைய ஜீவியத்தில் இருந்து வெளியே போகும்படியான பாதையின் இறுதிக்கு அவன் வந்தபோது, அவன் மார்க்கத்தால் வழிநடத்தப்பட்டவனாய் இருந்தான், அவன் கல்வியினால் வழி நடத்த பட்டவனாய் இருந்தான், அவனுடைய வெற்றியின் செல்வாக்கிலே வழி நடத்த பட்டவனாய் இருந்தான், ஆனால் நீங்கள் பாருங்கள் அவன் கரம் நீட்டி பற்றிக்கொள்ள அவனுக்கு அங்கே ஒன்றும் இல்லை, அந்தக் காரியங்கள் யாவும் அங்கு முடிவடைந்துவிட்டது. உங்களுக்கு புரிகின்றதா, சின்ன பையன்களே, முதியவர்களே நான் என்ன சொல்லுகிறேன் என்று உங்களுக்கு புரிகின்றதா.. அவனைப் பிடித்து தாங்கத்தக்கதாக அவனுக்கு அங்கே ஒன்றும் இல்லை, அவனுடைய பணத்தினால் அவனைத் தாங்க முடியவில்லை,

வைத்தியரோடு உள்ள அவனுடைய நண்பர்களால் அவனைத் தாங்க முடியவில்லை, மருந்தினால் அவனைத் தாங்க முடியவில்லை, அவனுடைய ஆசாரியன் அவனுடைய மார்க்கம் அவனைத் தாங்க முடியவில்லை, ஆகவே அவன் செய்யக்கூடியதாய் இருந்ததெல்லாம் ஒரே காரியம்தான், நித்திய ஜீவனாகிய அந்த இயேசுவை அவன் ஏற்றுக் கொள்ள மறுத்தான்.

85. ஆகவே அவன் என்ன செய்ய வேண்டி இருந்தது, பாதாளத்தில் அவன் மரணத்தில் அமிழ்ந்து போக வேண்டி இருந்தது. என்ன ஒரு பிராண ஆபத்தான தவறை அந்த வாலிபன் செய்தான்.. அவன் இயேசுவை ஏற்றுக் கொள்ள, இயேசுவினால் வழிநடத்தப்பட எப்பொழுது மறுத்தானோ, அவன் அப்பொழுதே அதை மறுத்தான். இன்றைக்கு அநேக வாலிப ஜனங்கள் அந்தத் தவறைதான் செய்கிறார்கள், கர்த்தராகிய இயேசுவினால் வழிநடத்தப்பட மறுக்கிறார்கள், நித்திய ஜீவனை மறுக்கின்றதும் இயேசுவினால்

வழி நடத்தப்படுவதை மறுக்கின்றதும், வந்து என்னை பின்பற்றி வா என்று அவர் சொன்ன போது மறுத்ததும். என்னே ஒரு பிராண ஆபத்தான காரியம் என்று நாம் இப்பொழுது காண்போம்.. இந்த கவர்ச்சியான சின்ன மனிதன் இன்று மதியம் என்ன சொன்னான் என்று பாருங்கள்.

86. நீங்கள் பள்ளியைவிட்டு வெளிவரும்போது, பள்ளியை விட்டு விலகும் போது, உனக்கு இன்னொரு வழிநடத்துபவர் தேவை, ஆனால் அது இயேசுவாய் இருக்கட்டும். இயேசு தான் வேதமாய் இருக்கிறார், நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா. இதுதான் நமக்கு இயேசுவின் ஜீவியமும் அவருடைய கற்பனைகளுமாய் எழுத்தின் வடிவில் உள்ளது. ஆகவே நாம் காணும்படியாக இதற்குள்ளாக நான் பார்க்க வேண்டும், இதுதான் வரைபடம் நாம் பின்பற்றி போகத்தக்கதாக நித்திய ஜீவனை நாம் துவக்க அவர் நமக்கு சொன்ன வரைபடம் இதுதான்.

# நாம் மரித்த பிறகும், அப்பொழுதும் நீங்கள் சுயநினைவுடையவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை அது காட்டுகிறது. அவன் அதை நினைவுகூர்ந்தான்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **என்னைப் பின்பற்றி வா, ஜூன் 1, 1963, டூசான், அரிசோனா, அமெரிக்கா**

*65.* அது மட்டுமல்ல, **ஆனால் நாம் கூறுகிற யாவுமே ஜீவிக்கிறது**. நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் மரிக்க முடியாது. இப்பொழுது, இந்த அறையினூடாக வார்த்தைகளும், ஜனங்களின் வடிவங்களும் வந்து கொண்டிருக்கின்றன. தொலைக்காட்சி அதைக் கிரகித்துக் கொள்கிறது. நீங்கள் சரியாக இங்கே பேசி விட்டு, அதே வினாடியில் உலகத்தைச் சுற்றிலும் உங்கள் சத்தத்தை அவர்களால் கேட்க முடியும். நீங்கள் அதை இந்த அறைக்குள் கூட கேட்பதற்கு முன்பே, அது மின்னணு முறையினால் உலகத்தைச் சுற்றிலும் போகிறது.

*66.* மேலும் தேவனுடைய மகத்தான திரையானது அதை கிரகித்துக் கொள்கிறது.

**நீங்கள் அசைகிற ஒவ்வொரு அசைவும், நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலும், நீங்கள் அதை நியாயத்தீர்ப்பில் சந்தித்தாக வேண்டும்.** புரிகிறதா? எனவே, வாலிப பிள்ளையே, அதை நிறுத்துவதற்கு இது ஒரு நல்ல காரியமாகும், இந்தக் காரியங்களைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள், பாருங்கள், ஏனென்றால் நீங்கள் அதை மீண்டும் சந்திக்கப் போகிறீர்கள். புரிகிறதா?

67. நாம் இந்த வாலிபனைக் குறித்தும், அவன் பெற்றிருந்த வாய்ப்புகளைக் குறித்தும் ஆராய்ந்து பார்ப்போம், அவனுடைய ஸ்தானத்தில் உங்களை நீங்களே பொருத்திப் பாருங்கள். பெக்கியைப் போலவும், மார்லினைப் போலவும் இருக்கிற ஒரு சிறு பெண்ணே, அவனுடைய ஸ்தானத்தில் நீ நின்று கொண்டிருந்தது போலவே, அதேவிதமாக, இன்னும் ஜீவிக்கிற அந்த **சத்தத்தை** உன்னால் கேட்க முடிந்தது.

68. அது இன்னும் ஜீவிக்கிறது. அது இன்னும் அசைந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞானமானது, "இரண்டாயிரம்

வருடங்களுக்கு முன்பு **அவர்** பேசின **அவருடைய** சரியான **சத்தத்தை** இப்பொழுதிலிருந்து இருபது வருடங்களில் அவர்களால் கிரகித்துக் கொள்ள முடியும்" என்று கூறுகிறது. அது இன்னும் ஜீவிக்கிறது. கடலில் போடப்பட்ட ஒரு கூழாங்கல்லைப் போன்று, அந்த அலையானது ஒருபோதும் நிற்பதேயில்லை. அது ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்து, கரையை அடைந்து, மீண்டும் திரும்பி வருகிறது.

69. **அதுபோலவே ஒரு சத்தமானது ஒருமுறை காற்றில் பேசப்படும்போது, அது ஒருபோதும் மரித்துப் போவதில்லை. நியாயத்தீர்ப்பில் உங்களால் எதையும் கூற முடியாது. அது சரியாக அங்கே இருக்கிறது.** "என்னைப் பின்பற்றிவா" என்று அந்த வாலிபனை அழைத்த இயேசு கிறிஸ்துவின் சத்தமானது அந்த திரையில் காட்டப்படும், அவன் அதைப் புறக்கணித்தது துக்ககரமானது, ஏனென்றால் அவன் அந்த மகத்தான உரிமையைக் கொண்டிருந்தான். பாருங்கள்? நாம்... எப்போதுமே அது பணமாக இருக்க வேண்டியதில்லை. அது

*வேறு காரியங்களாகவும் இருக்கலாம். பாருங்கள்? நாம் அந்த அழைப்புக்குச் செய்வதைக் காட்டிலும், நாம் மிக அதிகமாக நேசித்து, வைத்திருக்கிற எதுவுமே நமக்கு ஒரு பணத்தைப் போன்றே ஆகிவிடுகிறது, பாருங்கள். அது நம்மைக் கெடுக்கும் ஏதோவொன்றாக ஆகிவிடுகிறது.*

*70. இப்பொழுது நாம் சிறிது அவனைப் பின்தொடர்ந்து போவோம். அவன் அதைப் புறக்கணித்த போது, என்ன சம்பவித்தது?* **அந்த கிறிஸ்துவின் சத்தத்திற்கு அவன் செவிகொடுக்கவில்லை. அவன் தன்னுடைய நண்பர்களோடு போய் விட்டான்.**

*71. வாலிப பிள்ளைகளே, நீங்கள் எல்லாரும் அருமையான பிள்ளைகள்,* **நீங்கள் நண்பர்களோடு சேர்ந்து கொள்ள வேண்டியது தான், ஆனால் நீங்கள் கொண்டிருக்கும் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் கவனியுங்கள். அந்த நண்பன் கிறிஸ்துவைப் பின்பற்றிக் கொண்டிருந்தால், அந்த நண்பனோடு செல்லுங்கள். நீங்களும் கூட கிறிஸ்துவைப்**

**பின்பற்றுங்கள். ஆனால் அவன் கிறிஸ்துவைப் பின்பற்றாதவனாகில், அவனோடு சேர்ந்து கொள்ள வேண்டாம்.**

72. நாம் அவனைக் கவனிப்போம். அவன் அநேகமாக அவனுடைய நண்பர்களைப் பின்பற்றிப் போனான் என்பதை நாம் கண்டுகொள்கிறோம். அவன் ஒரு மகத்தான தலைவனாக ஆனான். அப்போது அவன் ஒரு மகத்தான தலைவனாயிருந்தான். அதன்பிறகு, அவன் — அவன் — அவன் தன்னுடைய பொருட்களை வைப்பதற்காக கூடுதலான களஞ்சியங்களைக் கட்ட வேண்டியிருந்த அளவுக்கு அவன் மிகவும் செழிப்படைந்தான் என்பதை நாம் காண்கிறோம். (லூக்கா 12:16-19) பிறகு அவன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான், அவனுக்கு வயது சென்ற பிறகு, வாலிப வயதின் கவலைகளும் காரியங்களும் கடந்து போய் விட்டன, எல்லாவற்றையும் அவன் செய்து விட்டான், ஒருக்கால் மகிழ்ச்சியாக பொழுதைப் போக்கியிருப்பான்.

73. என்னைப் போன்றோ, என்னுடைய மனைவியைப் போன்றோ, உங்கள் தாய்மார்கள் மற்றும் தகப்பனைப் போன்றோ இருக்கும் ஒரு வயதான மனிதனுக்கோ அல்லது ஒரு வயதான பெண்மணிக்கோ தாங்கள் சிந்திக்கக் கூடிய எதுவும் கடினமாக இருப்பதில்லை. வாலிப பையன்கள் மற்றும் வாலிப பெண்களாகிய உங்களைப் போன்று அவர்கள் வெளியே சென்று தெருக்களில் மேலும் கீழும் ஓட விரும்புவதில்லை, அதைச் செய்ய அவர்களால் முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். உங்களுடைய மனைவி அல்லது உங்களுடைய கணவன் யாராக இருக்கப் போகிறார்கள் என்று (பார்ப்பதற்காக) வாலிப பையன்கள் மற்றும் பெண்களுடனான சந்திப்புகள், அல்லது, பாருங்கள், அவர்கள் தங்கள் சிந்தையில் அதைக் கொண்டிருப்பதில்லை. அவர்களுக்கு, அவர்களுக்கு பிள்ளைகள் உண்டு, அவர்கள் அதிலேயே ஆர்வம் காட்டுகிறார்கள். நாளை, நாளைய தினம் ஒன்று இருக்குமானால், நீங்கள் எல்லாரும் அப்படியே இருக்கப் போகிறீர்கள். புரிகிறதா?

*74. மேலும் இந்த வாலிபனைப் பாருங்கள், அதன்பிறகு, ஒருக்கால்... அவன் ஒருக்கால் விவாகம் கூட பண்ணியிருக்க மாட்டான். ஆனபோதிலும, அவன் ஒரு மகத்தான தலைவனாயிருந்தான். மேலும் அவன்... மேல் உட்கார்ந்திருந்தான்.*

*75. இன்றும் எருசலேமில் இன்னும் கூட அவர்கள் வீட்டின் மேலிருந்து (housetop) புசிக்கிறார்கள், இந்நாளிலும் சாயங்கால நேரத்தில் வெளியில் குளிர்ச்சியாயிருக்கும் போது, அவ்வாறு செய்கிறார்கள்.*

*மேலும் அவனோடு வேறொரு கதாபாத்திரம் நம் மனக்கண் முன்பாக கொண்டு வரப்படுகிறதைக் காண்கிறோம்:* **அவன்தான் ஒரு பிச்சைக்காரன்.** *(லூக்கா 16: 19-31)*

*76. அடுத்திருப்பவனைக் கனம்பண்ண வேண்டுமென்று (கற்பிக்கப்பட்டு) அவன் வளர்க்கப்பட்டிருந்தான், பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டுமென்றிருப்பதை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். பாருங்கள், கிறிஸ்துவின் அந்த அழைப்பை அவன்*

புறக்கணித்ததன் மூலமாக, இறுதியில்... அதைப் போன்று காணப்பட்ட அவ்விதமான ஒரு வீட்டில் வளர்க்கப்பட்டிருந்த ஒரு வாலிபனுடைய, பிறரைக் கனம் பண்ணுகிற குணமானது அவனை விட்டு ஒருபோதும் அகன்று போயிருக்காது. ஆனால் அது அவனை விட்டுப் போய் விட்டது. அது போய் விட்டது.

77. லாசரு என்ற பெயருடைய ஒரு மனிதன் வாசலருகே படுத்திருந்து, அவனிடம் உணவுக்காகப் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான், (ஆனால்) அதனால் பயனில்லாமல் போயிற்று. பெருக்கி போடப்பட்ட துணிக்கைகளை அவன் புசித்துக் கொண்டிருந்தான், அது அந்தப் பிச்சைக்காரனுக்குப் போடப்படுவதல்ல, ஆனால் நாய்களுக்கு போடப்படுவதைத் தான் அவன் புசித்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய் இருந்தான். ஆனால் அந்த மனிதனோ (ஐசுவரியவான்) சமுதாயத்தில் மிகவும் மெருகேற்றப்பட்டு பளபளப்பாயிருந்தான், ஆகையால் அவனுக்கு அதற்கு மேலும் எந்த பரிதாபமும்

*இல்லாதிருந்தது. அவன் உணர்வற்று விறைத்துப் போனவனாயிருந்தான், ஏனென்றால் கிறிஸ்து கொடுத்த அந்த உரிமை சலுகையை அவன் புறக்கணித்திருந்தான்.*

*78. ஒருக்கால் ஒரு சாயங்கால நேரத்தில், அருமையான ஒயின் மதுபானங்களோடு தன்னுடைய மது விருந்தை (toast) அனுபவித்துக் கொண்டிருந்திருப்பான், விலையுயர்ந்த அணிகலன்களை அணிந்திருந்த அழகான பெண்களும், அதைப் போன்ற காரியங்களும் அவனைச் சூழ இருந்தனர், அவனுடைய இருதயம் வாஞ்சித்த எல்லாவற்றைக் கொண்டும் மதுவிருந்து நடந்து கொண்டிருந்தது. அந்த பிச்சைக்காரனோ வாசலருகே படுத்துக் கொண்டிருந்தான்.*

*79.* **அடுத்த நாள் காலையில், விடியற்காலம் வருவதற்கு முன்பே, அவன் நரகத்தில் இருந்தான், லாசரு வந்து தன்னுடைய நாவில் தண்ணீர் தர வேண்டும் என்று கதறி சத்தமிட்டுக் கொண்டிருந்தான். காட்சியோ மாறி விட்டது.**

80. அவன், "தகப்பனாகிய ஆபிரகாமே" என்று கூறுவதைக் கவனியுங்கள், இப்பொழுது, **ஆபிரகாம் யூதர்களின் தகப்பன் என்பது அவனுக்கு அப்பொழுதும் ஞாபகம் இருந்தது.** அவன், "தகப்பனாகிய ஆபிரகாமே, அந்த பிச்சைக்காரனாகிய லாசருவின் விரல்களில் கொஞ்சம் தண்ணீரைக் கொண்டு வந்து, என் நாவில் வைக்கும்படி அவனை அனுப்பும். இந்த அக்கினி ஜுவாலை வேதனையாயுள்ளது" என்றான்.

81. மேலும் அவன் கூறினான்... ஆபிரகாமோ, "இது, என்னால் அதைச் செய்ய முடியாது" என்று அநேக வார்த்தைகளில் கூறினான். "இவை எல்லாவற்றையும் தவிர, உன்னுடைய ஜீவியத்தில் உனக்கு தருணமிருந்தது என்பதை பார்."

82. **அவனுக்கு எப்போது அந்த தருணம் இருந்தது? இயேசு, "என்னைப் பின்பற்றிவா" என்று கூறினபோது. ஆனால் அவன் அதைப் புறக்கணித்து விட்டான்.** அவன் பணம் சம்பாதிக்கக்கூடிய வழியில்

போய் விட்டான். அது சரிதான், பணம் சம்பாதிப்பதில் தவறொன்றுமில்லை, ஆனால் நீங்கள் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கும் போதே இயேசுவைப் பின்பற்றுங்கள். புரிகிறதா? அவனோ ஜனக்கூட்டத்தினரோடு வேறொரு வழியில் போய் விட்டான்.

*83.* அவன் கூறினான், ஆபிரகாம், "அதுவுமல்லாமல், எந்த மனிதனும் ஒருபோதும் கடந்து வரக்கூடாதபடிக்கு உனக்கும் அவனுக்குமிடையே ஒரு பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது, எந்த மனிதனும் ஒருபோதும் கடந்து வரவே மாட்டான். அங்கேயிருக்கிறவர்கள் இங்கே வர முடியாது, இங்கிருக்கிறவர்கள் அங்கேயும் போக முடியாது. அந்த பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது. எந்த மனிதனும் கடந்து வந்ததில்லை, அல்லது கடந்து வரப்போவதுமில்லை" என்று கூறினதை நீங்கள் கண்டுகொள்ளுகிறீர்கள்.

*84.* அதன்பிறகு அவனைக் கவனியுங்கள். அவன் அப்போது ஒரு சுவிசேஷகனாக இருக்க விரும்பினான். அவன் ஒரு

வாலிபனாயிருக்கையில், இயேசு தம்மைப் பின்பற்றும்படி அவனுக்கு கொடுத்திருந்த அழைப்பு, ஒரு ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என்று அவன் கொண்டிருந்த அழைப்பு அவனிடம் மீண்டும் திரும்பியது. அவன் அதை நினைவுகூர்ந்தான், அவனுக்கு ஐந்து சகோதரர்கள் மீண்டும் பூமியில் இருந்தார்கள், அவர்கள் அந்த இடத்தில் போக அவன் விரும்பவில்லை.

85. அவன், "அப்படியானால், என்னுடைய சகோதரர்களும் இந்த வழியில் வரக்கூடாது என்று கூறும்படி லாசருவைத் திரும்ப அனுப்பும்" என்றான். வேறு வார்த்தைகளில் கூறினால், "'என்னைப் பின்பற்றிவா' என்ற அழைப்பை ஏற்றுக்கொள்ளும்படி." பாருங்கள்?

ஆனால் ஆபிரகாமோ, "அவர்கள், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" என்றான்.

86. அவன், "ஆமாம், லாசருவைப் போல மரித்தோரிலிருந்து ஒருவன் உயிர்த்தெழுந்து

*திரும்பிச் சென்று அவர்களிடம் கூறினால், ஏற்றுக் கொள்வார்கள்" என்றான்.*

*87.* **நீங்கள் பாருங்கள், நாம் மரித்த பிறகும், அப்பொழுதும் நீங்கள் சுயநினைவுடையவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை அது காட்டுகிறது. அவன் அதை நினைவுகூர்ந்தான்.** *ஆபிரகாமோ, "மகனே, உன்னுடைய நாட்களில் நடந்ததை ஞாபகம் கொள்" என்றான். புரிகிறதா?* **உங்களுக்கு அப்பொழுதும் ஞாபகம் இருக்கும். நீங்கள் உங்கள் நினைவை இழந்து போவதில்லை. உங்களுக்கு ஞாபகம் இருக்கும்.**

*88.* மனிதன் கொண்டிருக்கக்கூடிய ஞாபகங்கள் அப்பொழுதும் அதேவிதமாக இருக்கும், "**என்னைப் பின்பற்றி வா**" என்று இயேசு கூறினதை அவன் கேட்டிருந்த அத்தருணத்தை அவன் நினைவுகூர்ந்தான். *ஆனால் அவனோ தவறான ஆளைப் பின்பற்றிப் போனான், தவறான கூட்டத்தைப் பின்பற்றினான்.* **அவன் தவறான கூட்டத்தில் சேர்ந்து கொண்டு, தவறான இடத்திற்குப் போய், தவறான நித்தியத்தில் முழந்து**

**போனான்;** அந்நாளில் அவன் தேவனிடமிருந்து என்றென்றுமாக நிர்மூலமாக்கப்படுவான்.

89. மேலும் இயேசு குறிப்பிடத்தக்க மகத்தான ஒரு வார்த்தையைக் கூறினார், "மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும், அவர்கள் நம்ப மாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கு மோசேயின் நியாயப்பிரமாணம் உண்டு, அவர்கள் அதற்கு செவி கொடுக்காவிட்டால், ஒருவன் மரித்தோரிலிருந்து எழுந்து போனாலும் செவி கொடுக்க மாட்டார்கள். அவர்கள் நம்ப மாட்டார்கள்" என்றார்.

90. ஏன்? ஏன்? நியாயப்பிரமாணம் அவ்விதமான ஏதோவொன்றைக் கூறினதா? ஆம். "பிறர் உங்களுக்கு எப்படி செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." (லூக்கா 6:31) அவன் நியாயப்பிரமாணத்தின் கீழாக ஜீவித்திருந்தான். ஆனால் அவனோ அந்த பிச்சைக்காரனை வாசலருகே மரித்துப்போக

விட்டு விட்டான். பாருங்கள்? அவன் — அவன் தேவனுடைய கற்பனைகளின் கீழாக ஜீவித்திருந்தான், இருப்பினும் அந்த மகத்தான நித்திய ஜீவனைக் காணத் தவறி விட்டான்.

91. வாலிப பிள்ளைகளே, நீங்கள் ஒவ்வொருவரும் என்னைப் போன்று காணப்படுகிறீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் அப்படியே என்னுடைய குமாரரையும் குமாரத்திகளையும் போன்று காணப்படுகிறீர்கள். ஒருவிதத்தில் நீங்கள் அவ்வாறு தான் இருக்கிறீர்கள், பாருங்கள், ஆவிக்குரியபிரகாரமாக பேசிக் கொண்டிருக்கிறேன். அது உண்மை. தேவனாகிய கர்த்தர் உங்கள் ஆத்துமாக்களை என்னுடைய பாதுகாப்பில் வைத்திருக்கிறார், ஏனென்றால் நீங்கள் வந்து எனக்குச் செவி கொடுக்கிறீர்கள். நீங்கள் என்னை நம்புகிறீர்கள். பாருங்கள்? ஒரு விதத்தில், நீங்கள் என்னுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாயிருக்கிறீர்கள். அது உண்மை.

92. **தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் என்பது ஒரு மகத்தான காரியம் என்பதை எப்போதுமே நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.** ஒரு நல்ல வீட்டில் வளர்க்கப்படுவது என்பது தேவனிடமிருந்து வருகிற ஒரு சுதந்தரம் (heritage). உங்களுக்கு இருப்பதைப் போன்று நற்பண்புகளுடன் கூடிய அருமையான வாலிப பிள்ளைகளாய் இருப்பதென்பது நல்லது. கல்வியைப் பெற்றுக் கொள்வதென்பது அற்புதமானது. இந்த சுதந்திரமான தேசத்தில் ஜீவிப்பது கூட அற்புதமானது தான். நாம் அநேக காரியங்களுக்காக நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

93. **ஆனால் நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளாத ஒரு காரியம் உண்டு. நீங்கள்** அதை **ஏற்றுக் கொண்டாக வேண்டும். அதுதான் நித்திய ஜீவன். இயேசுவைப் பின்பற்றுவதன் மூலமும், ஒரு மறுபடியும் பிறந்த அனுபவத்தின் மூலமும் மாத்திரமே உங்களால் அதைச் செய்ய**

**முடியும். அதைப் புறக்கணித்து விடாதீர்கள்.**

---

*இந்த செய்தி சம்பந்தமான சில வேத வசனங்கள்:*

**லூக்கா 18:18-22**

18. அப்பொழுது தலைவன் ஒருவன் அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்.

19. அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே.

20. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக, களவுசெய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே என்றார்.

21. அதற்கு அவன்: இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

22. இயேசு அதைக் கேட்டு: இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்.

## லூக்கா 12:16–19

16. அல்லாமலும், ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.

17. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே;

18. நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து,

19. பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று

தனக்குள்ளே சிந்தித்துச்
சொல்லிக்கொண்டான்.

20. தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே,
உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த
இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும்,
அப்பொழுது நீ சேகரித்தவைகள்
யாருடையதாகும் என்றார்.

21. தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல்,
தனக்காகவே பொக்கிஷங்களைச்
சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான்
என்றார்.

## லூக்கா 16:19–31

19. ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்;
அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற
வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய்
வாழ்ந்துகொண்டிருந்தான்.

20. லாசரு என்னும் பேர்கொண்ட
ஒருதரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள்
நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய
வாசலருகே கிடந்து,

21. அவனுடைய மேஜையிலிருந்து விழுந்
துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற
ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன்
பருக்களை நக்கிற்று.

22. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து,
தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே

கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான்.

23. பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்.

24. அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்.

25. அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்.

26. அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்.

27. அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு

வராதபடி, அவன் போய் அவர்களுக்குச்
சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு,

28. நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு
அனுப்பும்படி உம்மை
வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

29. ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு
மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு,
அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும்
என்றான்.

30. அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய
ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன்
அவர்களிடத்திற்குப் போனால்
மனந்திரும்புவார்கள் என்றான்.

31. அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும்
தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால்,
மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும்,
நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்.

★★★★★

ஒரு எரிகின்ற நரகம் இல்லையென்று எண்ணிக் கொள்ளாதீர்கள், ஒரு உண்மையான நரகம் உண்டு. உண்மையாகவே ஒரு பிசாசு உண்டு என்றால், ஒரு உண்மையான நரகம் உண்டு

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **எபிரெயர் நிருபத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும், பாகம் #1** - 57-09-25

237 ஆனால் ஒரு விசுவாசி, அவன் செல்லுகையில் ஒரு அவிசுவாசி உலகத்தினூடாகச் செல்வான், அவனுக்கு கவலைகளும், துயரங்களும் உண்டு; ஒரு மகிழ்ச்சியான நேரத்தை அவன் அனுபவிப்பதாகக் கூறிக் கொள்கிறான், "ஹப்பீ, ஒரு மகிழ்ச்சியான நேரத்தை அனுபவிக்கிறான்." ஸ்திரீகள், மதுபானம், மகிழ்ச்சியான பெரிய நேரம், அவன் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டேயிருப்பதாக அவன் எண்ணுகிறான்.

அவன் மரித்து, அவன் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்குள் செல்வான், அங்கே சதாகாலமும் எரிந்து கொண்டேயிருக்கப் போகிறான், ஒருக்கால்

அவனுடைய ஆத்துமா நூறு கோடி ஆண்டுகள் அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலில் வாதிக்கப்படலாம்.

238. நான்... நீங்களோ, “அது வழக்கமாக காணப்படுகிற கந்தகக் கல்லைப் போல இருக்குமா?” என்று கேட்கலாம். அது இதைப் பார்க்கிலும் கோடிக்கணக்கான மடங்கு மோசமானதாயிருக்கும் என்று நான் நினைக்கிறேன். உங்களால் அதை நெருப்பின் மூலம், இப்பொழுதுள்ள அக்கினியைக் கொண்டு விவரித்துக் கூற முடியாது என்று நான் நினைக்கிறேன்.

“அக்கினியினால்” என்று அது குறிப்பிடப்பட்டுள்ளதற்கான ஒரே காரணத்தினால், அது நமக்கிருக்கின்ற எல்லாவற்றையும் முற்றிலும் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறது என்பதாகும். அது முற்றிலும் பட்சித்து, ஒவ்வொன்றையும் அழித்து விடுகிறதையே அந்த அக்கினி செய்கிறது. ஆகையால் அது அவ்வண்ணமாய் அங்கு இருக்கும், ஆனால் ஒரு விதமாக

தண்டிக்கப்பட வேண்டிய ஒரு ஆத்துமா உங்களுக்கு உண்டு.

239 இப்பொழுது, நீங்கள் அக்கினி என்ற வார்த்தையை கவனிக்க வேண்டும், ஏனென்றால் பரிசுத்த ஆவி என்பதும், “பரிசுத்த ஆவியும் அக்கினியும்” என்றே உபயோகப்படுத்தப்படுகிறது; ஏனென்றால் பரிசுத்த ஆவி பாவத்தை எரித்துப் போடுகிறது, பாருங்கள், சுத்தமாக்குகிறது.

240 ஆனால் அக்கினி, அது நரகத்திலிருந்து வருகிறது, அது ஒரு, “அக்கினிக் கடல்” என்று கூறப்பட்டுள்ளது. அது என்னவென்றால், அது ஒரு தண்டனையோடு வாதிக்கப்படுதலாயுள்ளது. ஐஸ்வரியவான் பாதாளத்திலிருந்து தன்னுடைய கண்களை ஏறெடுத்தபோது, “லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும், ஏனென்றால் இந்த அக்கினி ஜீவாலை என்னை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறது” என்றான்.

**ஒரு எரிகின்ற நரகம் இல்லையென்று எண்ணிக் கொள்ளாதீர்கள், ஒரு உண்மையான நரகம் உண்டு. உண்மையாகவே ஒரு பிசாசு உண்டு என்றால், ஒரு உண்மையான நரகம் உண்டு.**

# தேவனுடைய பாதையைப் புறக்கணித்தால், நீங்கள் நரகத்திற்குப் போய்த் தான் ஆகவேண்டும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: நமக்காக உண்டாக்கப்பட்ட தேவனுடைய பாதை, 52-09-00

91. ஒருநாள் ஒரு சிறு பெண் வீதியினூடாக வந்து கொண்டிருந்தாள், முடிவிலே அவள், "ஓ, அல்லேலூயா, அல்லேலூயா" அவள் அப்பொழுதுதான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டாள்.

92. அங்கே எங்கேயோ ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த ஒரு நாத்திகன், "நீ என்னத்தைக் குறித்து அவ்வளவு சந்தோஷமாக இருக்கிறாய், வாலிபப் பெண்ணே" என்றான்.

அவள், "ஓ, இயேசுவானவர் இப்பொழுதுதான் என்னை இரட்சித்து, பரிசுத்த ஆவியினால் நிறைத்தார், நான் அவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறேன்" என்றாள்.

93. அவன், "இங்கே பார் உன்னுடைய கரத்திலிருக்கிறது என்ன?" என்றான்,

அவள், “என்னுடைய வேதாகமம்” என்றாள்.

“நீ அதை விசுவாசிக்கிறாயா?” என்றான்.

அவள், “நிச்சயமாக“ என்றாள்.

அவன், “அது எல்லாவற்றையும் நீ விசுவாசிக்கிறாயா” என்றான்?

94. “அது எல்லாவற்றையும்” என்றாள்.

“யோனாவின் அந்தக் கதையை நீ விசுவாசிக்கிறாயா” என்றான்.

அவள் “ஆம்” என்றாள்.

95. அவன், “உண்மையாகவே ஒரு திமிங்கலம் அவனை விழுங்கி விட்டது என்பதை நீ விசுவாசிக்கிறாயா” என்றான்.

அவள், “ஆம் ஐயா நான் அதை விசுவாசிக்கிறேன்” என்றாள்.

96. “விசுவாசத்தைத் தவிர்த்து வேறு எந்தவிதத்திலாவது உன்னால் அதை நிரூபிக்க முடியுமா?” என்றான்.

97. “நல்லது, நான் பரலோகத்திற்குப் போகும் போது நான் சகோதரன் யோனாவை அந்தக் கேள்வியை கேட்பேன்” என்றாள்.

98. அந்த நாத்திகன் அவளிடத்தில், “சகோதரன் யோனா பரலோகத்தில் இல்லாமல் போனால் என்ன செய்வாய்” என்றான்.

அதற்கு, “அப்படியானால் நீர்தான் அவரைக் கேட்க வேண்டும்” என்றாள். அல்லேலூயா! அவனுக்கு ஒரு இடம்தான் விடப்பட்டிருக்கிறது, அது நரகம்.

99. தேவனுடைய பாதையைப் புறக்கணித்தால் நீங்கள் நரகத்திற்குப் போய்த் தான் ஆகவேண்டும். நீங்கள் போகத்தான் வேண்டும். அதுதான் ஒரேயொரு இன்னொரு வழி.

எனவே நீங்கள் ஒரு வழியிலோ அல்லது அடுத்த வழியிலோ இருக்கிறீர்கள் ஆமென் எல்லாம் சரியே.

# சகோ. பிரான்ஹாம் நரகத்தைக் குறித்து கண்ட தரிசனம்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **இனி வரப்போகும் காரியங்கள்,** டிசம்பர் 5, 1965, ரியால்டோ, கலிபோர்னியா, அமெரிக்கா

130. நான் சிறுவனாயிருந்தபோது, நரகத்தைக்குறித்த ஒரு தரிசனம் கண்டேன். உங்களுக்குத் தெரியும், இன்றைய சீமாட்டிகள் (ஸ்திரீகள், நற்பண்பு கொண்ட சீமாட்டிகள் அப்படி செய்ய மாட்டார்கள்) எப்படி தங்கள் கண்களை ஓநாய்களின் கண்கள் போல் வர்ணம் தீட்டிக் கொள்கின்றனர் என்று. அவர்கள் கண்களின் கீழ் நீல நிறமுள்ள அந்த பொருள். அதை நான் கண்டேன். என் உயிர் போய்க் கொண்டிருந்தது. நான் சிறுவனாயிருந்த போது துப்பாக்கியால் சுடப்பட்டு, மருத்துவமனையில் மரணத்தருவாயில் இருந்தேன். தேவன்

இருக்கிறாரென்று நான் எப்பொழுதும் அறிந்திருந்தேன்.

நான் ஜெபிக்க முயன்ற என் முதல் ஜெபம் என் நினைவுக்கு வருகிறது. என்னால் கூற முடிந்த ஒன்றே ஒன்று. இதை நான் முன்பு கூறினதில்லை. இப்பொழுது கூற ஏவப்படுகிறேன். நான் சுடப்பட்டு வயலில் மரணத் தருவாயில் கிடந்திருந்தேன். நான் தேவனிடம் செய்த ஒரே ஜெபம், "கர்த்தாவே, நான் விபச்சாரம் செய்யவில்லையென்று உமக்குத் தெரியும்" என்பதே. பாருங்கள்? பதினைந்து வயது சிறுவனாக, நான் நேர்மையாக நடக்க முயன்றேன். "நான் சுத்தமான வாழ்க்கை வாழ்ந்து வந்திருக்கிறேன்" என்று மாத்திரமே என்னால் கூற முடிந்தது. அந்த தகுதியை மாத்திரமே என்னால் அவருக்களிக்க முடிந்தது.

131. அங்கு படுத்திருந்தபோது... மருத்துவர் என்னை விட்டு நடந்து சென்று விட்டார். நான் அந்தகார நித்தியத்துக்குள் அமிழ்ந்து போவதைப் போல் உணர்ந்தேன். நான் அப்பாவுக்காக கதறி, "ஓ, அப்பா,

எனக்குதவி செய்யும்" என்றேன். அங்கு அப்பா இல்லை. "அம்மா எனக்குதவி செய்யும்" அங்கு அம்மா இல்லை. "தேவனே, எனக்குதவி செய்யும்" அங்கு தேவன் இல்லை.

அது முடிவற்ற, பயங்கரமான, ஓ, திகில் மூட்டும் காட்சி. எரிந்து கொண்டிருக்கும் அக்கினி ஜுவாலை நரகத்தை அதற்கு அருகில் வைத்துப் பார்த்தால் அந்த அக்கினி நரகமே சுகமான ஒன்றாக இருக்கும். அதிலிருந்து விலகியிருப்பதென்பது மிக்க மகிழ்ச்சி அளிக்கும். அந்த காட்சியை கண்ட போது. "ஓ, என்னே!" என்று நினைத்தேன். அங்கு ஓரிடத்தை நான் அடைந்தேன்–புகை, இருள், வியாதி; ஓ அப்படிப்பட்ட ஒரு உணர்ச்சி. அது என்மேல் மரணமாயிருந்தது.

அந்த பெண்கள் இப்படி வர்ணம் தீட்டிய கண்களுடன் என்னிடம் வருவதை நான் கண்டேன். அது நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. எப்படியும் நாற்பது ஆண்டுகள் இருக்கும். அந்த பெண்கள் இப்படி ஊ... ஊ... ஊ... என்று சத்தமிட்டு சென்றனர். "நான்

என்றென்றைக்கும் இங்கு இருக்கவேண்டுமா?” என்று கேட்டேன்.

“என்றென்றைக்கும்”

132. அப்பொழுது நான், “ஓ, தேவனே, இங்கிருந்து வெளியே செல்ல என்னை அனுமதிப்பீரானால், நான் உம்மைக் குறித்து இனி வெட்கப்படவே மாட்டேன். நான் வெட்கப்படவேமாட்டேன். தேவனே, தயவு கூர்ந்து எனக்கு ஒரு தருணம் அளிப்பீராக” என்றேன்.

முதலாவதாக என்ன நேர்ந்ததென்றால் நான் மேலே வருவதைப்போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. மருத்துவருக்கு அது அதிசயமாயிருந்தது. ஏனெனில் என் இருதயம் ஒரு நிமிடத்துக்கு பதினேழுமுறை மாத்திரம் துடித்துக் கொண்டிருந்தது. என் இரத்தம் எல்லாம் உடலிலிருந்து வெளியேறியிருந்தது. நான் என் இரத்தத்தில் படுத்துக்கொண்டிருந்தேன். என்றாகிலும் ஒரு நாள் பெண்கள் இவ்வாறு வர்ணம் தீட்டிக் கொள்ளுதல் நிகழும் என்று எண்ணினேன்.

133. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நான் டூசானில் குடியேறிய போது, என் மனைவியுடன் நான் ஜே.சி. பென்னி அங்காடிக்கு சென்றிருந்தேன். நான் தலைகுனிந்த வண்ணம் அங்கு உட்கார்ந்து கொண்டு என் மனைவிக்காக காத்திருந்தேன். ஸ்திரீகள் கடைக்குச் சென்று வாங்கினால் எவ்வளவு நேரம் எடுப்பார்களென்று உங்களுக்குத் தெரியும். நான் தலை குனிந்த வண்ணம் இப்படி உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது தானாகவே இயங்கும் படிக்கட்டு (escalator) மேலே வந்து கொண்டிருந்தது. அதில் சில பெண்கள் “வாட்டர் ஹெட்” தலைமயிர் அலங்காரத்துடனும், கண்களில் இப்படி வர்ணம் தீட்டிக்கொண்டும் வந்து கொண்டிருந் தனர். அவர்கள் ஸ்பானிய மொழி பேசினர். அது – அது... அதெல்லாம்... அந்த தரிசனம் மறுபடியும் உண்டானது. அது அங்கிருந்தது *(“<u>ஊ</u>... <u>ஊ</u>...”)*

134. சகோதரனே, சகோதரியே, உங்களிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

இப்பொழுது இது உங்களுக்கு கோமாளித்தனமாகத் தென்படக்கூடும். **ஆனால் நீங்கள் அங்கு ஒருமுறை செல்வீர்களானால், அது ஆபத்தானது என்பதை அறிந்து கொள்வீர்கள்.** அந்த வழியில் ஒருக்காலும் செல்லாதீர்கள்.

135. நான் வயதான ஒரு போதகர், நான் உலகம் முழுவதும் பிரசங்கித்திருக்கிறேன். எனக்கு லட்சக்கணக்கான நண்பர்கள் உண்டு. நான் மறுகரையில் உங்களோடு நிற்கவேண்டுமென்பதை அறிந்திருக்கிறேன். **உலகத்தின் காரியங்களிலிருந்து விலகுங்கள். இப்பொழுது நீங்கள் நடந்து கொள்ளும் விதமாகவே நடந்து கொள்ள வேண்டுமெனும் விருப்பம் உங்களுக்குள் இருந்தால், உலகத்தின் காரியங்கள் உங்களில் இருக்கிறது. அப்படியானால் நீங்கள் தேவனுடையவர்கள் அல்ல. நீங்கள் ஒரு சபை அங்கத்தினர் மாத்திரமே.**

★★★★★

தேவனைத் தடுத்து நிறுத்துவது இரத்தம் மாத்திரமே. தேவன் ஒரே ஒரு இரத்தத்தைப் பார்த்தால்தான் நியாயத்தீர்ப்புக்கு கை நீட்டாமல் நிற்பார், அது அவருடைய சொந்தக் குமாரனின் இரத்தமே

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும்,** ஜனவரி 8, 1961, இந்தியானா, அமெரிக்கா

89. இங்கே இந்த மூப்பர்கள் சிங்காசனங்களின் மேல் தங்கள் தலையில் கிரீடமணிந்தவர்களாய் வீற்றிருக்கிறார்கள். 5ம் வசனத்திலிருந்து நாம் ஆரம்பிக்கப் போகிறோம்.

"**அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன**".

*வெளி. 4:5*

90. ஓ, நான் இதை நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கவில்லையா? எனது மேற்சட்டை எனக்கு பொருத்தமாக இருப்பது போல் உணருகிறேன். நான் ஆவிக்குரிய மேற்சட்டையைக் குறித்துக் கூறுகிறேன். நீங்கள் அதை அறிவீர்கள்.

91. 'சிங்காசனத்திலிருந்து இப்பொழுது நாம் இந்த சிங்காசனத்தைக் குறித்து சில நிமிடங்கள் பேசுவோமாக. இது இரக்கத்தின் சிங்காசனமல்ல; இரக்கத்தின் சிங்காசனத்தின் வேளை முடிந்துவிட்டது. இனிமேல் இரக்கம் இல்லை. அச்சிங்காசனத்தில் இரக்கம் இல்லை. நாம் என்ன செய்ய போகிறோம்.... நியாயாசனம் எவ்வாறு கிறிஸ்துவின் நியாயாசனமாக ஆகப்போகிறது? எவ்வாறு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு ஆசனமாக ஆகப் போகிறது? **அப்பொழுது அதில் இரக்கம் இருக்குமா? அங்கே ஒரு துளி இரக்கமும் இருக்கப்போவதில்லை. நியாயாசனத் தண்டையில் நீங்கள் இரக்கம் வேண்டும் என்று கதறும் போது, இனிமேல் கதறவே முடியாது என்ற**

**அளவுக்கு கதறின போதிலும் அங்கே கொஞ்சம்கூட இரக்கம் இராது போய்விடும். நீங்கள் ஆகாயத்தில் கத்தித் தீருமட்டும் கதறுவீர்கள், ஏனெனில் அங்கே இரக்கமே இராதுபோகும்.**

92. **இப்பொழுதே இரக்கத்தின் நாள் உள்ளது.** இப்பொழுது நாம் பழைய ஏற்பாட்டில் சிறிது திரும்பிப்போய், இரக்கமானது என்ன என்பதை நாம் அங்கே காண்போம். திரும்பிப்போய், இந்த சிங்காசனத்திற்கு என்ன நேர்ந்தது என்பதைப் பார்ப்போம். இந்த சிங்காசனம் உண்மையிலேயே நியாயத்தீர்ப்பு ஆசனம்தான். இன்றைக்கு இரக்கம் இருப்பதின் காரணம் என்னவெனில், பாவப்பிராயச்சித்த இரத்தத்தால் கிருபாசனமானது தெளிக்கப்பட்டிருக்கிறது. நியாயாசனத்தின் மீது அந்த இரக்கமானது இருக்கிற வரையிலும் அது நியாயாசனமாக விளங்காது, அது இரக்காசனமாகவே இருக்கிறது. ஏனெனில் நியாயத்தீர்ப்பினின்று காக்கும்படி ஒருவர் மரித்திருக்கிறார். அதை

நீங்கள் கண்டுணர்ந்தீர்களெனில், 'ஆமென்" என்று சொல்லுங்கள். (சபையார் 'ஆமென்" என்று கூறுகிறார்கள் – ஆசி). கிருபாசனத்தின் மீது இரத்தமானது காணப்படுகிற வரையிலும், நியாயத்தீர்ப்பை தடுத்து நிறுத்துவதற்காக ஒருவர் மரித்துள்ளார் என்பதை அது காட்டுகிறது. ஆனால் சபையானது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் பொழுது, கிருபாசமானது நியாயாசனமாக ஆகிவிடுகிறது.

93. இங்கே புதிய ஏற்பாட்டிலுங்கூட, பரிசுத்த ஸ்தலத்தில் நியாயாதிபதி தன் ஆசனத்தில் வீற்றிருக்கிறார். பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் அந்த நியாயாசனம் முழுவதும் புகையால் நிறைந்தது. அது என்னவாயிருக்கிறது? சீனாய் பர்வதத்தில் இருந்த நியாயத்தீர்ப்பு ஆசனத்தைப்போல் அது உள்ளது. தேவனுடைய சிங்காசனத்தைவிட்டு இரக்கமானது அகன்றுவிட்டது. **இரக்கமில்லாமல் தேவன் உலகை நியாயந்தீர்ப்பார். அதை எத்தனை பேர்கள் அறிவீர்கள்?**

94. **அந்நாளில் அவர் அங்கீகரிக்கும் காரியம் ஒன்றேயொன்று தான் உண்டு. அது என்ன? அதுதான் இரத்தம். கோபமுள்ள தேவனை சாந்தப்படுத்துவது இரத்தம் ஒன்றுதான்.**

95. ஆதாமும் ஏவாளும் தங்கள் நிர்வாணத்தை மூடிட, எந்தவொரு மெதோடிஸ்ட்டும், பாப்டிஸ்ட்டும், ப்ரெஸ்பிடேரியனும் அல்லது பெந்தெகொஸ்தேகாரரும் செய்ய முடிந்திருக்கிற அளவுக்கு, ஒரு ஆடையைத் தயாரித்தார்கள். ஆனால் பார்க்கக் கூடாதபடி தேவனுடைய பார்வையை அவ்வாடை மறைக்க முடியாது. எனவே, அவர் ஒரு மிருகத்தைக்கொன்று, இறந்து போன மிருகத்தின் தோலை எடுத்து அவர்களுக்கு மூடுவித்தார். **இரத்தமானது அந்த ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அதுவே அவருடைய கோபத்தை தடுத்து நிறுத்தியது. ஏனெனில் ஒன்று தனது ஜீவனை கொடுத்திருக்கிறது.** ஓ தேவனே!

96. அதைப்பற்றி எண்ணிப் பாருங்கள்! தேவனைத் தடுத்து நிறுத்துவது இரத்தம் மாத்திரமே. தேவன் ஒரே ஒரு இரத்தத்தைப் பார்த்தால்தான் நியாயத்தீர்ப்புக்கு கை நீட்டாமல் நிற்பார், அது அவருடைய சொந்தக் குமாரனின் இரத்தமே. **அது அவருடைய சொந்த குமாரனின் இரத்தம்தான் என்பதை அவர் காண்கிற பொழுது, நியாயந்தீர்க்க முன்வரமாட்டார். ஏனெனில் தேவன் தமது குமாரனுக்கு அளித்த ஈவாகும் அது;** தாம் உலகத்தோற்ற முன் தெரிந்து கொண்டவர்களை மீட்பதற்காக அவருக்கு அவர் அளித்த ஈவாகும். அதுவே தேவனை நியாயாசனத்தில் இருந்து திரும்பக் கொண்டுவருகிறது. ஆனால் அந்த இரத்தமானது நீக்கப்பட்ட பிறகு, முன்னறிந்துகொள்ளப்பட்டவர்கள் யாவரும் விலையேறப்பெற்ற அவருடைய சரீரத்தினுள் வந்து சேர்ந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டு, அவருடைய சபையானது ஆயத்தப்பட்டு, எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு,

அப்பொழுது ஜனங்களின் மேல் தேவனுடைய கோபாக்கினையானது வருகிறது.

97. **ஒருபோதும் அவ்விடத்தில் நிற்க விரும்பாதீர்கள்.** ஓ, சகோதரனே! நான் ஒரு இயந்திரத் துப்பாக்கி முன் நின்று, நான் துண்டு துண்டாக சுட்டுக்கொல்லப்பட்டாலும் பரவாயில்லை; நான் அங்குலம் அங்குலமாக அறுக்கப்படட்டும், பரவாயில்லை; எனக்கு என்ன வேண்டுமானாலும் சம்பவிக்கட்டும். கொலம்பஸ் துறவிகளின் சபதத்தைப்போல் .... (நைட்ஸ் ஆஃப் கொலம்பஸ் Knighs of Columbus என்பது, ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தில் 1882ம் ஆண்டில் துவக்கப்பட்ட ஒரு சர்வதேச சங்கமாகும் இது – மொழிபெயர்ப்பாளர்). அவர்கள் எனது வயிற்றை அறுத்து திறந்து என்னிலுள்ள கந்தகம் மற்றும் இன்னபிற இரசாயனங்களை யெல்லாம் சுட்டெரிக்கட்டும், எனது கரங்களும், கைகளும் துண்டாக்கப்படட்டும், எனக்கு என்ன நேரிட்டாலும் சரி, **ஆனால் ஒருபோதும் தேவனுக்கு முன்பாக அந்த வெள்ளை**

**சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நான் நிற்கவே வேண்டாம்.**

98. ஓ, நான் இந்த சிறிய சிங்காசனத்தை கிறிஸ்துவின் ஆசனத்தண்டையில் எடுத்துக்கொண்டு போய், அவரது இரத்தத்தை ஏற்றுக்கொள்ளட்டும். கர்த்தாவே, நான் என் கையில் வேறெதுவும் என்னுடன் கொண்டுவரவில்லை. இயேசுவின் இரத்த ஊற்றைத்தவிர (நான் அறிந்ததெல்லாம் அதைப்பற்றி மாத்திரமே) வேறே ஊற்றை நான் அறியேன், இதுவே எனது நம்பிக்கையும் ஆதரவும் இயேசுவின் இரத்தம் அன்றி வேறெ நம்பிக்கை இல்லை.

99. எட்டி ப்ளூயிட் இவ்வாறு எழுதியதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. அவர் ஒரு கிறிஸ்தவனாக இருந்தபோது, ஊக்கமான கிறிஸ்தவனாக இருந்தபோது, அவரது பாடல்களில் வாங்கிக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. "ஒருநாள் நான் ஒன்றை இயற்றுவேன், அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள்" என்று கூறினார். மக்கள் பக்திப் பாடல்களை இன்னும் கூடுதலாக

நவீனமான ஒன்றை விரும்பிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாளிலே ஆவியானவர் அவரை ஆட்கொண்டபோது, அவர் எழுதுகோலை எடுத்து பின்வருமாறு எழுதினார்.

எல்லாருக்கும் மா உன்னதர் கர்த்தாதி கர்த்தரே மெய்யான தேவ மனிதன் நீர் வாழ்க – இயேசுவே! நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான் வேறஸ்திபாரம் மணல்தான்.

வேறஸ்திபாரம் மணல்தான்.

100. சபையானாலும், நண்பனானாலும், சத்துருவானாலும், தேசமானாலும், ஐசுவரியங்களானாலும், வறுமையானாலும், நன்மையானாலும், அது என்னவாயிருந்தபோதிலும், வேறெந்த அஸ்திபாரமும் சரியும் மணல்தான். அவை யாவும் ஒழிந்துபோக வேண்டியது தான். அதுதான் நடக்கும். ஆனால்: நான் நிற்கும் உறுதியான பாறை கிறிஸ்துதான் வேறெந்த அஸ்திபாரமும் சொரி மணல்தான் (அதை நினைவில் கொள்ளுவீர்)

# நீ மனிதரை வஞ்சிக்கிறவன்





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **ஊதாரி**, ஆகஸ்டு 27, 1950, கிளீவ்லாண்ட், ஓகியோ, அமெரிக்கா

**என் அன்பான நண்பரே, நீங்கள் இந்த சரீரம் மற்றும் இந்த ஜீவியத்தின் கடைசி மூச்சு காற்றிடத்தில் வரும்போது, அந்த மனிதனால் உண்டாக்கப்பட்ட கோட்பாடுகள் நிலை நிற்கமாட்டாது என்பதை நீங்கள் கண்டுக்கொள்வீர்கள். அந்த காரியங் களைக் கொண்டு ஜீவிப்பது நல்லதுதான், ஆனால் அவைகளைக் கொண்டு நீங்கள் மரிக்க முடியாது...**

நான் யூகிக்கிறேன், என்னுடைய இந்த வயதில், இந்த ஊழியத்தில், என் வயதை உடையவர்கள் - மரித்துக் கொண்டிருக்கின்ற அநேக ஜனங்களின் அருகில் நான் அனேகமாக, இருந்திருக்கிறேன், ஏனென்றால் மரித்துக் கொண்டிருக்கிறவர்களுக்காக நான் மிகவும் அதிகமாக அழைக்கப்பட்டிருக்கிறேன்.

13. சில நாட்களுக்கு முன்னர், எங்களுடைய பட்டணத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட வாலிப ஸ்திரீ பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தை பெற்றிருந்தாள். அவள் கூடாரத்திற்கு வருவாள். பட்டணத்திலுள்ள வேறொரு வாலிபப்பெண் மிகவும் பிரபலமான வளாய் இருந்தாள். அவள் (இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தையும், பாதுகாப்பையும் மறுதலித்த, நவீன மாதிரியான மதக்குழுவை சேர்ந்தவர்களாய் இருந்தாள். மேலும் எங்களை, ஒரு வழக்கத்திற்கு மாறான மதநம்பிக்கை உடையவர்கள் என்றும் ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள் என்றும் கூறினர். ஏனெனில் நாங்கள் கிறிஸ்துவினுடைய இரட்சிக்கும் கிருபையில் விசுவாசம் கொண்டிருந்தோம்.

ஒரு பரிசுத்த உருளையாய் இருப்பதற்கு அதுவே அவசியமாய் இருக்குமானால், பின்பு நான் அவர்களில் ஒருவனாயிருக்கிறேன். (காரணம்) நான் இரத்தத்தில் விசுவாசம் வைத்திருக்கிறேன்.

இந்த வாலிப ஸ்திரீ நடனங்களுக்கும் கேளிக்கைகளுக்கும் போனாள், ஆனால் அவள் சபையில் ஞாயிறு பள்ளி ஆசிரியையாய் இருந்தாள். சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தை மறுதலித்து, அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது என்று கூறினது. அது 1900 வருடங்களுக்கு முன்பே உலர்ந்து போய்விட்டது

என்று மேய்ப்பர் சொன்னார்: ஒரு சமூக சுவிசேஷம். போகப்போக இந்த அழகான தோற்றம் கொண்ட சிறு பெண் சில வாலிப பையன்களுடன் வெளியே சென்றாள்.

இந்த மற்ற சிறு பெண்ணோ மேலே கூடாரத்திற்கு வருவாள். அவள் பழைமை நாகரீகமான வஸ்திரங்களை உடுத்தினாள். அவள் தன்னுடைய மயிரை அப்படியே எவ்வளவு முடியுமோ அவ்வளவு இருக்கமாக சீவி, நீங்கள் அழைக்கிற இந்த ஒப்பனை அலங்காரம் எதுவும் அவளுடைய முகத்தில் கொண்டிருக்காமல் அல்லது அவர்கள் உடுத்துகிற அப்படிப்பட்ட காரியம் ஒன்றும் அவள் உடுத்தாமல் தெருவில் இறங்கி செல்வது வழக்கம். அவள் தெருவில் இறங்கி போவாள்.

ஆம், அது உண்மையே; நாம் அதற்கு விரோதமாக போதிக்கிறோம். சுவிசேஷத்திற்கு முக்கிய கவனத்தைக் கொடுக்கும்படிக்கு தேவன் போதகர்களுக்கு உதவி புரிவாராக. சீமாட்டிகளே கவனியுங்கள், ஒரு மனிதனை சந்திக்கும்படி தனக்குத்தானே வர்ணம் தீட்டிக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீ எப்பொழுதாவது வேதத்தில் இருப்பாளா னால், அது ஒரு ஸ்திரீ மாத்திமே, அதுதான் யேசபேல்; தேவன் அவளை நாய்களுக்கு

உணவாக்கினார். எனவே அவர்கள் வர்ணம் தீட்டிக்கொண்டிருப்பதை நீங்கள் காணும்போது, "எப்படி இருக்கிறீர்கள், செல்வி நாய்க்கறியே?" என்று கூறுங்கள். அது மிகவும் சரியே: தேவன் அவளை நாய்களுக்கு இரையாக்கினார். நீங்கள் அவளைப் போல இருக்க விரும்புவதில்லை.

எவ்வளவு அழகாக இருக்க வேண்டுமோ அவ்வளவு அழகாக தேவன் உங்களுடைய வழிகளிலே உங்களை அழகுள்ளவர்களாக்குவார். ஆனால் இன்னும் நம்முடைய பரிசுத்த சபையானது அப்படிப்பட்டதான காரியங்களை விட்டுக் கொடுக்கிறது. அது உண்மை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் மறுபடியும் உங்களை வெட்டி சரிப்படுத்தும் அந்த பழைய வரிசையில் திரும்பி வந்து, சுவிசேஷத்திற்கு திரும்பி வருவது நல்லது.

14. இப்பொழுது கவனியுங்கள். இந்த வாலிபப்பெண், அவள் அப்படியே தன் ஒவ்வொரு வழியிலும் செய்துக் கொண்டிருந்தாள், நடனங்களுக்கும், விருந்துகளுக்கும் மற்றவைகளுக்கும் வெளியே சென்றாள். அவள் வியாதியால் தாக்கப்பட்டாள். காரியம் என்னவென்று அவள் புரிந்துக் கொள்ளவில்லை. ஆனால் மருத்துவர் அவளிடம் வந்தபோது,

அவள் ஒரு பால்வினை நோயை கொண்டிருந்தாள். அவளுடைய நிலைமை மிகவும் மோசமாயிருந்தது. கொஞ்சம் முயற்சித்துப் பார்த்தார்கள், ஆனால் அது கிரியை செய்யவில்லை.

இந்நிலையில் அவள் நேராக பரலோகத்திற்கு போவாள் என்றும், ஏனெனில் அவள் ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியையாய் இருந்தாள் என்றும் மேய்ப்பர் அவளிடம் கூறினார். எனவே அவர்கள் அனைவரும் அவள் போவதையும், கர்த்தருடைய தூதர்கள் அவளை அழைத்துச் செல்ல வருவதை யும் காண அறைக்குள் கூடிவந்திருந்தனர்.

அதற்கு சிறிது நேரத்திற்கு முன்பாக நான் அப்படியே தெருவில் கடந்து சென்றேன். மேய்ப்பர் வீட்டின் கூடத்தில் உட்கார்ந்திருந்தார், அழகான பெரிய வீடு, அருமையான ஜனங்கள். அவர் அப்பொழுதுதான் அறையை விட்டு வெளியே வந்திருந்தார். ஞாயிறு பள்ளி வகுப்பார் அனைவரும் அவள் பரலோகத்திற்கு போவதை காணும்படி உள்ளே பாடல்களை பாடிக் கொண்ருந்தனர். மேய்ப்பர் புகை பிடிக்கும்படி நடந்து வெளியே கூடத்திற்கு வந்தார். மரணம் அப்பெண்ணை தாக்கியபோது, அவள் மரண பீதியில் அலறத் தொடங்கினாள், அவள், “அந்த பெண் எங்கே?” என்றாள்.

அவர்கள், “எந்தப் பெண்?” என்றனர். அவள், “உன்னுடைய வகுப்பார் எல்லாரும் இங்கே உள்ளனரே” என்றாள்.

அவளோ, “நான் அவர்களை குறித்து பேசிக் கொண்டிருக்கவில்லை. என்னுடைய ஆத்துமாவை குறித்து என்னிடம் வழக்கமாக பேசுகிற, அவளுடைய பெயரைச் சொல்லி, அங்கே மேலேயுள்ள அந்த கூடாரத்தைச் சேர்ந்த அந்த பெண்ணைக் குறித்து தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்” என்றாள். “போய் அவளை அழைத்து வாருங்கள்” என்று சொன்னாள்.

15. அவர்கள் மேய்ப்பரிடம் சென்றனர், அவர் உள்ளே ஓடி வந்தார். அவர், “இப்பொழுது, தேனே கவனி, நாங்கள் மருத்துவரை அழைக்கிறோம். அவர் உனக்கு ஊசி போடுவார். நீ சிறிது பதற்றமடைந்துள்ளாய்” என்றார்.

அவள், “நான் பதற்றமடையவில்லை. **நீ மனிதரை வஞ்சிக்கிறவன்.** நான் இழக்கப்பட்டு நரகத்தை நோக்கி போய்க் கொண்டிருக்கிறேன், ஏனெனில் நீ எனக்கு அவ்வாறு தான் போதித்தாய்” என்றாள். அந்த பெண் இழக்கப்பட்டவளாய், எது சரியானதென்று

அவளிடம் கூற முயற்சித்துக் கொண்டிருந்த மற்ற பெண்ணிற்காக அலறிக் கொண்டே மரித்து, தேவனைச் சந்திக்கச் சென்று விட்டாள்.

**பார் சகோதரனே, இந்த வாழ்க்கை பயணத்தின் முடிவிற்கு நீ வரும்போது, நீ தேவனுக்கு முன்பாக ஒரு பரிசுத்தமான, சுத்தமான ஒரு ஜீவியம் ஜீவித்திருக்க வேண்டுமென்று நீ விரும்புவாய். அதை ஞாபகத்தில் வைத்திருப்பதில் நிச்சயமாயிருங்கள்.**

இப்பொழுது, உங்களுடைய சபையைக் குறித்து - நீங்கள் எந்த சபையை சேர்ந்தவர்களாய் இருந்தாலும், தேவனுக்கு அது காரியமல்ல. உங்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதுதான் காரியம். அது சரியே. நீங்கள் எந்த சபையை சேர்ந்தவர்கள் என்று தேவன் உங்களிடம் கேட்கப் போவதில்லை; உங்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதைத்தான் தேவன் பார்க்கப்போகிறார்.

# ஜனங்களே! மனந்திரும்புங்கள், உங்களுக்கு சமயமிருக்கும்போதே, இப்பொழுதே ஒப்புரவாகுங்கள்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **பத்மு தீவு தரிசனம்,** டிசம்பர் 4, 1960, இந்தியானா, அமெரிக்கா

210. இப்பொழுது, பாதை விலகிச் செல்கிற வறிய ஆத்துமாவே, அப்பெருவெள்ளத்திற்குள் அலைந்து செல்கிற ஆத்துமாவே, ஜாக்கிரதையாயிரு. அப்பொழுது உன்னை இரட்சிக்க ஒன்றுமில்லை என்பதை நீ அறிய வரும்போது அது மிகவும் பயங்கரமாயிருக்கப் போகிறது. அப்பொழுது நீ இரட்சிக்கப்பட முடியாது, உனக்கு முன்பாக உன்னுடைய அழிவானது இருக்கிறது என்பதை நீ அப்பொழுது அறிவாய். அதை நீ அறிந்த சில நிமிடங்களுக்குள்ளாகவே, "அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று, பிசாசுக்காகவும், அவனது தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய அக்கினிக்குள் போய் மாளுங்கள்" என்ற சப்தமானது கேட்கும். இந்த மகத்தானதை விட்டு விலகிச் செல்வதால்,

அந்நாளில், நீங்கள் இவ்விதமான அநேகக் கூட்டங்களின் சப்தங்களையெல்லாம் ஒருசேர பெரிய நீர்வீழ்ச்சியின் பெருவெள்ளத்து இரைச்சலைப் போல் கேட்பீர்கள்.

**ஓ, எவ்வளவு பயங்கரமானதாக அது இருக்கப்போகிறது! அது திகில் சூழ்ந்ததாக இருக்கப் போகிறது. அவ்வாறு உங்களுக்கு சம்பவிக்க இடம் கொடுக்க வேண்டாம், ஜனங்களே! மனந்திரும்புங்கள், உங்களுக்கு சமயமிருக்கும்போதே, இப்பொழுதே ஒப்புரவாகுங்கள்.**

211. நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். எப்பொழுதும் பசுமையாயிருக்கும் மரத்தின் கீழ் அமர்ந்து, சலசலவென அமைதியாக ஓடிவரும் நீரோடையின் இனிய ஓசையைவிட கேட்பதற்கு இனிமையானது வேறென்ன உண்டு, நங்கூரமிட்ட ஒரு மனிதனுக்கு? அது தேவனுடைய சப்தத்தோடு உன்னதங்களில் வீற்றிருக்கும் அந்த சபைதான், அது அவ்வாறு இனிமையாக அவர்களோடு

பேசுகிறதாயிருக்கிறது, அது என்னவென்று கண்டீர்களா?

**அது பாவிக்கு ஆக்கினையாகவும், இரட்சிக்கப்படுகிறவருக்கு ஆசீர்வாதமாகவும் உள்ளது. கிறிஸ்து இயேசுவாகிய கன்மலையிலே பாதுகாப்பாக தன் படகை நங்கூரமிட்டுக் கொண்டவன் அமர்ந்து செவி கொடுக்கிறான், அவன் இளைப்பாறுகிறான். அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசியுங்கள்.**

*Only believe, Only believe*
*All things are possible,*
*Only believe.*




சகோ. பினேகாஸ்

போன்: 8838623242, 9551855108

Email: jebakumarsa@gmail.com

www.thefinish.in